கல்கி

தீபாவளி சிறப்பிதழ்



KALKI 5.11.1972 45 காசு



Dig the new Century X-citement

Join the new X-citement ! Like wear up a Century Saree with new flair. Like turn a saree into a kaftan; a kurta; a lungi. Try the Century range from Anuradha, Vinodini, two x two Monica... **You'd never believe they're cotton !**

THE CENTURY SPG. & MFG. CO. LTD., WORLI, BOMBAY-25 DD.

Century—for 100% cotton textiles

Adroit/CM/272B


மலரிதழ் மிருது வதனம்!
மனமகிழ் சந்தன மணம்!
"GOKUL"
SANTOL
மகிழ்ச்சி தருவது
கோகுல்
சந்தன முகப் பவுடர்
தயாரிப்பாளர்: டி. எஸ். ஆர் & கம்பெனி, சென்னை

கருணாநிதி-எம். ஜி. ஆர்.

மனவேற்றுமை

ஏராளமான கலர் படங்கள்

□

முதல்வர் கருணாநிதி
எம். ஜி. ஆர். மற்றும்
பிரபல தலைவர்களுடன்
பிரத்தியேகமான பேட்டி

அண்ணா தி. மு. க. கட்சி
துவக்கம்

□

The Illustrated Weekly of India

NOVEMBER 19, 1972

உங்கள் பிரதிக்கு முந்துங்கள்


பரிதாபி ஐப்பசி 20
நவம்பர் 5, 1972

கல்கி


பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.





கூட்டுத்துறை என்ற கருத்து நோபல் பரிசு பெறக்கூடிய பிரமாதமான விஷயம் அல்ல!
கூட்டுத்துறை என்ற கருத்து. உயர்வானது... உபநிஷதம் போன்றது!
உங்க கருத்துக்களை கூடிவராதபோது கூட்டுத்துறை எப்படி வருவது?!
மக்கள்



உங்கள் ஓட்டு நிச்சயம்!
வாஷிங்டன்
பாரிஸ்
ஹனாய்
கிஸ்ஸிங்கர்
சைகான்

கல்கி

மலர் 32
இதழ் 14

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
— பாரதியார்

வியட்நாம் போர் நிறுத்தம்?

தென் வியட்நாம் — வடவியட்நாம் எல்லைக்கோட்டில் காவல் புரியும் சர்வ தேசக் கவுன்ஸிலுக்கு இந்தியா தலைமை வகித்துக் கொண்டிருக்கிறது. இதனுடைய பணி, வடவியட்நாம் படைகள் எல்லைக்கோட்டை மீறுவதையும் தென் வியட்நாமிலுள்ள தங்கள் ஆதரவாளருக்கு உதவுவதையும் தடுத்து நிறுத்துவது; போர் தீவிரமடையாமல் பார்த்துக் கொள்வது ஆகியவையாகும்.

இந்தப் பணியை இக்கவுன்ஸிலினால் செய்ய முடியவில்லை. வல்லரசுகளின் தலையீட்டினாலும் வட வியட்நாமின் கொரில்லாப் போர் முறைத் தந்திரங்களாலும் அண்டை நாடுகளான லாவோஸ், கம்போடியா மூலமாகத் தனது போர்த் தளவாடங்களையும் கொரில்லாக்களையும் தென் வியட்நாமுக்குள் அது அனுப்பிக் கொண்டிருந்ததாலும் பெயரளவில் கௌன்சில் இருந்ததே தவிர செயலில் உபயோகமற்றுப் போயிற்று. இது இந்தியாவின் கௌரவத்தை வெகுவாகப் பாதித்திருக்கிறது.

தென் வியட்நாம் அரசுக்கு உதவி அளிக்கச் சென்ற அமெரிக்கா, உதவி அளிக்கும் பணியிலிருந்து நேரடியாகவே போரில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டதுடன் போரை வட வியட்நாம் பகுதிக்கே கொண்டு சென்று தாக்குதலை நடத்த வேண்டியும் வந்தது. இத்தாக்குதல்கள் மிகவும் கடுமையான முறையில் நடத்தப்பட்டதாலும் அமெரிக்க இளைஞர்கள் வியட்நாமில் மடிவதை அமெரிக்க மக்கள் விரும்பாததாலும் அமெரிக்காவிலேயே அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி வலுத்தது.

ஆயின் வியட்காங் (வடவியட்நாமிய கொரில்லாக்கள்) தென் வியட்நாமுக்குள் புகுந்து அசுரத் தன்மையுடன் செய்துள்ள அக்கிரமங்கள் கொஞ்சநஞ்சமல்ல என்பதையும் மறப்பதற்கில்லை. நேர்முகமான யுத்தத்தின்மூலம் கம்யூனிஸ ஆதிக்கத்தைப் பரப்ப நினைத்தால் அதைத் தடுத்து நிறுத்துவது ஒப்பு நோக்குகையில் எளிது. ஆனால் கொரில்லாப் போர்முறையில் கம்யூனிஸ ஊடுருவல் நிகழ்வதைத் தடுப்பது ரொம்ப சிரமம். இந்தச் சிரமசாத்தியமான காரியத்தில் ஒரு ஜனநாயக அரசைக் காக்கும் நோக்கில் இறங்கிய அமெரிக்கா வடவியட்நாமில் கடுமையான விமானத் தாக்குதலை நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியது.

நிக்ஸனின் அயல்நாட்டு விவகார ஆலோசகர் கிஸ்ஸிங்கரின் தீவிர முயற்சியால் தற்போது போர்நிறுத்த உடன்பாடு ஏற்படலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

போர்நிறுத்த உடன்பாடு ஷரத்துக்களில் முக்கியமானவை உடனடியாகப் போர்நிறுத்தம், அமெரிக்கத் துருப்புக்கள் வாபஸ் ஆதல், போர்க் கைதிகள் பரிவர்த்தனை முதலியவை.

அரசியல் ரீதியாக வியட்நாமின் எதிர்காலத்தை நிர்ணயிக்க அம்மக்களின் அபிப்பிராயத்தை அறிய வேண்டும் என்றும் இதற்கு வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்றும் ஒப்பந்த ஷரத்துக்கள் கூறுகின்றன. இதற்கு முன்பாகத் தென் வியட்நாமில் கூட்டாட்சி நடைபெற வேண்டும் என்ற வடக்கு வியட்நாமின் கருத்தைத் தென் வியட்நாமிய ஜனாதிபதி தியூ ஏற்கவில்லை. கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கமே இதனால் வலுக்கும் என்று கருதுகிறார்.

''நீங்கள் வேண்டுமானால் என்னைக் கைவிடுங்கள்; ஆனால் நான் கடைசி வரை உங்களைக் கைவிடமாட்டேன்'' என்று தம் மக்களைப் பார்த்து உருக்கமாகப் பேசியிருக்கிறார் தியூ.

இந்நிலையில் தியூவின் ஆட்சேபணையைப் பொருட்படுத்தாமல் அமெரிக்கா போர்நிறுத்த ஒப்பந்தத்துக்கு உடன்பட்டுவிடக் கூடாது. சற்று நிதானம் காட்டி ஜனாதிபதி தியூவின் சம்மதத்தையும் பெறக் கூடிய ஒப்பந்தம் ஏற்படுவதில் சிரத்தை கொள்ள வேண்டும். அதுவே அமெரிக்காவுக்குப் பெருமை.

இத்தனைக்குமிடையில் சொல்லிமுடியாத அவதிக்குள்ளாகி வருபவர்கள் வியட்நாமிய மக்கள்தாம். இந்தப் போர்ச் சூழல் அவர்களுக்குப் பழகிவிட்டது; வாழ்க்கையின் ஓர் அம்சமாகிவிட்டது என்றுகூட நினைக்குமளவுக்கு யுத்தம் அத்தனை காலம் நீடித்திருக்கிறது. இந்த அசாதாரண நிலையை மேலும் நீடிக்க விடாமல் கௌரவமான ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதைச் சம்பந்தப்பட்ட நாடுகள் மட்டுமின்றி உலகமே வரவேற்று மகிழும்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

ஆறே நாட்களில் ஆறு எம்.எல்.ஏ.க்கள்

தி. மு. க.வில் பிளவு ஏற்பட்ட ஆறே நாட்களில் ஆறு எம். எல். ஏ.க்கள் எம்.ஜி. ஆரின் அண்ணா தி. மு. க.வில் சேர்ந்திருக்கிறார்கள். பல ஊர்களில் நகரசபை உறுப்பினர்கள் பலர் அண்ணா தி. மு. க.வில் சேர்ந்துள்ளனர். கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. பத்து லட்சம் உறுப்பினர்கள் சேர்ந்துள்ளதாக எம். ஜி. ஆர். கூறுகிறார். எம். ஜி. ஆர். சுற்றுப் பயணம் செய்த ஊர்களில் எல்லாம் பிரம்மாண்டமான கூட்டங்கள் கூடியுள்ளன. அமைச்சர்களும் தி. மு. க. பிரமுகர்களும் ஏற்பாடு செய்த கூட்டங்களில் எல்லாம் எதிர்ப்புக் கோஷங்களும் கண்டனக் குரல்களும் இருந்தன. சில ஊர்களில் அமைச்சர்களின் விளக்க உரைகளைக் கேட்க அதிக மக்கள் இல்லாததால் பாதுகாப்புக்கு என்று வந்திருந்த பெருவாரியான போலீஸ்




காரர்களே கேட்டு மகிழ நேர்ந்திருக்கிறது. இன்னும் சில நாட்களில் தமிழ் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்த பின் தமது பலம் அதிகமாகும் என்று கருதுகிறார் எம்.ஜி. ஆர். நிலைமையைக் கூர்ந்து கவனிக்கும்போது எம். ஜி. ஆரின் விளக்கங்களிலும் அறிக்கைகளிலும் பதற்றமின்மையும், தெளிவும், நிதானமும் இருக்கின்றதைக் காண முடிகிறது. அந்த அளவு நிதானமும், தெளிவும், பதற்றமின்மையும் எம். ஜி. ஆருக்கு எதிர் முகாமில் காணப்படாதது ஏன் என்று மட்டும் தெரியவில்லை. எம். ஜி. ஆர். எழுப்பிய பிரச்னைகளுக்கு மறுமொழி கூறாமல், 'ஆட்சியைக் கவிழ்க்கச் சதி', 'எம். ஜி. ஆர். விசுவாச மற்றவர்' என்பது போல் பதற்றமான மறுமொழிகளே பெரும்பாலும் எதிர்த் தரப்பிலிருந்து கூறப்படுகின்றன. பதற்றம் இல்லாமல் பிரச்னைகளை அணுகியிருந்தால் எம்.ஜி. ஆர். ஆதரவாளர்களின் துயரம் அதிகமாகும்படி விருத்தாசலம், போடிநாயக்கனூர் ஆகிய இடங்களில் அசம்பாவிதங்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் நடந்திருக்க முடியாது. கருத்து வேற்றுமைகளும், கொள்கை வேறுபாடுகளும் பொதுவாழ்வைப் பாதிக்காத அரசியல் நாகரிகம் தமிழ் நாட்டில் என்றுதான் வருமோ?

ஓடாத இருபது ரயில்கள்

தமிழ் நாட்டில் இரயில்வே என்ஜின் டிரைவர்களின் வேலைநிறுத்தக் காலத்தில் தாற்காலிகமாக ரத்துச் செய்யப்பட்டிருந்த இருபது இரயில்கள் வேலைநிறுத்தம் நின்று நிலைமை சரியான பின்னும் இன்றுவரை மறுபடியும் விடப்பெறவில்லை. இதனால் வர்த்தகர்களும், சரக்குகளை ஏற்றி அனுப்புவோரும், அக்கம் பக்கம் ஊர்களுக்கு இரயில் மூலம் சென்று உயர் கல்வி கற்கும் மாணவ சமூகமும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். மாயவரம் – காரைக்குடி வழியில் 6 இரயில்களும் விழுப்புரம் – பாண்டிச்சேரி வழியில் 2 இரயில்களும் பூண்டி—கோடிக்கரை வழியில் 2 இரயில்களும் மாயவரம்—தரங்கம்பாடி வழியில் 4 இரயில்களும் நீடாமங்கலம் — மன்னார்குடி வழியில் 2 இரயில்களும் திருச்சி சந்திப்பு – ஸ்ரீரங்கம் இடையே 2 இரயில்களும் ஓடவில்லை. திருச்சி மாவட்ட வர்த்தக சபை இதுபற்றி உடனடியான நடவடிக்கையைக் கோரி இரயில்வே நிர்வாகத்துக்கு எழுதியுள்ளது. வேலைநிறுத்த காலத்தில்தான் டிரைவர்கள் வேலைக்கு வரவில்லை. இப்போது மேற்படி இருபது இரயில்களுமே வர மறுக்கின்றனவா என்ன?

பிரளயமும் முதல்வரும்

'பிரளயம்' என்ற வார்த்தையைத் தமிழ் நாடு முதல்வர் பயன்படுத்திப் பேசியிருக்கிறார். அந்த வார்த்தைக்கு விளக்கத்தை எம். ஜி. ஆர். கூறியிருக்கிறார். மிக அழகாக ஒரு புலவர் போல் கூறியிருக்கிறார்.



'தமிழ் நாட்டில் தி. மு. க. ஆட்சி கவிழ்க்கப்பட்டால் ஒரு பிரளயமே ஏற்படும்' என்ற கருத்தில் முதல்வர் கூறியதற்கு எம்.ஜி.ஆர். 'பிரளயம் ஏற்பட்டால் நிலம் நீராகும், நீர் நிலமாகும் என்று படித்திருக்கிறேன். பிரளயத்துக்குப் பின்பும் ஒரு நிலப் பரப்புத்

தோன்றவே செய்யும்' என்று விளக்கம் செய்துள்ளார். 'பிரளயத்'துக்குக் கூறியுள்ள இந்த விளக்கமும், 'இயக்கத்தைத் தூக்கத் தொடங்கிய வண்டை (எம். ஜி. ஆர்.) எடுத்து எறிந்து விட்டேன்' என்ற முதல்வரின் பேச்சுக்கு மறு நாளே அவர் கூறிய வண்டு—பூ—மகரந்தம் பற்றிய விளக்கமும் தம்மை மார்க்கண்டேயரோடு ஒப்பிட்ட முதல்வரின் உவமைக்குக் கூறிய விளக்கமும் இவர் சிறந்த நடிகர் மட்டுமல்ல பெரிய தமிழ்ப் புலவரும் தான் போலிருக்கிறது என்றே நம்மைப் புரிந்து கொள்ள' வைக்கின்றன.


உபயோகமான யோசனை

தமிழ்நாடு நிர்வாக சீர்திருத்தக் கமிஷன் சிறு தொழில் வளர்ச்சிக்குச் சில உருப்படியான யோசனைகளைக் கூறியிருக்கிறது. அதில் மிகவும் முக்கியமான யோசனை 'தொழில் நடத்துகிறவர்கள் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு இலாகாவுக்கு அலைந்தும் காரியங்கள் முடியாமல் அங்கும் இங்கும் தவிப்பதைத் தவிர்த்து எல்லா அநுமதிகளுக்கும் ஒரே இடமாகத் தொழில் இலாகாவின் உதவி தொழில் டைரக்டர் அலுவலகமே அமைய வேண்டும் என்றும், எது சம்பந்தமாகவும் அந்த டைரக்டரிடமே அவர்கள் மனுக் கொடுத்தால் போதும்' என்றும் கூறப்பட்டிருப்பதாகும். எதிலும் உடனடியாக முடிவு எடுக்க முடியாமல் தடுக்கும் அதிகாரிகளின் பத்தாம் பசலிக் கொள்கைகளையும், அளவு கடந்து அலுவலகங்களில் காலதாமதமாகும் நிலைமைகளையும் இந்த நிர்வாக சீர்திருத்தக் குழு கண்டித்திருக்கிறது. மாநில அரசினால் நியமனம் பெற்றிருந்தும் துணிவாகத் தன் யோசனைகளைக் கூறிய இக் குழுவைச் சிறு தொழில் நடத்துவோர் அனைவரும் மனம் நிறையப் பாராட்டுவார்கள்.

ஆதரவும் எதிர்ப்பும்

எம். ஜி. ஆரின் அ. தி. மு. க. வை ஆதரித்துக் காலஞ்சென்ற அண்ணாவின் புதல்வர் சி. என். ஏ. கௌதமன் அறிக்கை விட்டிருக்கிறார்.

'என் தகப்பனார் பெயரில் புதிய கட்சியை நீங்கள் ஆரம்பித்துள்ளதை அறிய மகிழ்கிறேன். மிகவும் துணிச்சலான முயற்சி. இந்த முயற்சிக்கு எனது பாராட்டுக்கள். நீங்கள் ஏழை எளியவர்களுக்கு உதவ வேண்டும். என் தந்தையாரின் கொள்கைகளை உண்மையாகப் பின்பற்ற வேண்டும் என்ற வகையில் உங்களுக்கு நான் ஆதரவளிப்பேன்'. அண்ணாவின் மகன் ஆதரவு தெரிவிக்கும் இதே சமயத்தில் காலஞ்சென்ற அண்ணாவின் மனைவி ராணி அண்ணாதுரை தாம் புதிய கட்சியாகிய அ.தி.மு.க.வை ஆதரிக்கவில்லை என்று அறிவித்திருக்கிறார். மேலும் அண்ணா தி. மு. க.வில் தம் கணவர் பெயர் உபயோகப்படுத்தப் பெறுவதையும் அதன் கொடியில் தம் கணவர் படம் பயன்படுத்தப் பெறுவதையும் ஆட்சேபித்து அவர் வழக்குத் தொடர்ந்திருப்பதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. எம்.ஜி. ஆர். அவர்களோ, காஞ்சீபுரம் சென்றிருந்த போது அண்ணாவின் அன்னையிடம் ஆசி பெற்று வந்திருக்கிறார்.




உங்கள் மதிப்பை உயர்த்தும் பேனாக்கள்!

FIRITE
ஃபிரைட்
923

கவனத்தில் வைக்கவேண்டியவை:

- ஸ்கெச் பேனாக்கள் 12 வர்ணங்களிலும், ஃபிரைட் பேனாக்கள் 7 வர்ணங்களிலும் கிடைக்கின்றன.
- ரீ-ஃபில் செய்வதற்கு, பின்னாலிருக்கும் ப்ளக்கை அகற்றவும்.
- முனை முற்றிலும் உலர்வதற்கு முன்பு ரீ-ஃபில் செய்யவும்.
- ஃபிரைட், கடினமான, உடையாத்தன்மையுடைய முனை கொண்டது
- ஸ்கெச் பேனாக்களின் முனை ரெசின்-பதம் செய்த ஸிந்தெடிக் ஃபைபரினாலானது. எனவே வரையும் போது அழுந்த வரையாதீர்கள்.
- ஃபிரைட் மற்றும் ஸ்கெச் பேனாக்களுக்கு எல்லா வர்ணங்களிலும் தனித்தனி ரீ-ஃபில் இங்குகள் கிடைக்கின்றன.



கேம்லின்

ஸ்கெச் பேனாக்கள் மற்றும் ஃபிரைட் பேனாக்கள்

ஸ்கெச் பென்
921

கேம்லின் ப்ரை. லிட்
கலைப் பொருள்கள் பிரிவு,
ஜே. பி. நகர், பம்பாய்-59
(இந்தியா)

நரகாசுர வதம்



தீபாவளித் திருவிழா நரகாசுர வதத்தை நினைவில் வைப்பதற்காகக் கொண்டாடும் திருவிழா. நரகாசுரன் யார்? பொய்யும், புனைசுருட்டும் பித்தலாட்டமும்தான் நரகாசுரன். இந்த நரகாசுர வதத்திற்கு அனைவரும் உதவ வேண்டும். பட்டாசு சுடுவதும் பாயசம் அருந்துவதும் மட்டும் நரகாசுர வதம் ஆகாது. நம்முடைய இதயங்களைத் திறந்து பகவானை வரவேற்க வேண்டும். அசுத்தம் நிறைந்த உள்ளத்தில் எப்படிப் பகவான் கோயில் கொள்வான்? நம்முடைய இதயங்களில் பகவான் கோயில் கொண்டால்தான் நாம் மீள்வோம்.

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி



கணவாய்க் காற்று

பேராசிரியர்
அ.சீநிவாசராகவன்

அன்றிரவு முழுதும் தூங்கவே இல்லை. அப்படி ஒரு காற்று நான் தங்கியிருந்த சத்திரத்து வாசலில் மோதி அடித்தது. சத்திரத்தையே தூக்கி எறிந்து விடும்போல் இருந்தது. சன்னற் கதவுகள் படபடவென்று இடையறாது தாளம் போட்டன. கட்டடமே அதிர்ந்து விம்மியது. வெளியிலே பேயாட்டம் ஆடிய மரங்களின் தமரம். இது என்ன ஊரோ? இப்படியும் ஒரு காற்றா?

வானம் நிர்மலமாகத்தான் இருந்தது. கோடி கோடி நட்சத்திரங்கள் என் நிலைமையைப் பார்த்துச் சிரித்தன. நிச்சயமாகப் புயற்காற்று இல்லை. ஆடி மாதமும் இல்லை. பின் ஏன், விள்ள முடியாத ஓர் அளவிலாத் தாபத்தில்,— யாரையோ பழி வாங்க வெறி பிடித்தோடும் கூளியாய், சாடிச் சாடி இந்தக் காற்று சுழன்றது?

விடிந்த பிறகும் காற்று ஓயவில்லை. சத்திரத்து மணியக்காரர் வந்தார். 'தூங்கினீர்களா?' என்று கேட்டார், உபசாரமாகத்தான்.

''தூக்கமா? இந்த ஊழிக் காற்றிலா?''

மணியக்காரர் சிரித்தார்: ''இந்த ஊரில் காற்று கொஞ்சம் அதிகந்தான்.''

''கொஞ்சம் அதிகமா?''

''ஊர் மேட்டிலே இருக்கிறது. தவிரவும்.... மேற்கே பாருங்கள்'' என்றார்.

மேற்கே, பெருங் குன்றுகள் யானை வரிசையைப் போல் நின்றன. காலை வெய்யில் அவற்றின் பேரில் பல வண்ண இரத்தின முகபடாம் விரித்தது.

'இப்படிக் குன்றுகள் இருக்கும்போது காற்று, தடைப்பட்டு, குறைவாக அல்லவா வீச வேண்டும்?' என்று கேட்டு வைத்தேன்.

''அதுதான் இந்த ஊரின் இரகசியம்'' என்றார் மணியக்காரர். ''அதோ, நேர் மேற்கே தெரிகிறதே சிறு கோயில், அது எங்கள் ஊர் அம்மன் கோயில். மலை அடிவாரத்தில் இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் அகன்று இருளாகத் தோன்றுகிறதே, அது ஒரு கணவாயின் தொடக்கம். உயர்ந்த மலைச் சுவர்களின் ஊடே, வளைந்து வளைந்து இந்தக் கணவாய் திருவிதாங்கூர்ச் சீமைக்கே போய் விடுகிறது. கணவாயின் நேர் எதிரே இருக்கிறது இந்த ஊர். கணவாய்க்குள்ளே யிருந்து வருகிறது காற்று. அதனால்தான்....''

எனக்குப் புரிந்தது. மலைகளுக்கப்பால் கணவாயின் மேற்கு வாய்க்குள்ளே புகுந்த காற்று, இங்கே ஊருக்கு எதிரே உள்ள கிழக்கு வாய் வழியாகத்தான் வெளி வரவேண்டும். வேறு வழியில்லை. இரண்டு புறமும் மலைகள். உள்ளே புகுந்த காற்று, கட்டுத் தடுமாறி, மலைச் சுவர்களை மோதி, வளைந்து வெளியே வருவதற்குள், அதற்குப் பின்னாலே வரும் காற்று அதைத் தள்ளுகிறது.

கம்பன் வருணனை நினைவுக்கு வருகிறது. அசோகவனத்தை அனுமன் அழித்தபோது, இலங்கைக் காவற்படையினர், வனத்தைக் காப்பதற்கு ஓடுகிறார்களாம். அப்போது,

'முன்னின்றார் முதுகு நீயப்
பின்னின்றார் முடுகுகின்றார்'

என்கிறான் கம்பன்.

அப்படித் தான், கணவாய்க்குள் முன்னே புகுந்த காற்றைப் பின்னே வரும் காற்று முடுகுகிறது. அதே கதிதான் பின்னால் வரும் காற்றுக்கும் - அதற்குப் பின்னால் ஒரு காற்றுக் கற்றை. இப்படி, காற்றுத் திரள்கள், ஒன்றன்பின் ஒன்றாக, பக்கத்தில் பரந்து ஓட இடமில்லாமல், அந்த இடர்ப்பாட்டினாலேயே அடர்த்தியும் வேகமும் பெற்று, கணவாயின் கிழக்கு வாய் வழியாக வெளியே வரும்போது, புயலைப் போல், ஆனால் ஒரே திசையில், வீசி அடிக்கின்றன. மலைகளைக் கடந்து மேற்கே உள்ள சமவெளியில் சாதாரணமாக உலவுகின்ற காற்று, கணவாயின் இருபுற மதில்களுக்குள்ளே புகுந்ததும், படிப்படியாக இறுகிக் கனத்து வேகப் பெருவீச்சாக மாறுகிறது.

இவ்வாறு எண்ணியபடி 'சரிதான்' என்றேன். மணியக்காரர் ஏதோ சொல்லிவிட்டுப் போனார். காற்றோ, அது அடித்துக் கொண்டிருந்தது. அதன் ஓயாத குரலில் கவிதையைப் பற்றிய ஓர் உண்மை எனக்குப் புலப்பட்டது.

கணவாய்க்குள் புகுந்து, காற்று எவ்வாறு வலிமை பெறுகிறதோ அவ்வாறே, கவிதை உலகில், சொற்களும் வலிமை பெறுகின்றன என்று எனக்குத் தோன்றியது. பேச்சு வழக்கில் நாம் பயன்படுத்தும் சாதாரணச் சொற்கள், அவற்றின் பக்கத்தில், பாட்டிலே வரும் சொற்கள் அமைக்கும் கணவாய்க்குள் புகுந்து, வீரியம் விஞ்சிப் பல பொருளும் தொனியும் பெற்றுத் தழைக்கின்றன. ஆனால் கவிதையில், சொற்கள் கணவாயாகவும், காற்றாகவும் மாறி மாறி அமைந்து, அவை குறிப்பிட வரும் பொருளுக்கு அலகில்லாத வேகமும் வீச்சும் தந்து விடுகின்றன. பாருங்களேன், பாரதியாருடைய 'பாஞ்சாலி சபத'த்தில் வீமன் பேசுகிறான். துரியோதனன் சபையில் திரௌபதி 'ஆடை குலைவுற்று நிற்கிறாள். மாடு நிகர்த்த துச்சாதனன், அவள் மைக் குழல் பற்றி இழுக்கிறான்.' இந்தப் பீடையை நோக்கிய வீமன், வெகுண்டெழுந்து, தருமபுத்திரனைப் பார்த்துப் பேசுகிறான். அந்த வீரப் பேச்சிலே ஒரு பகுதியைக் கேட்போம் :

துருபதன் மகளை — திட்டத்
துய்மன் உடற்பிறப்பை
இருபகடை என்றாய்...

இச்சொற்களைக் கேட்டவுடன், நமக்கு ஞாபகம் வருகிறது. திரௌபதியைச் சற்று முன்தானே பாஞ்சாலன் மகள் என்று வீமன் குறிப்பிட்டான். ஆமாம்.

'பூமி அரசரெல்லாம் — கண்டே
போற்ற விளங்குகிறான்.
சாமி, புகழினுக்கே — வெம்போர்ச்
சண்டன் அப்பாஞ்சாலன்
அவன் சுடர் மகளை'

என்று திரௌபதியைச் சுட்டிய வீமன், இப்போது மறுபடியும் அவளைக் குறிப்பிடுகிறான். கோப வெறியிலே அப்படித்தான் பேசுவோம். நெஞ்சை உறுத்திக் கடைந்து கனல் மூட்டியது எதுவோ அதையே திரும்பத் திரும்பச் சொல்லுவோம். அப்படித்தான் வீமன் பேசுகிறான். அவனை வெறி கொள்ளச் செய்தது, நாட்டை இழந்ததன்று, சக்கரவர்த்தி என்ற பட்டத்தை இழந்து, அடிமையானதன்று, பின் எது?

மாதர் குல விளக்கை — அன்பே
வாய்ந்த வடிவழகை

ஆடை இழந்த பரிபவந்தான். அதுவே மீண்டும் மீண்டும் வீமன் சொற்களில் குமுறுகிறது. ஆகவே,

'துருபதன் மகளை — திட்டத்
துய்மன் உடற் பிறப்பை'

என்று எண்ணி எண்ணி, அவளுக்கு இந்தக் கதியா என்று பொங்குகிறான். அவன் சினம் ஏற ஏற, சொற்களுக்கும் தீத்தன்மை ஏறுகிறது. ஆகவே, அடைமொழிகள் தாமாகவே கழன்று விழுகின்றன. எப்பேர்ப்பட்ட திரௌபதி, 'மாதர்குல விளக்கு, அன்பே வாய்ந்த வடிவழகு' என்றும்

'பூமி அரசரெல்லாம் — கண்டே
போற்ற விளங்குகிறான்.
சாமி, புகழினுக்கே — வெம்போர்ச்
சண்டன் அப் பாஞ்சாலன்
அவன் சுடர் மகளை'

என்றும் வெடித்த வீமன், இப்போது,

துருபதன் மகளை — திட்டத்
துய்மன் உடற் பிறப்பை

என்று அலங்காரம் ஏதுமற்ற சொற்களில் பேசுகிறான். அடைமொழி எதற்கு. அது பெயர்ச் சொல்லின் பகைவாகக்கூட இயங்குமே? காந்தி என்றால் போதாதா, ஒருவரைத்தானே குறிக்கும்? உலகம் போற்றும் உத்தமர் காந்தி என்றோ, மோகன்தாஸ் கரம்சந்திர காந்தி என்றோ பேசும்போது, காந்தி என்ற சொல்லின் வேகம் குறைந்து விடவில்லையா ? புத்தனைப் போய்ப் பாடப் புத்தகங்களில் தவிர, கபிலவாஸ்துவில் பிறந்த கௌதம புத்தன்





என்று குறிப்பிடுவார்களா, அல்லது போதி மரத்தின் கீழ் போதம் பொலிந்த புண்ணியன் புத்தன் என்று மோனைச் சிலம்பு வீசுவார்களா ?

துருபதன் மகள், இதைவிடப் பெருமை உண்டா, துருபதனுக்குத்தான் அடைமொழி வேண்டுமா ? அதோடு இட்டத்துய்மன் உடற்பிறப்பு. இதன் மேல் பெருமை ஏது? உணர்ச்சி வேகத்தில் இச்சொற்கள் அடைமொழி துறந்து, தனித்தே நின்று, பெருமையின் எல்லை முழுதையும் அளந்துவிடுகின்றன.

துருபதன் மகளை – இட்டத்
துய்மன் உடற் பிறப்பை
இரு பகடை என்றும் – ஐயோ,

இச்சொற்களால் நீண்டுயர்ந்த மலைச் சுவர் ஒன்று படைக்கப் பெறுகிறது. 'ஐயோ' என்பது அம்மலையின் சிகரம். சொற்கள் தொடர்கின்றன.

' இரு பகடை என்றும் – ஐயோ
அடிமை என்றும்'

ஒப்பற்ற பெருமை வாய்ந்த திரௌபதியைப் பணயம் வைத்து, 'போடு பகடை' என்று காய் உருட்டினாயே, என்ன செய்துவிட்டாய், அவளை, அவளையல்லவா அடிமையாக்கிவிட்டாய்?

'அடிமை என்றும்' என்ற சொற்கள் இன்னொரு மதிற்சுவராக நிமிர்கின்றன.

'இருபகடை என்றும் – ஐயோ' என்று குமுறும் வீமன், சபையிலே இருக்கின்ற அந்தக் கொடுமைத் திருக்கூட்டத்தைப் பொறாமை வடிவான துரியோதனனை, திமிர் பிடித்த துச்சாதனனை, ஆணவம் விஞ்சும் கர்ணனை, அச்சத்தினாலே 'நமக்கேன்' என்றிருக்கும் மற்றவர்களை, நிமிர்ந்து நின்று சுற்றிலும் பார்க்கிறான்.

அவனுடைய சினம், ஆற்றாமை இரண்டும் ஒரே சொல்லில் புயலாக வீசுகிறது. பாட்டை முழுவதும் பார்ப்போம்.

' துருபதன் மகளை – திட்டத்
துய்மன் உடற் பிறப்பை
இருபகடை என்றும் – ஐயோ
இவர்க்(கு) அடிமை என்றும்!

'இவர்க்கு' என்ற சொல் நீங்களும் நானும் நடைமுறைப் பேச்சில் நாள்தோறும் பயன்படுத்துகின்ற ஒரு சொல் தான். ஆனால் இங்கே அதற்குள்ளே எவ்வளவு ஆங்காரம், கசப்பு, அலட்சியம் குரல் கொடுக்கிறது ! சாதாரணமான ஒரு சொல், பக்கத்திலே உள்ள சொற்கள் அமைத்த இரு மதில்களுக்குள் நின்று, கணவாய்க் காற்றாக மாறுகிறது, கவிதை ஆகிறது.

" நடமாடும் குருகுலம் "

அடுத்த ஆண்டு வைகாசி மாத அனுஷ நட்சத்திர நாள் மகத்தான புண்ணிய தினம். அன்று ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பரமாசாரியர்களுக்கு எண்பதாவது திருஅவதார தினம் நிகழ்கிறது. இச்சமயத்தில் அவர்களது திருவடிகளில் ஓர் அரிய காணிக்கை செலுத்த 'ஜய சங்கர சேவா சமாஜத்தினர்' ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

திருச்சியைச் சேர்ந்த ஸ்ரீ ஜே. சடகோபன் அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளாகப் பல ஸ்தலத் திருவிழாக்களையும், கும்பாபிஷேக வைபவங்களையும், மகனீயர் பலரது பட்டணப் பிரவேச பவனிகளையும், வித்வத் சதஸ்களையும் 16 எம். எம். வண்ணத் திரைப்படமாக எடுத்து வைத்திருக்கிறார். இவற்றில் பலவற்றில் ஸ்ரீ காமகோடி பெரியவர்கள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவற்றை நல்லறிஞர்களைக் கொண்டு செப்பமிட்டு, கோவை செய்து "நடமாடும் குருகுலம்" என்ற பெயரில் ஒரு முழு நீள வண்ணப் படமாகத் தயாரித்து, ஆசாரியர்களது 80வது ஜயந்தி மகோத்சவத்தன்று சமர்ப்பிக்க ஜயசங்கர சேவா சமாஜத்தினர் நன்முயற்சி மேற்கொண்டுள்ளனர். தமிழ், தெலுங்கு, ஹிந்தி, ஆங்கிலம் ஆகிய நாலு மொழிகளிலும் வர்ணனையுடன் வெளியிட உத்தேசம். ஸ்ரீ ஆசார்யர்களது குரலிலேயே அவரது அருள்வாக்கும் சேர்க்கப்படுவது விசேஷ அம்சமாகும்.

நாடெங்கும், வெளி நாடுகளிலும்கூடப் பாரதப் பண்பாட்டை விளக்கக்கூடிய 'நடமாடும் குருகுலம்' காரியசாத்தியமாவதற்கு ஆஸ்திக அன்பர்களின் நிதி உதவி கோரப்படுகிறது. நிதி அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ ஜே. சடகோபன், காரியதரிசி, ஜயசங்கர சேவா சமாஜம், 42, சின்னக் கடைத் தெரு, திருச்சி–2.

காங்கேய நல்லூரில் லட்சார்ச்சனை

காங்கேயநல்லூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஸ்கந்த சஷ்டி லட்சார்ச்சனை நவம்பர் 7 முதல் 12ந் தேதி வரை நடைபெறுகிறது. தினம் இரவு 8–30 மணிக்குத் திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகளின் முருகனைப் பற்றிய இன்னிசை உபந்யாசங்கள் ஏழு நாட்களும் நடைபெறும். லட்சார்ச்சனையில் பங்குபெற விரும்பும் பக்தர்கள் ரூபாய் பத்து அனுப்பலாம். தர்மகர்த்தா, காங்கேயநல்லூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், காங்கேயநல்லூர், வட ஆர்க்காடு மாவட்டம்.



இந்த விழாக் காலத்தில் பிலிப்ஸ்
வழங்கும் விசேஷ அன்பளிப்பு!
இலவசம்
ஒவ்வொரு பிலிப்ஸ் ஸ்டீரியோ ஸிஸ்டத்துடனும் ரூ.130 மதிப்புள்ள 4 பாலிடோர் எல்பி ரெகார்டுகள்.
பிலிப்ஸ் மற்றும் பாலிடோர் வழங்கிடும் இந்த விசேஷ திட்டத்தின்படி, நீங்கள் எந்த பிலிப்ஸ் வியாபாரியிடமிருந்தும் பிலிப்ஸ் ஸ்டீரியோ ஸிஸ்டம் வாங்கி, பாலிடோரின் எந்த லிஸ்டிலிருந்தும் உங்களுக்குப் பிடித்தமான 4 ரெகார்டுகளை இலவசமாகப் பெறலாம். ரெகார்டுகளை இலவசமாகப் பெற, பிலிப்ஸ் ஸ்டீரியோ ஸிஸ்டம் வாங்கும்போது, வியாபாரியிடமிருந்து கூப்பன் வாங்க மறக்காதீர்கள். இசைப்பிரியரான உங்களுக்கு இன்னிசையை முழுக்க முழுக்க அனுபவிக்க இது ஒரு பொன்னான தருணம். எனவே, பிலிப்ஸ் ஸ்டீரியோ ஸிஸ்டத்தில் சங்கீதத்தின் முழு இனிமையையும் கேட்டானந்தியுங்கள். ஏனெனில் இது பரவசமூட்டும் விழாக் காலம்!
உலகத் தரம் வாய்ந்த பிலிப்ஸ் ஸ்டீரியோ ஸிஸ்டம்
795/-
உள்ளூர் வரிகள் தனி
பிலிப்ஸ்
பிலிப்ஸ் இந்தியா லிமிடெட்
OBM 9905 TH
புதிய 'ஈக்விட்டி' ஷேர்கள் வெளியீடுபற்றி 'பிலிப்ஸ்' விரைவில் அறிவிப்பார்கள்.

ராஜாஜியின் ஜெயில் டைரி

1922, ஜனவரி, 5

மகமது ஹாஜி சேனுக்கும் எனக்கும் எங்கள் அறைகளுக்கு முன்னாலுள்ள வராந்தாவில் உறங்குவதற்கு அனுமதி கிடைத்தது. அநேகமாக மூட்டைப் பூச்சித் தொல்லையும் இல்லை. பக்கத்தில் சட்டிகளை வைத்துக் கொண்டு தூங்கும் கஷ்டமும் இல்லை. காலில் வலி ஏற்பட்டிருந்த போதிலும் நன்றாகத் தூங்கினேன். ஆழ்ந்த நித்திரை. ஒரு வேளை மருந்து குத்தி வைத்ததுதான் காரணமாக இருக்கலாம்.

ஹீராசிங் நேற்று இரவு லாகூர் சதி வழக்குக் கைதிகளுடைய விருத்தாந்தங்களைக் கூறினார்: ''எங்கள் எல்லோரையும் பிகாரில் உள்ள ஹஜாரிபாக் சிறையில் அடைத்து வைத்திருந்தார்கள். மோசமான ஆகாரம்; அதிகக் கஷ்டமான வேலை; ஏதேனும் தவறு செய்தால் கடுமையான தண்டனை கொடுப்பார்கள். கசையடி கொடுத்தல், கையில் விலங்கு மாட்டி வைத்தல், கவரோடு சேர்த்துச் சங்கிலி போட்டு வைத்து நாள் முழுவதும் நிற்க வைத்தல். சில சமயங்களில் இரவில்கூட நிறுத்தி வைப்பதுண்டு. அப்படி ஒரு வார காலம் நின்று கொண்டிருக்க வேண்டும். சில சமயங்களில் கைகளைப் பின்னால் இழுத்து வைத்துச் சங்கிலியை மாட்டுவார்கள். எல்லாக் கைதிகளும் கண்டு அஞ்ச வேண்டுமாம்; அதற்காக எல்லாரும் பார்க்கக் கூடிய இடத்திலேயே இப்படி நிறுத்தி வைப்பார்கள்.

''எங்களுக்கு உடுத்திக் கொள்ளக் கோணிப்பை உடைகளையே கொடுத்தார்கள். அதை அணிய மறுக்கவே தண்டனை கொடுத்தார்கள். ஒரு பஞ்சாபி அதிகாரி வந்து வேலையை ஒப்புக்கொண்டார். அதன் பின் எங்கள் நிலைமை முன்னிலும் அதிக மோசமாகி எங்களால் பொறுக்க முடியாத கஷ்டத்தை அடைந்து விட்டது. அதனால் நாங்கள் எப்படியேனும் தப்பி ஓடிவிடத் தீர்மானித்தோம். அகப்பட்டுக்கொண்டால் சுட்டு விடுவார்கள். அதற்கும் தயாராகவே இருந்தோம். எங்கள் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காகத் தோட்டிகள் மூலம் மூன்று இரும்புக் கம்பிகளைப் பெற்றோம். எங்களில் ஒருவர் கூரையருகில் சுவரில் துவாரங்கள் செய்தார். வேறு சிலர் சுவரின் அடிப் பாகத்தில் துவாரங்கள் செய்தனர். காவல்காரர் வராந்தாவில் உலாவும் பொழுது சுவரில் துவாரம் செய்யும் சத்தம் கேட்காமல் இருப்பதற்காக நாங்கள் எல்லோரும் சேர்ந்து பஜனைப் பாடல்களை உரக்கப் பாடிக் கொண்டிருந்தோம். துவாரங்கள் செய்து முடிந்ததும் மூன்று பேர் இரவில் வராந்தாவுக்குச் சென்று காவல்



காரரைப் பிடித்து வாயில் துணியைத் திணித்துவிட்டு அவருடைய கோட்டையும் லாந்தரையும் எடுத்துக் கொண்டார்கள். அதன்பின் அந்த மூவரில் ஒருவர் அந்தக் கோட்டை அணிந்து கொண்டு வராந்தாக் கோடியில் விளக்கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டார். மற்ற இருவர் அட்டைகள் போல் கதவோடு சேர்ந்து நின்று கொண்டிருந்தார்கள். தலைமைக் காவல்காரருக்காகக் காத்திருந்தார்கள். அவர் வந்தபொழுது காவல்காரர் தூங்குகிறார் என்று எண்ணி அவரை எழுப்பப் போனார். உடனே வாசலில் ஒட்டி நின்று கொண்டிருந்த எங்கள் நண்பர்கள் இருவரும் பின்புறமாகச் சென்று தலைமைக் காவல்காரர் வாயிலும் துணியைத் திணித்தார்கள். அவர் உடனே மூர்ச்சித்து விழுந்துவிட்டார். எங்கள் நண்பர்கள் அவரிடமிருந்து சாவிகளை எடுத்து அறைகளைத் திறக்க ஆரம்பித்தார்கள்.

''ஆனால் அவர்கள் எந்தச் சாவி எந்த அறைக்கு என்று தெரியாமல் கஷ்டப்பட்டார்கள். அத்துடன் காவற்காரர் பாரா மாற்றும் சமயமும் நெருங்கிவிட்டது. அவர்கள் பதினெட்டு பேரைத் தான் விடுவித்திருந்தார்கள். நாங்கள் எல்லோரும் சிறையின் வெளிச் சுவருக்கு ஓடி ஒருவர் தோளில் ஒருவராக நின்று உச்சியில் ஏறி மற்றவர்களைப் போர்வைகளைக் கட்டி மேலே இழுத்து அந்தவிதமாகவே அடுத்த பக்கத்தில் கீழே இறக்கினோம். இந்தவிதமாகக் காரியம் நடைபெறும் பொழுது வாயில் துணியைத் திணித்திருந்த காவல்காரரையும் தலைமைக் காவல்காரரையும் கவனித்துக் கொள்வதற்காக மூன்று நண்பர்களை நிறுத்தி வைத்திருந்தோம். ஆனால் அவர்கள் பொறுமை இழந்து சீக்கிரமாகவே எங்களுடன் வந்து சேர்ந்து கொண்டார்கள். காவற்காரர்கள் எப்படியோ வாயிலிருந்து துணியை எடுத்து விட்டுச் சத்தம் போட்டார்கள். உடனே காவல்காரர்கள் பலர் ஓடி வந்தார்கள். எங்களில் சிலர் சுவரிலிருந்து குதிக்காமலிருந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அறைகளின் பூட்டுக்களைக் கையில் கொண்டு வந்திருந்தார்கள். அவைகளைக் காவல்காரர்களின் மீது எறிந்தார்கள். அவர்களில் ஒருவர் நெருப்புக் குச்சியைக் கிழித்துக் கொண்டு, ''அவர்கள் நம்முடைய சகோதரர்கள், அவர்கள் மீது வெடிகுண்டுகளை எறிய வேண்டாம்'' என்று சொன்னார். இருட்டாக இருந்தபடியால் தந்திரம் பலித்து விட்டது. காவல்காரர்கள் வெடிகுண்டுகள்தான் என்று நம்பிப் பயந்து ஓடிவிட்டார்கள். சுவரின் மேல் இருந்து கொண்டு நண்பர்களை மேலே இழுத்து விட்டுக்கொண்டிருந்தவர் அதைத்தான் சரியாகக் கவனித்தாரே ஒழிய அடுத்த பக்கம் கீழே இறக்கி விடுவதை அவ்வளவு கவனமாகச் செய்தாரில்லை. அதனால் எங்களில் சிலருக்கு நல்ல காயம் உண்டாகி விட்டது. அத்துடன் எங்களுக்கு அந்த இடம் முற்றிலும் புதிது. அதனால் கால்களை முறித்துக் கொண்டவர்கள் ஒரு பாலத்தடியில் மறைந்திருந்து கொண்டார்கள். ஆனால் பக்கத்துக் கிராமத்து ஜனங்கள் அவர்களைக் கண்டுபிடித்துப் போலீஸார் வசம் ஒப்புவித்து விட்டார்கள். எனக்கும் காயம் உண்டாகி இருந்தது. என்னை என் நண்பர்கள் தங்களுடன் தூக்கிக் கொண்டு போனார்கள். ஆனால் நான் கனமானவன் அல்லவா? அதனால் என்னை விட்டு விட்டுத் தப்பித்துக் கொள்ளுமாறு நண்பர்களிடம் கேட்டுக் கொண்டேன். மறு நாள் என்னை ஆரா என்ற இடத்தில் கைது செய்தார்கள். இன்னும் சிலர் காசி நகரத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்கள். இறுதியில் மூன்று பேர் மாத்திரமே சர்க்கார் கையில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டார்கள். கைது செய்யப்பட்ட எங்களை விசாரணை செய்து எங்களுக்கு ஏற்கனவே கொடுத்திருந்த ஆயுள் தண்டனையுடன் மேலும் சில வருஷங்கள் சிறையில் இருக்குமாறு தீர்ப்புக் கூறினார்கள். எங்களை மறுபடியும் அதே சிறையில்தான் அடைத்துவைத்தார்கள். சிறைத் தண்டனைகளும் முன் போலவே நடைபெற்று வந்தன.

''நாங்கள் மறுபடியும் கம்பிகளை முறித்தோம். ஆனால் வெளியேறவில்லை. 'விரும்பினால் வெளியேற முடியும். ஆனால் அவ்விதம் செய்ய விரும்பவில்லை. எங்களைச் சரியாக நடத்த வேண்டும் என்பதையே விரும்புகிறோம்' என்று சிறை அதிகாரிகளிடம் கூறினோம்.

''அதன் பிறகு கொஞ்சம் நல்லவிதமாகவே நடத்தினார்கள். ஆயினும் சிறை அதிகாரிகளுக்கு எங்களை வைத்துக் கொண்டிருப்பது கஷ்டமாகவே இருந்தது. எங்களுக்காகக் காவற்காரர்களைப் பஞ்சாபிலிருந்தே தருவிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். கொஞ்சகாலம் சென்றதும் எங்களைச் சென்னை ராஜதானிக்கு அழைத்துக் கொண்டு வந்து பல சிறைகளில் பிரித்து வைத்திருக்கிறார்கள்.''

அதன் பிறகு நான் அவருடைய குடும்ப விஷயத்தைப் பற்றி விசாரித்தேன்.

[ஹிந்து மதத்துக்குப் பூர்வத்தில் பெயரே இல்லை. ஏன் இல்லை?]

பெயரில்லாத மதம்

ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

இப்போது 'ஹிந்து மதம்' என்று ஒன்றைச் சொல்கிறோமே, இதற்கு உண்மையில் இந்தப் பெயர் கிடையாது. 'ஹிந்து' என்றால் 'அன்பு' என்று அர்த்தம்; ஹிம்சையைத் தூஷிப்பவன் ஹிந்து என்று சிலர் சொல்கிறார்கள். இது சமத்காரமாகச் சொல்வதே யாகும். நம்முடைய பழைய சாஸ்திரம் எதிலும் 'ஹிந்து மதம்' என்கிற வார்த்தையே கிடையாது.

ஹிந்துக்கள் என்பது அந்நிய நாட்டினர் நமக்கு வைத்த பெயர்தான். மேல்நாட்டுக்காரர்கள் ஸிந்து நதியைக் கடந்தே நம் பாரத நாட்டுக்கு வரவேண்டியிருந்ததல்லவா? ஆனபடியால் ஸிந்துவை இந்து என்றும், அதை அடுத்த நாட்டை இந்தியா என்றும், அதன் மதத்தை ஹிந்து என்றும் குறிப்பிட்டார்கள். ஒரு தேசத்துக்குப் பக்கத்திலுள்ள சீமையின் பெயராலேயே அதை அடுத்துள்ள சீமைகளையும் சேர்த்துக் குறிப்பிடுவதுண்டு. வேடிக்கையாக ஒன்று சொல்கிறேன்:

வடதேசத்தில் பைராகி என்று யார் வந்து யாசகம் கேட்டாலும் உடனே பிச்சை போட்டு விடுவார்கள். நம் தென்னாட்டு ஜனங்கள் அப்படிச் செய்வதில்லை என்று பைராகிகளுக்கு ரொம்பக் குறை. அவர்கள் ஒரு பாட்டுப் பாடுகிறார்கள். அதில்,

இல்லா போபோ கதேற தெலுங்கி

என்று ஒரு வரி வருகிறது.

தெலுங்கர்கள் '(பிச்சை) இல்லை போ போ' என்று தமிழில் விரட்டுவதாகச் சொல்கிறது பாட்டு. இதற்குக் காரணம் என்ன? வடதேசத்தை விட்டுப் பைராகிகள் கீழே வரும்போது முதலில் தெலுங்கு தேசம் வருகிறது. ஆனபடியால் அதற்குப் பிறகு வரும் தமிழ் நாட்டையும் தெலுங்கு தேசமாகவே கருதி விட்டார்கள், இந்தப் பைராகிகள்!

தமிழ்நாட்டைத் தெலுங்கர்கள் அரவ நாடு என்பதுங்கூட இதே மாதிரிதான். ஆந்திரதேசத்தின் கீழே உள்ள சிறிய பகுதிக்கு அர்வா தேசம் என்று பெயர்.

இந்த முறையில்தான் ஸிந்துப் பிரதேசத்தைக் கண்ட அந்நியர்களும் பாரத தேசம் முழுவதையும் ஹிந்து தேசமாக்கிவிட்டனர்.

ஆகவே ஹிந்து என்பது நமது பூர்விகப் பெயர் அல்ல. வைதிக மதம், சநாதன தர்மம் என்றெல்லாம் சொல்கிறோமே! அவைதான் பெயரா என்றால், அதுவும் இல்லை. நம்முடைய ஆதார நூல்களைப் பார்க்கும்போது இந்த மதத்துக்கு எந்தப் பெயருமே குறிப்பிடப்படவில்லை.

இதைப் பற்றி நினைத்தபோது எனக்கு ரொம்பவும் குறையாக இருந்தது. இது இப்படி இருக்கட்டும்.

ஒரு நாள் யாரோ 'ராமு வந்திருக்கிறான்' என்று என்னிடம் சொன்னார்கள். உடனே நான் ஏதோ நினைவில் 'எந்த ராமு?' என்று கேட்டேன். 'எந்த ராமுவா? அப்படியானால் 'ராமு'க்களில் பல பேர் இருக்கிறார்களா?' என்று எதிர்க் கேள்வி கேட்டார். அப்போது தான் எனக்குப் பழைய ஞாபகத்தில் இப்படிக் கேட்டுவிட்டோம் என்று தெரிந்தது. எங்கள் ஊரில் ராமு என்ற பெயரில் நாலு பேர் இருந்தார்கள். எனவே, அவர்களுக்குள் வித்தியாசம் தெரிந்து கொள்வதற்காகக் 'கறுப்பு ராமு', 'சிவப்பு ராமு', 'நெட்டை ராமு', 'குட்டை ராமு' என்று சொல்வது வழக்கம். அதே நினைவில்தான் ஒரே ஒரு ராமு இருந்த இடத்திலும் 'எந்த ராமு?' என்று கேட்டுவிட்டேன். ஒரே ராமு இருக்கிற இடத்தில் எந்த அடைமொழியும் போட வேண்டியதில்லை.

நம் மதத்துக்கு ஏன் பெயரில்லை என்பதும் உடனே புரிந்து விட்டது. பல வேறு மதங்கள் இருக்கிற போதுதான் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்கு வித்தியாசம் தெரிவிப்பதற்காகப் பெயர் கொடுக்க வேண்டும். ஒரே மதம்தான் இருந்தது எனில் அதற்குப் பெயர் எதற்கு?

நமது மதத்தைத் தவிர மற்ற மதங்கள் ஒரு மகாபுருஷரின் பெயரில் ஏற்பட்டவை. அந்தப் பெரியவருக்குமுன் அந்த மதம் இல்லை. இவ்வளவு மதங்களும் உண்டாவதற்கு முன்பே, நம் மதம் இருந்திருக்கிறது. இந்த ஒரு மதமே உலகமெல்லாம் பரவியிருந்திருக்கிறது. இதைத் தவிர வேறு மதம் இல்லாததால் இதற்குப் பெயர் குறிப்பிட வேண்டிய அவசியமே இல்லை. இதை அறிந்தவுடன் முன்பு எனக்கு இருந்த குறை மறைந்தது. அதோடு இந்த மதத்தைப் பற்றிக் கௌரவ புத்தியும் உண்டாயிற்று.

பார்க் - டேவிஸ்

மூவகை ஆற்றலுள்ள நிகோ சோப்

மற்றெந்த சோப்பையும் விட உங்கள் சருமத்திற்கு மிகுந்த பாதுகாப்பளிக்கிறது

1 நிகோ சருமக் கிருமிகளைக் கொல்லுகிறது

2 நிகோ உடல் துர்நாற்றத்தைப் போக்குகிறது

3 நிகோ உடலைத் துப்புரவாக்கிப் பாதுகாப்பளிக்கிறது

நீங்கள் ஆரோக்கியமான
சருமத்தைப் பெற, நாள்தோறும்
நிகோ சோப் தேய்த்துக் குளியுங்கள்.
நிகோவின் நச்சுநாச நுரைவளம்
சரும நோய்க் கிருமிகளைக்
கொன்று, உங்கள் சருமத்திற்கு
ஆரோக்கியமளிக்கிறது.
நிகோவிலுள்ள மருந்துப் பொருள்கள்
வியர்வையினால் ஏற்படும்
துர் நாற்றத்தைப் போக்குகின்றன.
நிகோ சின்னஞ்சிறிய சருமத்
தொற்றுகளையும் எதிர்த்துப் போராடி,
சருமத்துக்கு மென்மையளிக்கிறது.
அதோடு மினுமினுப்பும் புதுமையும்
தருகிறது. இது மட்டுமல்ல;

நிகோ பழக்கத்தைக் கடைப்பிடிப்பீர்.
அது உங்கள் சருமத்திற்கு அவசியம்.

முகப் பருக்கள் மற்றும்
வேர்க்குருவிலிருந்தும் உங்கள்
சருமத்துக்குப் பாதுகாப்பு தருகிறது
நிகோ. ஷாம்புவாகக்கூட இதைப்
பயன்படுத்தலாம். இதனால் பொடுகு
விழாமல் தடுக்கிறது
நிகோ. எனவே, இன்று
முதலே, நிகோ சோப்
உபயோகிக்கத்
தொடங்குங்கள்.

TRIPLE ACTION
NEKO®
The Original Antiseptic Soap



PARKE-DAVIS



அலை ஓசை

அமரர் கல்கி

10. ஒரே வழிதான்

காலடிச் சத்தம் வெகு சமீபத்தில் வந்த பிறகும் சீதா திரும்பிப் பார்க்கவில்லை. எதற்காகத் திரும்பிப் பார்க்க வேண்டும்? தான் என்ன செய்ய எண்ணியிருந்தாள் என்பதை அவர் தெரிந்து கொள்ளட்டும். அருகில் வந்து கைத் துப்பாக்கியைப் பார்த்துத் திடுக்கிடட்டும்; தன்னை ஏதாவது கேட்கட்டும்; அதற்குப் பிறகு பதில் சொல்லிக் கொள்ளலாம்.

வந்த ஆசாமி சீதாவுக்குப் பின்புறம் வந்து சமீபமாக நின்றான். சட்டென்று கையை நீட்டிக் கைத் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். பிறகு, "சீதா!" என்றான்.

குரல் ராகவனுடைய குரல் அல்ல என்பதை அறிந்ததும் சீதா வியப்புடன் திரும்பிப் பார்த்தாள். வந்திருப்பவன் சூரியா என்பதைத் தெரிந்து கொண்டாள். இதனால் அவள் மனத்தில் அளவற்ற ஏமாற்றம் உண்டாயிற்று. அதே காலத்தில் ஒரு விந்தையான மாறுதல் அவள் மனப் போக்கில் ஏற்பட்டது. தான் உயிரை விட்டு விடுவது என்கிற தீர்மானத்தைச் சீதா அந்தக் கணத்தில் மாற்றிக் கொண்டாள். உயிரோடு எவ்வளவு நாட்கள் இருக்கலாமோ, இருந்து ராகவனுக்கு எவ்வளவு மனக்கிலேசம் அளிக்கலாமோ அவ்வளவும் அளிக்க வேண்டும் என்று எண்ணினாள். இந்தத் திடீர் நோக்கம் நிறைவேறுவதற்குச் சூரியாவின் உதவி தனக்குத் தேவை. அதற்குத் தகுந்தபடி அவனிடம் நடந்து கொள்ள வேண்டும்.

"அம்மாஞ்சி! நீயா? நல்ல சமயத்தில் தான் வந்தாய், வா!" என்று வரவேற்றாள்.

"அப்படி ஒன்றும் நல்ல சமயமாக எனக்குத் தோன்றவில்லையே? நீ செய்ய உத்தேசித்திருந்த காரியத்துக்குத் தடங்கலாக அல்லவா நான் வந்துவிட்டதாகத் தோன்றுகிறது?"

"நான் என்ன செய்ய உத்தேசித்ததாக எண்ணினாய்!"

"நள்ளிரவில் கைத் துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது எதற்காக இருக்கும்?"

"ஏன்? திருடன் வந்தால் அவனைச் சுடுவதற்குத் தயாராக வைத்திருக்கலாம்."

"புதுடில்லியில் திருடன் அவ்வளவு சுலபமாக வந்து விடுவானா? வாசற் காவற்காரன் இருக்கிறானே?"

"காவற்காரன் இருந்தால் உன்னை எப்படி உள்ளே விட்டான்?"

"அவன் நன்றாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறான். நான் சத்தம் செய்யாமல் உள்ளே வந்துவிட்டேன்!"

"ஆம்; இந்த ஊர் வேலைக்காரர்களே இப்படித்தான். ஓயாமல் தூங்கிவிழுவார்கள்... பின்னே, கைத் துப்பாக்கி எதற்காக வைத்திருக்கிறேன் என்று நினைத்தாய்? என்னைச் சுட்டுக்கொண்டு தற்கொலை செய்து கொள்வதற்காக என்று நினைத்தாயா?"

"அப்படியில்லை என்றால் மிக்க சந்தோஷமடைவேன். உன் முகத்தையும் கண்ணீர் ததும்பும் கண்களையும் பார்த்தால் அப்படித் தோன்றுகிறது. எனக்கு இவ்விடமிருந்து வந்த கடிதமும் அவ்விதம் எண்ணும்படி செய்தது."

"கடிதம் யார் எழுதியது?"

"அதைப் பற்றி உனக்கு என்ன கவலை, சீதா! யாரோ எழுதினதாக வைத்துக் கொள்ளலாம்."

''கடிதத்தில் என்ன எழுதியிருந்தது? அதையாவது எனக்குச்சொல்லலாமா?''

''நீ மிகவும் மனக் கஷ்டத்துக்கு உள்ளாகி யிருப்பதாக எழுதியிருந்தது. என்ன மனக் கஷ்டம் என்பதை நேரில் தெரிந்து கொள்ளலாம் என்றுதான் வந்தேன். உண்மையில் உனக்குக் கஷ்டம் ஒன்றுமில்லையா, அத்தங்கா! அப்படியானால், என் கவலை தீர்ந்தது. நான் உடனே திரும்பிப் போய் என்னுடைய வேலையைப் பார்ப்பேன்.''

''சூரியா! உன்னிடம் உண்மையை மறைப்பதில் என்ன பயன்? உன்னுடைய உதவி எனக்குத் தேவையாயிருக்கிறது. அதனால்தான் 'நல்ல சமயத்தில் வந்தாய்' என்றேன். நான் சுட்டுக் கொண்டு சாகத் தயாராயிருந்தேன், சூரியா! ஆனால் சாவதற்கு முன்னால் என் ஆசைக் கண்மணிக்கு ஒரு கடிதம் எழுதி வைக்க வேண்டும் என்று நினைத்தேன். ஒன்றும் எழுதவே தோன்றவில்லை. உன்னிடம் சொன்னால் நீ நேரிலே போய்த் தெரிவித்துவிடுவாயல்லவா? மதராஸுக்கு எப்போதாவது போகாமலா இருக்கப் போகிறாய்?'' என்று சீதா பரிதாபம் நிறைந்த குரலில் கூறினாள்.

''அத்தங்கா! கொஞ்ச நாளைக்கு முன்பு நான் மதராஸுக்கும் தேவபட்டணத்துக்கும் போயிருந்தேன்.''

''அப்படியா? மதராஸில் வஸந்தியைப் பார்த்தாயா?'' என்று சீதா பரபரப்புடன் கேட்டாள்.

''பார்த்தேன். உன் மாமனார் மாமியாரையும் பார்த்தேன்.''

''வஸந்தி எப்படியிருக்கிறாள்? உன்னிடம் பேசினாளா?''

''உடம்பு நன்றாக இருக்கிறாள். ஆனால் குழந்தையின் மனம் குன்றிப் போயிருக்கிறது; அப்பா அம்மாவைப் பார்ப்பதற்கு ஏங்கிப் போயிருக்கிறாள். அப்படிப்பட்ட குழந்தையை விட்டுவிட்டுச் சுட்டுக் கொண்டு சாவதற்கு உனக்கு எப்படி மனம் வந்தது என்று நினைத்தால் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.''

''இதிலிருந்தே என்னுடைய நிலைமையை நீ தெரிந்து கொள்ளலாமே, சூரியா! பெற்ற பெண்ணைத் தூர தேசத்துக்கு அனுப்பிவிட்டு அவளைப் பார்க்காமல் சாவதற்கு இலேசில் மனம் துணியுமா? அப்படிப்பட்ட நரக வேதனையை வாழ்க்கையில் நான் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன்.''

''அத்தங்கா! நரகவேதனையும் சொர்க்க சுகமும் நாமே செய்து கொள்வதுதான். 'கடவுளுடைய ராஜ்யம் உனக்குள்ளே' என்பதை நீ கேட்டதில்லையா?''

''அந்த வேதாந்தமெல்லாம் என் விஷயத்தில் இனிமேல் உபயோகமில்லை, அம்மாஞ்சி! என்னுடைய நரகத்தை நானே சிருஷ்டி செய்து கொள்ளவும் இல்லை. நீங்கள் எல்லோரும் சேர்ந்துதான் என்னை இந்த நரகத்திலே தள்ளினீர்கள். இவரை நான் கல்யாணம் செய்து கொண்டது பெரும் • பிசகு, சூரியா! எங்கள் இருவருக்கும் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லை. இவர் யாராவது ஒரு வெள்ளைக்காரிச்சியையோ பார்ஸிக்காரியையோ கல்யாணம் செய்து கொண்டிருக்க வேண்டும். உன்னுடைய சிநேகிதி தாரிணி இருக்கிறாளே அவளைப் போல் ஒருத்தியையாவது.....''

''பிறரைப் பற்றி நாம் எதற்காகப் பேச வேண்டும் சீதா!''


''பேசாமல் என்ன செய்வது? என்னுடைய வழிக்கு அவர்கள் வராமல் இருந்தால் நானும் பேச வேண்டியதில்லை. அந்தத் தாரிணியும் என் மாமியாரும் சேர்ந்து எனக்கு விஷம் கொடுத்துக் கொல்லப் பார்த்தார்கள், சூரியா! அதுவும் நான் படுத்த படுக்கையாய்க் கிடந்த போது! என் மாமியாரைப் பற்றி எவ்வளவோ மேலாக நான் எண்ணியிருந்தேன். அவள் எப்பேர்ப்பட்ட ராட்சஸி என்று கொஞ்ச நாளைக்கு முன்புதான் தெரிந்தது.''

''உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா, சீதா! நீ சாகக் கிடந்த போது அவர்கள் இருவரும் உனக்கு இரவு பகல் பணிவிடை செய்து உன்னைக் காப்பாற்றினார்கள். அவர்களைப் பற்றி இவ்வளவு கொடுமையாகப் பேசுகிறாயே!''

''அவர்கள் பணிவிடை செய்து என்னைக் காப்பாற்றியது உனக்கு எப்படித் தெரியும்? அவர்கள் சொல்லித்தானே தெரியும்? நான் அவ்வளவு அறிவற்றவள் அல்ல. ஒரு நாள் இரவு தாரிணியும் மாமியாரும் கூடிக் கூடி இரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு, டாக்டர் வழக்கமாகக் கொடுத்த மருந்தில் இன்னொரு வெள்ளைப் பவுடரைத் தாரிணி கலந்து கொடுத்தாள். நான் பார்க்கவில்லை என்று நினைத்துக் கொண்டு செய்தாள். எனக்கும் அப்போது உண்மை தெரியாது. மருந்தைச் சாப்பிட்டுவிட்டேன். சற்று நேரத்துக்கெல்லாம் கண்ணைச் சுற்றிக் கொண்டு மயக்கமாய் வந்தது. கொடுத்த விஷம் போதவில்லைபோல் இருக்கிறது. காலையில் எப்படியோ பிழைத்து எழுந்தேன். அது முதல்

ஜாக்கிரதையாகி விட்டேன். தாரிணி மருந்து கலந்து கொடுத்தால் அதைச் சாப்பிடுவதாக ஜாடை செய்து எச்சில் பாத்திரத்தில் கொட்டிவிடுவேன். அப்போது இன்னும் என் மனத்தில் கொஞ்சம் சபலமிருந்தது. இப்போது அதுவும் போய்விட்டது. துப்பாக்கியால் சுட்டுக் கொண்டு நான் சாவது உனக்குப் பிடிக்காவிட்டால் தாரிணியைக் கேட்டுக் கொஞ்சம் விஷம் வாங்கிக் கொண்டு வந்து கொடு!''

''அத்தங்கா! உண்மையிலேயே உனக்குப் பைத்தியந்தான் பிடித்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு படுபாதகமான வார்த்தையைச் சொல்லியிருக்க மாட்டாய். உனக்குச்



சுரமாயிருந்தபோது தூக்கமில்லாமல் கஷ்டப்படுகிறாயே என்பதற்காக அவர்கள் யோசித்துத் தூக்க மருந்து கொடுத்திருப்பார்கள்......''

''ஆமாம்; ஒரேயடியாய்த் தூங்குவதற்குத்தான் மருந்து கொடுத்தார்கள். ஆனால் அதற்கு வேண்டிய அளவு கொடுக்கவில்லை. ஆகையால் விழித்துக் கொண்டுவிட்டேன்!''

''அப்படி உனக்குச் சந்தேகமாயிருந்திருந்தால் உடனே உன் புருஷனிடம் சொல்லியிருக்கலாமே?''

''சொல்லியிருக்கலாம்; அவர் நம்பியிருக்கமாட்டார். உன் அருமை அத்தங்காளின் பேச்சை நீயே நம்பவில்லையே? திரும்பத் திரும்பப் பேசிப் பயனில்லை. நான் அநாதை; திக்கற்றவள்! என் பேச்சை யாரும் நம்பப் போவதில்லை. நீ எதற்காக வந்தாய்? உன் காரியத்தைப் பார்த்துக் கொண்டு நீ போ!'' என்று சீதா சொல்லிக் கலகலவென்று கண்ணீர் உதிர்த்தாள்.

''என் காரியத்தைப் பார்த்துக் கொண்டு போகிறதாயிருந்தால் நான் எவ்வளவோ முக்கியமான காரியங்களை விட்டுவிட்டு ஆயிரம் மைல் பிரயாணம் செய்து வந்திருக்க மாட்டேன். என்னுடைய காரியத்தை மட்டுமல்ல; தேசத்தின் காரியத்தைக்கூட விட்டு விட்டு வந்திருக்கிறேன். நீ எப்படியாவது சந்தோஷமாயிருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை. அதற்கு என்ன வழி என்று சொல். உன் புருஷனிடம் உனக்கு என்ன குறை என்று சொன்னால், அவனையே கேட்டு விடுகிறேன். என் தலையை அவன் இறக்கிவிட மாட்டான். அவனிடம் எனக்குப் பயம் ஒன்றும் கிடையாது...''

''உனக்குப் பயமில்லை; ஆனால் எனக்குப் பயமாயிருக்கிறது. அவரிடம் நீ பேசுவதினால் எனக்கு நல்லது ஒன்றும் விளையாது! உன் பேரில் வரும் கோபத்தை என் பேரில் வைத்துத் தாக்குவார். எனக்கு அவர் பேரில் என்ன குறை என்று கேட்கிறாய். என்னுடைய மனக் குறையைச் சொன்னால் உனக்குப் புரியவே புரியாது. பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்கே புரியவில்லை! உனக்கு எப்படிப் புரியும்? 'பார்ட்டிக்கு வா!' என்று சொல்லி அழைத்துப் போகிறார். அங்கே முப்பது ஸ்திரீகளுக்கு முன்னால் என்னை அவமானப் படுத்துகிறார். நான் எவ்விதமாக நடந்து கொண்டாலும் அது தப்பாகப் போய்விடுகிறது. நான் கலகலப்பாக நாலு பேரிடம் பேசிக் கொண்டிருந்தால் 'சுத்த அதிகப் பிரசங்கி! உன் அசட்டுத்தனத்தை எதற்காக இப்படிக் காட்டிக் கொள்கிறாய்? வாயை மூடிக் கொண்டு சும்மா இருக்கக் கூடாதா? என் மானம் போகிறதே!' என்கிறார். இப்படி அவர் சொல்கிறாரே என்பதற்காகப் பேசாமலிருந்தால், 'ஏன் இப்படி எதையோ பறி கொடுத்தவளைப் போல் இருந்தாய்? நாலு பேரிடம் கலகலப்பாகப் பேசத் தெரியாத ஜன்மத்தைக் கல்யாணம் செய்து கொண்டேனே?' என்கிறார். சிரிக்காவிட்டால் 'நகைச் சுவையை அறியாத நிர்மூடம்!' என்கிறார். துக்கம் தாங்காமல் மூலையில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தால், 'இங்கேயிருந்து ஏன் என் பிராணனை வாங்குகிறாய்? எங்கேயாவது தொலைந்து போ!' என்கிறார். 'தொலைந்து போ!' என்ற வார்த்தையைக் கேட்டுக் கேட்டு என் மனம் புண்ணாகிவிட்டது! நான் எங்கே தொலைந்து போவேன்? எனக்குப் போக்கிடம் எங்கே இருக்கிறது? ஒரேயடியாக இந்த உலகத்திலிருந்து தொலைந்து போவதைத் தவிர வேறு வழி ஒன்றுமில்லை. அம்மாஞ்சி, அந்தத் துப்பாக்கியைக் கொடுத்து விட்டுப் போ!''

''அத்தங்கா! உயிரை விடுகிற பேச்சை மறந்துவிடு! அப்படி நீ அநாதையாய்ப் போய்விடவில்லை. நான் ஒருவன் இருக்கிற வரையில் உன்னை 'அநாதை'யாக விட்டுவிடமாட்டேன். எப்பேர்ப்பட்ட கஷ்டமாயிருந்தாலும் அதற்குப் பரிகாரம் ஏதாவது இல்லாமற் போகாது. கொஞ்ச நாட்கள் நீ பொறுத்துக் கொண்டிரு! நான் யோசித்து ஏதாவது ஒரு பரிகாரம் கண்டு பிடிக்கிறேன்.''

''ஒரு நாள்கூட என்னால் இனிமேல் பொறுக்க முடியாது. நான் உயிரோடு இருக்க வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஆனால் அந்த வழி உனக்குச் சம்மதமாயிராது.''

''அது என்ன வழி என்று சொல்! என்னால் முடியுமா என்று பார்க்கிறேன்.''

''என்னை இங்கேயிருந்து அழைத்துக் கொண்டு போ! இந்த டில்லி நகரம் எனக்கு நரகமாகிவிட்டது; இந்த நரகத்திலிருந்து என்னை அழைத்துக் கொண்டு போ! இந்த வீடு எனக்குச் சிறைச்சாலையாகி விட்டது; இந்தச் சிறையிலிருந்து என்னை விடுவித்துக் கொண்டு போ! நீ பார்த்து என்னை எங்கே அழைத்துக் கொண்டு போனாலும் வருகிறேன். பம்பாய்க்கு, கல்கத்தாவுக்கு, லாகூருக்கு, இலங்கைக்கு, லண்டனுக்கு, அமெரிக்காவுக்கு—எங்கே


ஆண்மை—
திடவடிவம்,
தீரம், திறமை,
கம்பீரம்.
ஆண்மையின்
பன்முகப்
பண்புகளைப்
படித்தறிந்த
படைப்பு
'எஸ்டர்காட்'
எஸ்டர்காட்®
ஆண்மகன் இதோ ஆளவருகிறான். எங்கும் அவன் செங்கோல். 'எஸ்டர்காட்' அவன் உடுப்பு.
'எஸ்டர்காட்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் சூட்டிங்குகள். தவிர, 'மெஃப்ரின்' 100% பாலியெஸ்டர் சேலைகள், பாலியெஸ்டர் இழைகலந்த உடுப்புத் துணிகள்; 'டெரோஸெல்' பாலியெஸ்டர் இழைகலந்த காட்டன் ஷர்ட்டிங்குகள்.
மபத்லால் க்ரூப்
AIYARS-M.300 TM



'ஆம் ஜானகி, எனக்குத் தெரிந்த ஆரோக்கியமுள்ள குடும்பங்களில் அனைவரும் 'ஹார்லிக்ஸ்' பருகுகின்றனர். ஊட்டத்தின் முக்கிய. ஆதாரமே அதுதான்'



ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்

என்கிறார் ஜானகியின் டாக்டர்.

அவர் 'ஹார்லிக்ஸ்' தரும் சிறந்த ஊட்டத்தின் குணங்களைப்பற்றி நன்கு அறிந்தவர். ஜீவாதாரமான புரதம் மற்றும் பால், கோதுமை, மால்டெட் பார்லி, இவை தரும் ஊட்டச் சிறப்பும் இயற்கைச் சத்துக்களும் அடங்கியதால் 'ஹார்லிக்ஸ்' நிகரற்று விளங்குகிறது. உதாரணமாக, பாலிலிருக்கும் ஊட்டச் சத்தை இருமடங்காகப் பெருக்குகிறது 'ஹார்லிக்ஸ்'.

குடும்பத்தினரின் ஆரோக்கியத்தைப் பொறுத்த வரையில் மிகச் சிறந்ததென கருதப்படுவது 'ஹார்லிக்ஸ்' தான்.

'ஹார்லிக்ஸ்'—ஒரு பதிவு பெற்ற ட்ரேட் மார்க்.

முழுமையான ஊட்டம் பெற—'ஹார்லிக்ஸ்'

வேணுமானாலும் உன்னோடு புறப்பட்டு வரத் தயாரா யிருக்கிறேன்.....!''

''அந்த மாதிரி நாம் இருவரும் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போனால் உன் புருஷனும் சரி, மற்றவர்களும் சரி, என்ன நினைத்துக் கொள்வார்கள்? ஏதாவது தப்பாக எண்ணிக் கொள்ள மாட்டார்களா? வீண் சந்தேகத்துக்கு இடமாயிராதா? இதைப் பற்றி நீ யோசித்துப் பார்த்தாயா?'' என்றான் சூரியா.

''தப்பாக எண்ணிக் கொண்டால் எண்ணிக் கொள்ளட்டும். சந்தேகப் பட்டால் படட்டும். எனக்கு அதைப் பற்றி அக்கறையில்லை. மூன்று மாதத்துக்கு முன்னால் இவர் என்ன செய்தார் தெரியுமா? யாரோ ஒரு பெண்ணுடன் காரில் ஏறிக் கொண்டார். பானிப் பெட்டுக்குச் சமீபத்தில் இவருடைய காரும் ஒரு மிலிடெரி லாரியும் மோதிக் கொண்டன. இவருக்குக் காயம் ஒன்றுமில்லை. ஆனால் அந்தப் பெண்ணுக்குக் காயம். இந்த விஷயம் புதுடில்லி எல்லாம் சிரிப்பாய்ச் சிரித்தது. அதற்காக அவரை யார் என்ன செய்துவிட்டார்கள்? புருஷர்கள் மட்டும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எந்தச் சட்டத்தில் சொல்லியிருக்கிறது?''

''அத்தங்கா! அந்த மாதிரி சட்டம் ஒன்றும் கிடையாது. தப்பான காரியத்தைப் புருஷன் செய்தாலும் பிசகுதான்; பெண் செய்தாலும் பிசகுதான். ஆகையினால்தான் நீ சொல்லுவதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அத்தங்கா! அப்படி ஒரு காலம் வந்தால், அதற்கு அவசியம் ஏற்பட்டால், நீ குறிப்பிட்ட இடத்துக்கெல்லாம் உன்னை அழைத்துப் போகிறேன். ஆனால் அதற்கு இப்போது சமயம் அல்ல. இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் நான் ஈடுபட்டிருக்கிறேன். 'இந்தியா சுதந்திரம் அடையும் வரையில் நான் வேறு காரியத்தில் பிரவேசிப்பதில்லை' என்று பல நண்பர்களின் மத்தியில் சபதம் செய்திருக்கிறேன். இந்தியா சுதந்திரம் அடையட்டும். அதற்குப் பிறகு....''

''சூரியா! இந்தியாவின் சுதந்திரப் போரில் ஸ்திரீகளுக்குப் பங்கு எதுவும் இல்லையா? தாரிணி செய்து புரட்டுகிறதை நான் செய்து புரட்ட மாட்டேனா? நான் ஒன்றுக்கும் லாயக்கற்றவள் என்று இவரைப் போல் நீயும் நினைக்கிறாயா? நீ மட்டும் என்னை அழைத்துக் கொண்டு போ! நான் எப்பேர்ப்பட்ட காரியம் எல்லாம் செய்கிறேன் என்று பார்! 'சுதந்திரம்', 'சுதந்திரம்' என்று சொல்லிக்கொண்டு நீங்கள் என்ன செய்கிறீர்கள்? சந்து பொந்திலும் ஒளிந்து கொண்டிருக்கிறீர்கள். வேஷம் போட்டுக் கொண்டு ஊரையும் பேரையும் மாற்றி வைத்துக் கொண்டு இராத்திரி வேளை பார்த்து அங்குமிங்கும் அலைகிறீர்கள். என்னை மட்டும் நீ அழைத்துக் கொண்டு போ! ஜான்ஸி ராணியைப் போல் கையில் வாள் பிடித்துக் குதிரை மீதேறி யுத்த களத்துக்குச் சென்று யுத்தம் செய்கிறேன். தேசமெங்கிலும் திரிந்து சுதந்திரப் போருக்கு ஆயிரம் பதினாயிரம் வீரர்களைத் திரட்டுகிறேன். கோழைகளை வீரர்களாக்குகிறேன். பிரான்சு தேசத்து ஜோன் ஆப் ஆர்க் என்னும் வீரப் பெண்மணியைப் போல் இந்தியாவின் சுதந்திரத்தை நான் நிலைநாட்டுகிறேனா இல்லையா, பார்!''

''சீதா! ஜான்ஸி ராணியைப் போலும் ஜோன் ஆப் ஆர்க்கைப் போலும் சுதந்திரப் போர் செய்யும் காலம் இது அல்ல. ஆகாச விமானத்திலிருந்து குண்டு போட்டு ஆயிரம் பதினாயிரம் ஜனங்களைக் கொல்லும் காலம் இது. இங்கிலீஷ் சர்க்காரோடு பகிரங்கமாகச் சண்டை போட்டுச் சுதந்திரத்தை நிலைநாட்ட முடியாது. இந்தத் தேசத்தில் இப்போது பகிரங்கமாக ஒரு பொதுக்கூட்டம் கூட்ட முடியாது. 'இன்குலாப் ஜிந்தாபாத்' என்று கோஷிக்க முடியாது. எப்படிப் படை திரட்டுவது? யுத்த களத்துக்குப் போவது? காலத்துக்குத் தகுந்த முறையை அனுசரிக்க வேண்டும்.''

''அப்படியானால் ஒன்று செய்! என்னை அழைத்துக் கொண்டு போய்க் காந்தி மகாத்மாவின் ஆசிரமத்தில் விட்டுவிடு! அங்கே என்னைப் போல் கஷ்டப்பட்டவர்களும் அநாதைகளும் பலர் இருப்பதாக அறிகிறேன். சீமையிலிருந்து வந்த வெள்ளைக்காரிகூட ஒருத்தி இருக்கிறாளாம்! முஸ்லிம் பெண் ஒருத்தி இருக்கிறாளாம்! அவர்களைப் போல் நானும் மகாத்மா இட்ட கட்டளையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு என்னை வந்து அழைத்துக் கொண்டு போ!''

''அத்தங்கா! மகாத்மா சிறையில் இருக்கிறார். அவருடைய ஆசிரமத்தில் இப்போது யார் இருக்கிறார்களோ, தெரியாது. புதிதாக யாரையும் ஆசிரமத்தில் சேர்த்துக் கொள்ளமாட்டார்கள்.''

''அப்படியானால் ஒன்று செய், சூரியா! என்னை எங்கேயாவது ஒரு நல்ல சினிமாக் கம்பெனியில் கொண்டு போய்ச் சேர்த்துவிடு! சினிமாவில் நான் எப்படி நடித்துப் பெயர் வாங்குகிறேன்,

பார்! எத்தனையோ தமிழ் சினிமாவும், ஹிந்தி சினிமாவும் பார்த்திருக்கிறேன். ஒன்றிலாவது சோகமான கட்டங்களில் நடிக்க யாருக்கும் தெரியவில்லை. சினிமாவில் நடிக்க எனக்கு ஒரு சான்ஸ் கிடைத்தால் சோக நடிப்பில் இணையற்ற நட்சத்திரம் என்று பெயர் வாங்கிவிடுவேன்! என்ன சொல்கிறாய், சூரியா!''

சூரியா எதுவும் சொல்ல முடியாமல் திகைத்துப் போயிருந்தான். ஜான்ஸி ராணி எங்கே, மகாத்மாவின் ஆசிரமம் எங்கே, சினிமா நட்சத்திரம் எங்கே! சேர்ந்தாற்போல் இந்த மூன்று காரியங்களிலும் ஆசை செலுத்தும் தன் அத்தங்காளின் மனநிலை அவனுக்கு அளவில்லாத வியப்பை அளித்தது. சீதாவுக்கு உண்மையிலேயே கொஞ்சம் சித்தப் பிரமை ஏற்பட்டிருக்க வேண்டும் என்று நினைத்தான். ஆகையால் இன்றைக்கு ஏதாவது சமாதானமாகச் சொல்லிவிட்டுப் போகலாமென்றும், நாளைக்குத் தாரிணியைக் கேட்டுக் கொண்டு தீர்மானிக்கலாம் என்றும் முடிவு செய்தான்.

''அத்தங்கா! எனக்குச் சினிமா விஷயம் ஒன்றும் தெரியாது; சினிமாக்காரர்களையும் தெரியாது. ஆகையால், நீ கடைசியாகச் சொன்னதும் முடியாத காரியம். ஆனால் சில நாளைக்கு நீ வேறு எங்கேயாவது போய் இருக்க வேண்டும் என்றால், அதற்கு இடமில்லாமற் போகவில்லை.

''சொல்லுகிறேன், கேள். தேவப்பட்டணத்தில் எனக்கு இரண்டு சிநேகிதர்கள் உண்டு என்று உனக்குத் தெரியும் அல்லவா? ஒருவன்தான் லலிதாவின் கணவன் பட்டாபிராமன். இன்னொருவன் பட்டாபிராமன் வீட்டுக்கு எதிர் வீட்டு அமரநாதன். அவனும் அவனுடைய மனைவி சித்ராவும் கல்கத்தாவில் இருக்கிறார்கள். நான் தேவப்பட்டணம் போயிருந்த போது அவர்களும் தற்செயலாக வந்திருந்தார்கள். அமரநாதனும் அவன் மனைவியும் ரொம்ப நல்லவர்கள். சித்ராவுக்கு உன்னைப் பற்றி லலிதா எல்லாம் சொல்லி .யிருக்கிறாள். என்னுடைய யோசனை என்ன தெரியுமா? உன்னைப் பக்கத்து ஸ்டேஷன் எதற்காவது அழைத்துப் போய் ரயில் ஏற்றி விட்டுவிடுகிறேன். நீ கல்கத்தாவுக்குப் போய், அமர்நாத் — சித்ரா வீட்டில் சில காலம் நிம்மதியாக இரு. அதற்குள் இங்கே உன் புருஷன் என்ன செய்கிறான் என்பதை நான் கவனித்துக் கொண்டிருக்கிறேன். அவசியம் ஏற்பட்டால் நீ போயிருக்கிற இடத்தைச் சொல்லுகிறேன்.''

''அதுதான் கூடாது; நான் எங்கே போனேன் என்ன ஆனேன் என்பது அவருக்குத் தெரியவே படாது. இவர் என்னைத் தேடி அலைந்து கவலைப்பட வேண்டும். எனக்கு இஷ்டமானபோது தெரிவித்துக் கொள்வேன். சூரியா! நான் கல்கத்தாவுக்குப் போகத் தயார். ஆனால் இன்றைக்கோ நாளைக்கோ என்னை நீயே அழைத்துப் போக வேண்டும். இங்கே நாளைக்குப் பிறகு என்னால் இருக்க முடியாது. தனியாகப் போகவும் முடியாது. ஒரு வேளை என்னை நீ அழைத்துப் போவது உன்னுடைய சிநேகிதி தாரிணிக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அவளிடம் உனக்குப் பயமாயிருந்தால் அதையும் இப்போதே சொல்லிவிடு!''

''சீதா! என்னென்னமோ விசித்திரமான எண்ணங்கள் உன் மனத்தில் குடிகொண்டிருக்கின்றன. எனக்கு யாரிடத்திலும் பயம் கிடையாது. நாம் செய்கிற காரியம் நமக்கே சரியாயிருக்க வேண்டுமல்லவா? ஆகையால் கொஞ்சம் யோசிப்பதற்கு அவகாசம் கொடு!'' என்றான் சூரியா.

''பேஷாக யோசித்துச் சொல்! செய்கிற யோசனையை இங்கேயே செய்துவிடு! இத்தனை நாட்கள் கழித்து அம்மாஞ்சி வந்திருக்கிறாய்; தாகத்துக்குத் தண்ணீர் வேண்டுமா என்றுகூட நான் கேட்கவில்லை. இதோ உள்ளே போய்க் கொஞ்சம் ஓவல்டின் கலந்து கொண்டு வருகிறேன். அது வரையில் யோசனை செய்து கொண்டிரு!'' என்று சொல்லிவிட்டுச் சீதா சமையலறைக்குள்ளே போனாள்.

சூரியாவின் உள்ளம் பெரும் கலக்கத்தில் ஆழ்ந்தது. 'இது என்ன! இவ்வளவு பயங்கரமான பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டுவிட்டோமே! இது சரியாக முடியுமா? அல்லது கேடாக முடியுமா?' என்று அவன் மனம் தத்தளித்தது. இந்த நெருக்கடியிலிருந்து எப்படியாவது தப்பித்துக் கொள்ள முடியுமா என்று யோசித்தான். இந்தச் சமயத்தில் டெலிபோன் மணி அடித்தது.

வேறு சிந்தனையில் ஆழ்ந்திருந்த சூரியாவின் மனத்தில் இரவு பன்னிரண்டு மணிக்கு மேலே யார் டெலிபோனில் பேசுவார்கள் என்ற யோசனை கூடத் தோன்றவில்லை. ரிஸீவரைக் கையில் எடுத்துக் கொண்டு, ''ஹலோ! யார் அது?'' என்று கேட்டான்.

டெலிபோன் மணிச் சத்தத்தைக் கேட்டுவிட்டுச் சீதா சமையல் உள்ளே யிருந்து பரபரப்புடன் வந்தாள். சூரியா ரிஸீவரை எடுத்துப் பேசுவதைப் பார்த்ததும் அவள் முகத்தில் பீதியின் அறிகுறி தோன்றியது. (தொடரும்)


Lakmé
லக்மே அய் மேக்-அப்
மென்மையானது இளமைத் தோற்றம் தருவது
கண்களுக்குப் புத்தழகு ஊட்டுவது.
Lakmé
4
2
5
3
1
1 அகலமான மிருதுவான கண்களுக்கு—விரைவில் உலரும் லக்மே அய்-லைனர். இது ப்ளாக் வெல்வெட், காபி ப்ரவுன், டவ் க்ரே வண்ணங்களில் வருகிறது. அய்-லைனர் ப்ரஷ் உபயோகியுங்கள்.
2 லக்மே அய்-ஷாடோ: மென்மையான மனம் கவரும் சாயல்கள். ப்ளம் ப்ளு, ஜேட் க்ரீன், லாவெண்டர்.
3 லக்மே ஃபோர்-இன்-ஒன் அய்-ஷாடோ: நான்கு வண்ணங்கள்
4 நீண்ட, தடித்த, பட படக்கும் கண்ணிமைகளுக்கு லக்மே மஸ்காரா. கறுப்பு, பழுப்பு—இரு வண்ணங்கள்.
5 மெல்லிய உருவுள்ள கண்களுக்கு—மிருதுவான இறகு போன்ற புருவங்களுக்கு லக்மே அய்-பென்சில் உபயோகியுங்கள். கறுப்பு வண்ணத்தில் இரு சைஸ்களில் கிடைக்கிறது.
ASP/L-103

தலையாய கேச ஸ்டைல் கலைஞர்களின் சிபாரிசு:

ட்ரு-டோன்

ஹேர் டைய்

ஆண் பெண்களுக்கென, உலகில் உன்னத விற்பனை உடைய கேசச் சாயத்தைத் தயாரிப்போரின் படைப்பு.



"எத்தனையோ கேசச் சாய முறைகளை கோட்டம் பார்த்து விட்டோம். கேசத்திற்கு இயற்கை மெருகும் பளபளப்பும் அளித்து எளிதில் இளமைக் களையை மீட்பது ட்ரு-டோன். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் சிபாரிசு செய்வது ட்ரு-டோன் அன்றி வேறில்லை. இத்தகைய அருமையான தயாரிப்பு ஒன்று உருவாக்கிய உங்களுக்கு நன்றி."

(அல்பி)
லேகக் ஹேர் ஸ்டைலிஸ்ட்,
123 மவுண்ட் ரோடு, சென்னை-6.

ட்ரு-டோன் உங்கள் கேசத்திற்கு உயிர்த் துடிப்புள்ள இளமைப பொலிவூட்டுகிறது □ ஒருசீராகப பரவியமைகிறது, உடனடியாக செயல்படுகிறது □ இயற்கை மெருகும் பளபளப்பும் அளிக்கிறது □ அடிக்கடி கழுவினாலும் மங்கவோ நிறம் மாறவோ செய்யாது




தயாரிப்போர்:
ஜே.கே.ஹெலன் கர்ட்டிஸ் லிட்,
பம்பாய்.1

ஹெலன் கர்ட்டிஸ்
லண்டன் * பாரிஸ் * நியூ யார்க்

தவிரவும் கிடைப்பவை: ஹேர் டைய் உபயோகிப்போருக்கென, தனித்திறமுடன் தயாரிக்கப்பட்ட ட்ரு-டோன் ஸ்டெயின் ரிமூவர், ட்ரு-டோன் ஷாம்பூ

ARMS-HC 4472.80.D TM

மருத்துவத்துறை முன்னேற்றங்கள்



சமீபத்தில் சென்னையில் உள்ள பெரிய அரசாங்க மருத்துவமனை — ஜெனரல் ஆஸ்பத்திரி — எவ்வளவோ நவீன வைத்திய சாதனங்களைப் பெற்று முன்னேறி வருகிறது. மூளை — நரம்பு சம்பந்தமான பிரிவும் இருதயநோய் சிகிச்சைப் பிரிவும் நவீன யந்திர சாதனங்களைப் பெற்றன.

இப்பொழுது டாக்டர் பி. சத்தியநாராயணா மேற்பார்வையில் இயங்கி வரும் காது—மூக்கு — தொண்டைப் பிரிவு பல நவீன சாதனங்களைப் பெற்றிருப்பதோடு, இந்தத் துறையில் மேற்படிப்புக்கும், வைத்திய ஆராய்ச்சிக்கும் உரிய ஒரு தனிக் கழகமாகவே உயர்த்தப்பட்டிருக்கிறது. இத்துறையில் இப்படியொரு கழகம் ஏற்படுத்தப்படுவது இந்தியாவிலேயே இதுதான் முதல் தடவை.

தொண்டைக்கும் காதுக்கும் மூக்குக்கும் தொடர்புள்ளது என்பது சர்வ சாதாரணமாக யாருக்கும் தெரிந்த விஷயம். தொண்டையில் ஒரு புண் ஏற்பட்டால் சில சமயம் காதையும் மூக்கையும் பாதிப்பதை பார்ப்போம். நாம் சில சமயம் தொண்டையில் ஏதோ கோளாறு என்று நினைப்போம். அது உண்மையில் காதில் கோளாறாகவே இருக்கும்.

ஊமைக் குழந்தைகளை எடுத்துக் கொள்வோம். அவன் குரல் வளையில் ஏதோ கோளாறு என்று நாம் நினைப்போம். உண்மையில் காது கோளாறினாலேயே பேச்சு வராமல் கஷ்டப்படுகிறது. ஊமையாக இருக்கிறது.



இக்கழகத்தில் திடீரென்று காது செவிடாகப் போதல், காதில் எப்போதும் சீழ் வழிதல் போன்ற நோய்களுக்குச் சிகிச்சை செய்வதைத் தவிர, பிறவியிலிருந்து காது கேளாமல் செவிடாகி, ஊமையாகி வாழும் குழந்தைகளுக்குப் புனர் வாழ்வளிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. அவர்களுக்கு ஓரளவாகிலும் காது கேட்கச் செய்தும், அவர்களைப் பேசச் செய்தும், பயனுள்ள பிரஜைகளாக்குவதில் கருத்துச் செலுத்தப்படுகிறது. இதுதான் இந்தக் கழகத்தின் சிறப்பு அம்சம்.

காது செவிடு என்பது எல்லோருக்கும் ஒன்றுபோல் இல்லை. ஒருவருக்கு ஓர் அடி தூரத்திலிருந்து சத்தம் போட்டால்கூடக் கேட்காமல் இருக்கும். ஒரு சிலருக்குப் பத்து அடி தூரத்துக்கு அப்பால் போடப்படும் சத்தம்தான் கேட்காமலிருக்கும். இப்படி ஒவ்வொருவரின் கேட்கும் சக்தி ஒவ்வொரு வகையாக இருக்கும். இவற்றை முன்பெல்லாம் ஏதோ ஓர் உத்தேசமாகத்தான் கணிப்பார்கள். இப்பொழுது மிகத் துல்லியமாகக் கணிக்கும் யந்திரங்கள் வந்துள்ளன. குழந்தையைக் கொஞ்சங்கூடச் சத்தம் புகாத இடத்தில் விட்டு, மிகத் துல்லியமாக அதன் கேட்கும் சக்தியை - ஆடியோ மெட்ரிக் டெஸ்ட் என்ற பரிசோதனைமூலம் - கணித்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு அதன் சக்திக்கேற்ற 'ஹியரிங் எய்ட்' (கேட்க உதவும் யந்திரம்) கருவியைக் காதில் பொருத்திக் குரலைக் கேட்கப் பழக்கியும் பேசப் பழக்கியும் புனர்வாழ்வு அளித்து விடுகிறார்கள்.

ஓயாமல் சிகரெட் பிடிப்பதாலும், புகையிலை போடுவதாலும், வேறு பல காரணங்களாலும்,

மேலே: குழந்தையின் கேட்கும் சக்தியைக் கணித்தல்.

கீழே: மூக்கு பரிசோதனை.

தமிழ் இலக்கியத்தில் கனிப் பண்பும், கலை யும் மிக்க பாடல்களை ரசிக்கும்போது நாம் பெற்ற இன்பத்தை நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். □

அடுத்த இதழில்

மீ.ப. சோமு எழுதும்

இலக்கிய மலர்கள்

ஆரம்பம்

தொண்டையில் ஸிலருக்குப் புற்றுநோய் போன்ற கொடியநோய் ஏற்பட்டுவிடுகிறது. புற்றுநோயை நீக்கத் தொண்டையில் சஸ்திர சிகிச்சை செய்ய வேண்டியதன் காரண மாகவோ அல்லது நோயின் காரணமாகவோ அவர்கள் பேசுவதற்குப் பயன்படும் முக்கிய உறுப்புக்களை இழந்துவிடுகிறார்கள். இப்படிப் பேசும் சக்தியை இழந்துவிடும் நோயாளிகளை மீண்டும் பேசப் பழக்கும் ஆச்சரியமான திட்டமும் இங்கு நடைபெறுகிறது.

காற்று, மூக்கின் வழியாக உட்புகுந்து, தொண்டைப் பகுதியில் குரல் வளையின் வழி யாகச் சென்று மார்பிலுள்ள சுவாசப் பையை அடைகிறது. குரல் வளை துண்டிக்கப்பட்ட வுடன் மூக்குக்கும், சுவாசப் பைக்கும் உள்ள குழாய்த் தொடர்பு அற்றுப் போகிறது. கழுத்தில் ஒரு துவாரம் அமைத்து, சுவாசக் காற்று போக வர வசதி செய்துவிடு கிறார்கள்! குரல் வளையை இழந்த நோயாளி பேச்சுச் சக்தியையும் இழந்து விடுகிறார். அப் படிப்பட்டவருக்குத் தாடையையும் நாக்கை யும் மேலண்ணத்தையும் பயன்படுத்தி, வயிற்றிலிருந்து காற்றை இழுத்துப் பேசப் பயிற்சி அளிக்கிறார்கள். குரல் வளை இழந்த வர் சர்வ சாதாரணமாகப் பேசப் பழகுகிறார்.

இந்தக் காது–மூக்கு – தொண்டை சம்பந் தப்பட்ட சிகிச்சைத் துறையில் டாக்டர் வி. சத்யநாராயணா உலகப் புகழ் நாட்டி யிருக்கிறார். அவருடைய ஆராய்ச்சிக் கட் டுரைகளை உலக டாக்டர்கள் பாராட்டியிருக் கின்றனர். சஸ்திர சிகிச்சையில் விந்தைகள் புரிந்திருக்கிறார். அவருடைய சலியா உழைப் பைப் பாராட்டும் விதமாகவே அவரை டைரக்டராகவும் பேராசிரியராகவும் கொண்டு இந்தக் கழகம் ஏற்பட்டுள்ளது. டாக் டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் போன்ற வர்களே டாக்டர் சத்யநாராயணாவின் சேவையை மனமாரப் பாராட்டும்போது நாம் என்ன சொல்ல இருக்கிறது?

✲ ✲

சென்னை அரசாங்கப் பொது மருத்துவ மனையில் ரேடியோலஜி பிரிவில் ஒரு புது முன்னேற்றம் சமீபத்தில் ஏற்பட்டுள்ளது.

அணுசக்தியை ஆக்க முறையில் பயன் படுத்த வேண்டும் என்று கூறப்படுகிறது. அவ்வகையில் அணுசக்தியிலிருந்து கிடைக்கும் 'ஐஸோடோப்'புகளை, நோயின் தன்மையைத் தெரிந்து கொள்ளப் பயன்படுத்த முடிகிறது.

சில உடல் நோய்களின் தன்மைகள் மிக விசித்திரமானவை. ஒருவர் தலைவலி என்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தால், அதற்குக் காரணம் தலைப் பகுதியில் இராது. ஜீரணப் பகுதியில் இருக்கும்! நோயின் புற விளைவு களைப் பார்த்தே அதன் மூல காரணத்தைக் கண்டுபிடிப்பது சில சமயங்களில் சாத்திய மில்லாமல் போகலாம். இது போன்ற தருணங் களில் ஐஸோடோப்புகள் உதவுகின்றன.

உடலுக்குள் ஊசி இஞ்செக்ஷன் மூலம் ஐஸோடோப்புகளைச் செலுத்தினால் உடலுக் குள் எந்தப் பகுதி நோயுற்றிருக்கிறதோ, அந்தப் பகுதியில் அவை தங்கி, எந்த அள வுக்குப் பழுதுபட்டிருக்கிறது என்பதையும் வெகு துல்லியமாகக் காட்டி விடுகின்றன.

அது மட்டுமன்றிப் புற்றுநோய் போன்ற கடுமையான நோய்களுக்கு மருந்தாகவும் பயன்படுகின்றன ஐஸோடோப்புகள்.

தைராய்டு சுரப்பிகள், கல்லீரல், நுரை யீரல், சிறுநீரகம், மூளை முதலியவற்றின் அமைப்பு, இயக்கத் திறன் ஆகியவற்றை வெகு துல்லியமாகக் கணக்கிட முடிகிறது, ஐஸோடோப்புகளின் உதவியால்.

விரைவில் கல்பாக்கத்தில் ஏற்படவிருக் கும் அணுசக்தி நிலையத்திலேயே இந்த ஐஸோடோப்புகள் கிடைக்கும்.

ஐஸோடோப்புகள் உடலில் சென்று கண் டறியும் செய்திகளைப் பதிவு செய்து தரக் கூடிய யந்திர சாதனங்கள் ஹைதராபாத்தில் உள்ள எலெக்ட்ரானிக்ஸ் கார்ப்பொரேஷனில் தயாரிக்கப்படுகின்றன.

இப்படி எல்லாம் உள்நாட்டிலேயே கிடைக் கும் சாத்தியக்கூறுகளை நினைத்துப் பார்க்கும் போது யாருக்குமே பெருமிதம் ஏற்படும்.

வைத்தியத் துறைக்குப் பேருதவியாக விளங்கும் ரேடியோலஜித் துறைக்கு இன்று டைரக்டராக விளங்குகிறார் டாக்டர் கஜராஜ். அவரது பதவிக் காலத்தில் இந்தத் துறை இங்கு மேலும் மேலும் வளர வாழ்த்து கிறோம்.

— எல். வி. எல்.


அன்னத்தின் மென்னழகு
மின்னிடும் உங்கள் முகத்தில்...
SKYLARK
..மென்துகிலாய் ஒளிரும் போலிமி புடவைகள், ஜார்ஜெட்டுகள், நைலான்கள் சாதாரண மற்றும் பிரிண்டுகள் - போலிமி புடவைகள் – பெண்மைக்களிகரும் சீர் வரிசைகள், மதிமயக்கும் உடுப்புத் துணிகள் - ஆண்களுக்கும் பெண்களுக்கும் போலிமியின் கைவரிசை.
தி பாம்பே ஸில்க் மில்ஸ் லிட்.,
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், லால்பாக், பம்பாய்–12.
மெஸர்ஸ் G. I. மீர்பூரி, 137, பீமசேன கார்டன் ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4
மெஸர்ஸ் ரமண்லால் D. ஷா, மெஜஸ்டிக் பிரஹ்லாத ராவ் பில்டிங், இரண்டாவது மாடி
11-25, 15, கொத்தபேட், விஜயவாடா - 1
மெஸர்ஸ் K.N. பரமசிவன், 108, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை - 1
மெஸர்ஸ் யுனிவர்ஸல் டிரேடிங் கார்ப்பொரேஷன், தேவஸ்தா மார்க்கெட், சிக்பேட், பெங்களூர்-2A
சர்வோதயா கார்ப்பொரேஷன், 12, கைலாஷ் மார்க்கெட், செகந்திராபாத் - 3

பயம்

முதலியாருக்கு மூன்று நாட்களாகக் கோபமான கோபம். சரியான சாப்பாடு, தூக்கம் இல்லே. பேச்சும் கிடையாது. முகம் கடுகடுவென்று எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோல் இருந்தது. செங்கமலத்தண்ணிக்குக்கூட அருகில் நெருங்கிப் பேச்சுக் கொடுக்கப் பயமாக இருந்தது.

அண்ணி சாதாரணமாக அப்படியெல்லாம் பயந்து ஒதுங்குகிறவள் இல்லே.

''சரிதான் போயிட்டு வாங்க. உங்களைத் தெரியாது எனக்கு?'' என்று சமயம் பார்த்து விட்டெறிந்து பேசக் கூடியவள்.

இன்றும் சொன்னால் அவளிடம் முதலியாருக்குத்தான் உள்ளூறப் பயம். அது அவளுக்கு நன்றாகத் தெரியும். அவ்வளவுக்கு அவள் அவரை அளந்து வைத்திருந்தாள்.

முதலியார் ஒன்றும் 'பெண்டாட்டிக் கப்பன்' இல்லே. முன்கோபம், முரட்டுத்தனம் எல்லாம் உள்ளவர்தான். இருந்தாலும், ''எனக்கு என்ன பயம்? மடியிலே கனம் இருக்கிறவங்கள்ளே பயப்பட [illegible]வேணும்'' என்று [illegible]ந்த அண்ணி [illegible].

உண்மையும் அதுதான். அண்ணியைப் பற்றி ஒரு குறையும் சொல்வதற்கில்லே. தப்புத் தண்டா எதையும் சகிக்கமாட்டாள்.

ஆனால் முதலியார் விஷயம் அப்படியல்ல. அவருக்குச் சில ஆசைகள் உண்டு; சபலங்கள் உண்டு. வெளியில் தெரியாது என்றாலும் அண்ணிக்கு மட்டும் சுத்தமாகத் தெரியும். முதலியார் சும்மாப் பயந்து விடுவாரா ?

பொதுவாக அவர் செய்யும் காரியங்களில் செங்கமலத்தண்ணி அதிகம் தலையிடமாட்டாள். முதலியார் வைத்ததுதான் சட்டம். அவரிடம் தணிந்து போவதிலும், விட்டுக் கொடுப்பதிலும் அண்ணியைப் பார்த்துக் குடும்பப் பெண்கள் கற்றுக் கொள்ள வேண்டும். புருஷன் மனம் கோணாதபடி நடந்து கொள்ளும் பண்பு அவள் உடம்போடு பிறந்தது.

அப்படிப்பட்ட அண்ணிக்கும் அடங்காத ஒரு விஷயம் ஒன்று திடீரென்று முளைத்துவிட்டது. முதலியார் விஷயத்தில் வேண்டுமானால் பயப்படாமல் தன்னம்பிக்கையோடு சாமர்த்தியத்தோடு நடந்து கொண்டு போய்விடலாம்; ஆனால் பிள்ளை — அதிலும் ஒரே பிள்ளை- விஷயத்தில் எதுவுமே பலிக்கவில்லே. அவள் மட்டும் என்ன. ஐயாவே பயந்து போகத்தான் வேண்டியிருந்தது. தலைக்கு உயர்ந்த பிள்ளையாகிவிட்ட பிறகு அவனே யார் என்ன சொல்ல முடியும்? பெற்ற தாயானால் என்ன, தகப்பனானால்தான் என்ன ? செல்லப்பிள்ளையாயிற்றே, அவன் விருப்பத்துக்கு மாறாக நடக்க அவர்களது மனம் எப்படி இடம் கொடுக்கும் ? ஆனால் கடைசியில் அவன் ஒரு பெரிய பாறாங் கல்லாகத் தூக்கிக் கொண்டு வந்து இப்படித் தலையில் போடப் போகிறான் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லே.




ஆர்வி

''ஆம்பிள்ளைங்கதானே — அதிலேயும் சிறுவயசு—ஏதோ அரசல் புரசலாக இருக்கிறதுதான்; போறதுதான்! இதுக்கு முந்தி இந்தக் குடும்பத்திலே பெரியவங்க இரண்டொருத்தர் அந்த மாதிரி இருந்ததாக்கூடக் கேள்விதான். எல்லாம் வெளியிலே இருக்குமே தவிர, மத்தவங்க பேசறப்பலே எதுவும் இருக்காது. ஆனா இது எல்லாத்தையும் தூக்கி அடிக்கிறகதையாவுல்லே இருக்கு! அந்தப் பொண்ணு என்னமோ சகஜமா எல்லாரும் புழங்கறப்பலே பிரம்புக் கடையிலேருந்து அழுக்கு அண்ணி எடுத்துக் கிட்டுப் போகக் கூடம் தாழ்வாரம்,

காம்ரா உள்ளாறுதி வரும். வெறுத்த கருப்புடிக் கலைக் கணக்குப் பார்த்துக் கொண்டுக்கிட்டு வந்து வைக்கும். பார்த்திருக்கிறேன். சிரிச்ச முகமா, குறுகுறுப்பாகத்தான் இருக்கும். அவ அப்பன் செத்து வடக்கே, தெலுங்கு பேசற சித்தூர் பக்கத்திலே போய்ப் பொண்ணு கட்டினவரு – அதனாலே இது சித்தே செவலையா, பூசினாப்பலே பசலையா, நல்ல மூக்கும் முழியுமா இருக்கும். அதுக்காக? ஏதோ நாலெழுத்துப் படிசகப்புட்டு. வீட்டோட ஆயி அப்பனுக்கு உதவியா வெள்ளாவி வைக்கக்கிட்டுக் கிடந்த பொண்ணே. இவனுங்களே இந்த மூணு நாலு வருஷமா பள்ளிக்கூடம் போகச் சொல்லி, பொஸ்தகம் துணிமணியெல்லாம் வாங்கிக் கொடுத்துப் படிக்க ஏற்பாடு செய்திருக்கானாம் – இருந்து இருந்து இவதானா இவனுக்குக் கிடைச்சா? சரி, போகட்டும். ஏழை – பாழைன்னு ஏதோ வாங்கிக் கொடுத்தே, போனே. அத்தோட போக வேண்டியதுதானே? அவளைத்தான் கட்டிக்கவே போறானாமே! வாக்குக் கொடுத்துட்டானாம் – மாற மாட்டானாமே! யாரைக் கேட்டுக்கிட்டு வாக்குக் கொடுத்தான் இவன்?" என்று செங்கமலத்தம்மாள் சொல்லிச் சொல்லி அங்கலாய்த்துப் போனாள். இது என்ன ஆகுமோ, எதிலே போய் முடியுமோ என்ற பீதி பெற்ற வயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்தது.





மகன் விஷயம் என்றால் கண்டும் காணாததுமாய்ப் போய்விடுகிற முதலியாருக்கு இது பொட்டில் அடிபட்டுப் பொறி கலங்கினாற் போல் ஆகிவிட்டது. அடங்க அடங்க அவருள்ளே மூண்ட சினம் பெரிதாகிக்கொண்டு வந்தது. அவர் இருந்த நிலையைப் பார்த்து எந்த நிமிஷத்தில் என்ன நடக்குமோ, என்ன செய்து விடுவாரோ என்று அண்ணிக்கே உள்ளூற நடுக்கம்தான். கொள்ளியைக் கொண்டு வந்து எரவாணத்திலே செருகினது போல, குடும்பப் பெருமையையே குலைக்கப் பார்க்கும் பிள்ளைக்காகப் பரிந்து பேசுவாளா, மானம், மதிப்பு, மரியாதை எல்லாவற்றையும் இழந்து உயிர் வாழ வேண்டுமா என்று கலங்குகிற புருஷனுக்காகப் பரிந்து பேசுவாளா? இதிலே யாருக்குப் போய் யார் சமாதானம் சொல்ல முடியும்?

தயாநிதி போக்குவரத்தையெல்லாம் கொல்லை வழியாகவே வைத்துக் கொண்டான். வீட்டுக்கு வந்தால் குளிப்பான்; சாப்பிடுவான். கொஞ்ச நேரம் ரேடியோவைத் திருகிவிட்டு விட்டுப் படுத்திருப்பான். அல்லது பீரோ, டிராயர்களைக் குடைந்து எதையாவது புரட்டிக் கொண்டிருப்பான். பிறகு சற்றைக்கெல்லாம் கன கச்சிதமாக டிரஸ் பண்ணிக் கொண்டு கொல்லை வழியாகவே புறப்பட்டுவிடுவான். கைச் செலவுக்கு அவனிடம் எப்போதும் பணம் இருக்கும்; கவலையில்லை.

அண்ணிக்கும் முதலியாருக்கும் அவன் வேண்டிய அவகாசம் கொடுத்திருந்தான். அவன் அவசரப்படுத்த விரும்பவில்லை. ஆனால் அவன் வரையில் தன் முடிவை மாற்றிக் கொள்ளப் போவதில்லை. அவனுடைய ஐயாவும் தாயும்தான் தங்க

ளைத் தயார்ப்படுத்திக் கொண்டு ஒரு முடிவுக்கு வரவேண்டும். அந்த முடிவு அவன் விருப்பத்துக்கு இணக்கமாயிருந்தால் நல்லதாயிற்று. அது எப்படி அவன் போன வழிக்கு விடமுடியும், ஊர் சிரிக்குமே, உலகம் பழிக்குமே என்று தடை செய்ய முற்பட்டால், அப்புறம் அதன் விளைவுகளை அவர்கள் அநுபவிக்க வேண்டியதுதான்.

அவன் இந்தத் தீர்மானத்தோடு அழுத்தமாக இருந்தான்.

தன் பெற்றோர்கள் ஒரு நாளும் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும். அப்படி அவர்கள் சம்மதிக்காததுடன் தடுத்து நிறுத்த முற்பட்டால் என்ன செய்வது என்பது பற்றி அவன் ஒரு திட்டமும் போடவில்லை. மிரட்டி உருட்டி, அவர்களை எப்படியும் இணங்க வைத்துவிட வேண்டும் என்பதே அவன் எண்ணம். அதற்காகவே இந்த அதிர்ச்சி வைத்தியத்தில் இறங்கியிருந்தான்.

ஒரு வழியும் பலிக்காவிட்டால் எங்கேயாவது போய்விடுவது என்ற முரட்டுத் தைரியத்தில் அவன் போய் என்ன செய்வது, எங்கே போய் இருப்பது என்பது பற்றியெல்லாம் தீவிரமாக யோசிக்கவில்லை.

பாவம், செங்கமலத்தண்ணிக்குத்தான் பெரிய தவிப்பாக இருந்தது. அவனிடமும் அவளுக்குப் பேசப் பயம்; முதலியாரிடமும் போய்ப் பேச முடியவில்லை. உள்ளுக்கும் வாசலுக்கும் நடந்து நடந்து கால் கையெல்லாம் ஓய்ந்து போனதுதான் அவள் கண்டது. ஒரு வேலையும் ஓடவில்லை.

சமையற்கட்டு வேலைகளெல்லாம் தவிசுப் பிள்ளை சம்சாரம் சிங்காரத்தாச்சி பொறுப்பில் இருந்தன. நல்ல சைவப் பரம்பரை. இருந்தாலும் மூன்று தலைமுறைகளாக முதலியார் குடும்பத்திலேயே இருந்து பழகிவிட்டது. அவர்களுடைய வைஷ்ணவ ஆசார முறைகள் எல்லாம் ஆச்சிக்கு அத்துபடி.

"சர்....ர்....ர்....ர்" என்று சிங்காரத்தாச்சி சட்டித் தயிரைச் சிலுப்பிக் கொண்டிருந்தாள். உயரமாய் மணையைப் போட்டு உட்கார்ந்தவண்ணம், ஒரு காலை மடித்து, மறு காலை நீட்டியவாறு, மத்துச் சிலுப்பும் கயிற்றை மாற்றி மாற்றி இழுத்து ஆச்சி தயிர் கடைவது அன்றாடம் காலை நேரத்தில் நடக்கிற நிகழ்ச்சிதான். ஆனால் செங்கமலத்தண்ணி அதைச் சிறிது நேரம் நின்று கவனித்துப் பார்த்தாள். ஆச்சி தயிர் கடைவதாக அவளுக்குத் தோன்றவில்லை. தன் நெஞ்சையே யாரோ கடைவது மாதிரி இருந்தது.

மத்திலும் கலயத்திலும் தோய்ந்த வெண்ணெயை ஆச்சி திரட்டியெடுத்தபோது செங்கமலத்தண்ணிக்குத் தன் கண்ணே பட்டுவிடும் போலிருந்தது. அத்தனை வெண்ணெய்!

"முதாறு மாட்டுப் பாலு. அதான் மிதப்பு அப்படி விடுது!" என்றாள் சிங்காரத்தாச்சி.

அண்ணிக்கு எரிச்சலாக வந்தது.

"ஹ்க்கும் !"

"இன்னைக்குக் காய்ச்சிப்புடலாம்னு தோணுது."

"காச்சி யாரு எலையிலே கொண்டு போய் வைக்கறது ?"

"கோனாரு வூட்டு முத்தம்மா சந்தைக்குப் போக வருவாளே, குடுத்தனுப்பினல் என்ன? காச்சினது காசாயிட்டுப் போவுது."

"போவும் போவும். வித்த காசைப் பாங்கிலே போட்டு வைப்போம். நாளைக்குச் செல்லு மக புஷ்பான்னு ஒருத்தி கூடைக் கொண்டை போட்டுக்கிட்டு வருவா—வட்டியும் மொதலுமாச் சேர்த்து வாங்கிக்கிட்டுப் போக !"

சிங்காரத்தாச்சிக்கு மூன்று நாட்களாக வீட்டிலே நடக்கிற கரைசல் எல்லாம் விளக்கமாகவே தெரியும். அடுப்புக் குழம்பு கொதிக்கிற போதே வாசனையைப் பார்த்து எது தூக்கல், எது குறைவு என்று பக்குவம் சொல்லத் தெரிந்தவளுக்கு இது என்ன பிரமாதம் ! இருந்தாலும் நேரிடையாக யாரும் சொல்லாத வரையில் அவள் எதுவும் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ளலாமா? முதல் அறிவிப்பு — அதிகாரபூர்வமாக இப்போது தானே வெளிவருகிறது? இனிமேல் அவள் கலந்து கொள்ளலாம். அதற்கு அநுமதி கிடைத்துவிட்டது.

"அண்ணி நீங்க சொல்லல்லே. ஆனா நானு ஊகிச்சுப் புரிஞ்சுக்கிட்டேன். கேட்டதிலேயிருந்து என்னமாச் சங்கடப்படுத்திக்கிட்டிருக்கு, தெரியுமில்லே! என்னாலே தாங்கிக்க முடியல்லேன்னு பெத்தவங்க நீங்க எப்படித்தான் பொறுக்கிறியளோ ! அநியாயக் கொள்ளையாவுல்லே இருக்கு — காதிலேயே போட்டுக்கிட வழங்கல்லியே. அதென்னமா அந்தச் செல்லுப்பய சிறுக்கிமவளுக்கு இத்தனை எடம் கொடுத்து வச்சான்?"

இடரென்று செங்கமலத்தண்ணிக்கு ஒரு வெறுப்புத் தட்டியது. பேச்சே கசந்தது. சிங்காரத்தாச்சியின் சந்தேகத்தையெல்லாம் தீர்த்துக் கொண்டிருக்கிற தெம்பும் இல்லை; அதற்கு நேரமும் இல்லை.

"சரி சரி, வெண்ணெயைப் பதமாக் காய்ச்சி முத்தம்மா வந்தாக் கொடுத்தனுப்புங்க. மணல் மணலா, மணக்க மணக்கப் போகப்பு இருக்கிறவங்க ஊத்தித் தின்னுட்டுப் போவட்டும் !" என்று சொல்லிவிட்டு, அடுப்பிலே பாலைச் சுட வைத்தாள். தனக்குத்தான் சுட வைத்தாள்; ஆனால் அதற்குள் வாசலில் பொங்கிப் பொங்கி மறுகும் முதலியார் நினைவு வந்துவிட்டது.

வாசல் நிலையில் சாய்ந்தபடி திண்ணையில் உட்கார்ந்திருந்த முதலியார் கவனத்தைத் திருப்ப மெல்லக் கனைத்தாள்.

"ம்ம்....." என்று திரும்பினார் அவர்.

"இதை ஒரு வாய் குடிச்சிட்டுக் குடுங்க குவளையை !"

"என்னது, காப்பியா ?"


"காப்பிதான். மணி ஒம்பதாவப் போவுது. இந்த மாதிரி ஒண்ணும் சாப்பிடாமெ குருட்டு யோசனையும் பண்ணிக்கிட்டிருந்தா, மண்டைக் குடைச்சல் எடுத்துப்போவும்! டிகாஷன் மட்டாத்தான் கலந்தேன். போதாதுன்னு போய்க் கொண்டுக்கிட்டு வர்றேன்."

முதலியாருக்கு அண்ணியின் பேச்சும் ஆறுதலாயிருந்தது. காப்பியும் சுகமாக, வாய்க்கு ருசியாக இருந்தது.

"மண்டைக் குத்தலா? பைத்தியமே பிடிச்சிடும். அப்படிப் பொங்கிட்டு வருது !"

சீஸ்லிங்குகள்! சாப்பிடுங்கள்! சுவைத்து மகிழுங்கள்!
சீஸின் நறுமணம், அலாதி ருசியே அதன்குணம்!
கரகரப்பு மிக்கது, மொரமொரப்பானது!

இதைத் தவிர பார்லே வழங்கும் இன்னும் நான்கு சுவைமிக்க பிஸ்கெட்டுகள் இதோ!



ஜெ:.ப்ஸ்—நெஞ்சையள்ளும் நறுமணம்,
வே:.பர் போன்ற மென்மையும்!

ஓர்லே—அருமையான ருசி,
அபாரமான கரகரப்பு!

:.பனியன்ஸ்—ருசியில் வெங்காயம்,
புசிக்கப் பேரானந்தம்!

ஸ்பின்-எச்—வெந்தியக் கீரை கூடியது,
பெருமகிழ்ச்சியுடன் படைத்திடலாம்!

சீஸ்லிங்ஸ்—'சீஸ்' சுவையைப் பெற்றிடுவீர்,
பாராட்டுடனே பார்ட்டியில் படைத்திடுவீர்!

பார்லே

உங்களுக்காக, இந்தியாவில் முதன் முதலாக சேவரி ஸ்நாக் தயாரிப்பவர்கள்


பரிசுத்தமான பாலினல் செய்யப்பட்டது
காட்பரிஸ் சாக்கலேட்
சுவையானது
மட்டுமல்ல...
போஷாக்கு
அளிக்கவும் வல்லது!
Cadbury's
MILK
CHOCOLATE
Cadbury
பரிசுத்தமான பால்,
சத்துள்ள கொகோ,
இவையுடன் சர்க்கரையின்
இனிப்பு — அதுவே
காட்பரிஸ் மில்க் சாக்கலேட்!
காட்பரிஸ்
ஒவ்வொரு சாக்கலேட்டும்
பாலின் குணங்கள் அடங்கியது!

''ரெண்டே நாளுலே உடம்பு இப்பிடியா ஆயிப்புடும்? எவன், எந்தச் சந்திக்கரையிலே வாணாலும் போய் நிக்னுக்கட்டும். அதுக்கு நாம கெடந்து மெழுகா உருகிப் போகணுமா, என்ன? பாய்லர்லே சுடுதண்ணி போட்டு ரெடியா வெச்சிருக்கேன். ஒரு செம்பு எடுத்து விட்டுக்கிட்டு, பாராயணத்தையும் ஒரு வாய் சொல்லிப்புட்டு வாங்க. போற கதிக்காவது புண்ணியமாப் போவட்டும்!'' என்று அக்கம் பக்கம் பார்த்தபடி மெதுவாக அவர் கையைப் பற்றி அமுக்கினாள்.

அந்தக் கண நேர ஸ்பரிசத்திலேயே முதலியார் நெகிழ்ந்து போனார்.

அண்ணி அருகிலிருந்து பரிமாற, பத்தியமாய்ப் பருப்புத் துவையலையும் ரசத்தையும் போட்டுக் கொண்டு பசிக் களைப்பைப் போக்கிக் கொண்டார்.

''நீ சாப்பிடல்லியா?'' என்று வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டு வந்த அண்ணியைப் பார்த்துக் கேட்டார்.

''எனக்கு இப்ப ஆச்சா? மைனர் தொரை வரல்லியே. அவர் வந்து சாப்பிட்டப்புறமில்லே எம் பாட்டைப் பார்த்துக்கணும். அவரு வர்ற சமயம் பார்த்து நான் எலையிலே உக்காந்திருந்தா சோறுதான் இறங்குமா, நல்லாத்தான் இருக்குமா? சின்ன முதலியாரு, என்ன வேலையையெல்லாம் வைக்கக்கிட்டு வருவாரோ — யார் கண்டது? கர்னு கோவிச்சுக்கிட்டு, சாப்பிடாமயே போயிட்டாருன்னு?''

''இந்த அழகுலேதான் நீ க்ஷேத்திராடனம் போயிடலாம்னு சொல்றியாக்கும்!''

''இதா பாருங்க, நான் நெனச்சா இந்தச் சணம் புறப்பட்டிருவேன். உங்களாலேதான் முடியாது. ஆமா. எதிலேயுமே உங்களுக்கு ஓர் உறுதி பத்தாது.''

அண்ணியிடம் அதிகம் பேச்சுக் கொடுத்தால் இதுதான் வம்பு. கசப்பான உண்மையைப் பச்சையாகச் சொல்லிவிடுவாள். மனசுக்குச் சங்கடமாக இருக்கும். சொல்லவும் முடியாது; கொள்ளவும் முடியாது.

''சரி சரி, நான் திண்ணையிலேயே போய்ப் படுத்திருக்கேன். உன் மகன்காரன் வந்து தின்னுப்புட்டுப் போகட்டும். என் கண்ணுலே மட்டும் அவன் பட்டான், பெரிய ரசாபாசமாய்ப் போயிடும். உனக்குத்தான் வாயக்கு. நீயே பார்த்துக்க.''

''ம்க்கும் — அந்த நாளுலே இந்த மாதிரிதான் உங்க ஐயாவையும் வேதனைப்பட வெச்சீங்க நீங்க. அது எங்கே போகும்? இப்ப அது உங்களுக்கே திரும்பிட்டுது. நான் இந்த வீட்டிலே அடியெடுத்து வைக்கிறதுக்கு முந்தி நீங்க கொஞ்ச ஆட்டமா ஆடினீங்களாம்! எல்லாம் பெரிய அண்ணி எனக்குச் சொல்லியிருக்காங்க. எனக்குத் தெரியும்.''

''நான் இந்த மாதிரி ஒரு நாளும் ஆடல்லே. எங்க ஐயாவுக்கு முன்னுலே ஆடிப்பிடவும் முடியாது. மகனுச்சென்னு கூடப் பார்க்கமாட்டாரு. தோலை உரிச்சுப் புடுவாரு, உரிச்சி.''

''அதுக்கென்ன, வேற மாதிரியா ஆடியிருப்பீங்க. எல்லாம் ஒரே மாதிரியாவா இருந்துப்புடும்? இவன் இந்த மாதிரி ஆட்-



'' கை வலிக்கிறது.''

'' ஏன் ? பட்டாக வெடித்துக் காயமா ?''

'' ஊஹும்! என் மாமனாருக்கு ருத்ராக்ஷமாக 1008 முறுக்கு சுற்றினேன் !''

றான். காலத்துக்குத் தக்கவேதானே காரியமும் இருக்கும் ?''

'' அதனாலே — இப்ப உன் மகன் செய்யிறது சரிதான்னு சொல்ல வர்றியா ?''

''அதெப்படி நான் சொல்லுவேன், சரின்னுப்புட்டு. பெரிய அண்ணி, அவுங்களுக்கும் பெரிய அண்ணியெல்லாம் இருந்த வீட்டிலே எவளோ ஒருத்தியைக் கொண்டுக்கிட்டு வந்து வெக்கிறேன்னு சொன்னு, பார்த்துக்கிட்டா இருப்பேன்? முழுங்காலுச் சில்லைப் பேத்துப்புடறதில்லையா? என் உசிரு கூட்டிலே இருக்கிற வரைக்கும் சரி, இல்லாமெப் போயிட்டாலும் சரி, அந்தப் பேச்சு இங்கே நடக்காது ?''

''ஆமா, நடக்காது ! பொம்மனாட்டிங்க பேச்சு ஒரு நியாயாக்கும் ! புருஷனைப் பார்த்தாலும் சரி, புள்ளையைப் பார்த்தாலும் சரி, ஒரு நொடியிலே குணம் மாறிப் போயிடும்— நேரத்துக்கு ஏத்தாப்பிலே.''

'' எனக்கு ஒண்ணும் அப்படியில்லே. யாராயிருந்தாலும் நியாயம்னு ஒண்ணு இல்லியா ?''

''ஏன் இல்லே? தாராளமா உண்டுதான். ஆனா எந்த நியாயமாயிருந்தாலும் எல்லாம் சொந்தப் பிள்ளைக்கு அப்புறம்தான். தம் பிள்ளைன்னு வந்திட்டா, பொம்பிளைங்களுக்கு நியாயமே மாறிப் போயிடும். கட்டின புருஷன்கூட ரெண்டாம் பட்சம்தான் !''

செங்கமலத்தண்ணிக்கு இப்போதுதான் முதன் முதலாக உண்மையின் கசப்புத் தெரிந்தது.

'' நமக்கு இருக்கறது ஒண்ணுதானே? அதானே இவ்வளவு தூரத்துக்கு போயிக்கிருப்பலே எடம் கொடுத்துப் போச்சு !''

''ஒண்ணு என்ன, ஒம்பதாயிருந்தாலும் பொம்பளைங்க கதை இதேதான் !''

அண்ணிக்கு இது கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. இருந்தாலும் உண்மை கசந்தது.

தயாநிதிக்குப் பெண் கொடுக்க உறவிலேயே பல பேர் இருந்தார்கள்.

'வரட்டுமே, கிட்டிமுட்டி. இப் லே என்ன அவசரம் ?' என்று மெத்தனமாக இருந்து விட்டாள் செங்கமலத்தண்ணி.

கடைசியில் தயாநிதி ஒரு பெரிய கல்லாகத் தூக்கித் தலையில் போட்டுவிட்டான்.

துணி வெளுக்கிற செல்லுவோட மகளாம். பேர் புஷ்பாவாம். இந்த வருஷம் படிப்பை முடிக்கப் போகிறாளாம். அவளைத்தான் கட்டிக் கொள்ளப் போகிறானாம் !

ஊரில் பராபரியாகப் பேச்சு அடிபடுகிறதே என்று அவனைக் கூப்பிட்டுக் கேட்கப் போக, —

'' ஆமா — நீ முந்தி பார்த்த புஷ்பா அல்ல அவள் இப்ப. இதோ இதிலே இருக்கா பார்— இவதான். நல்லாப் பார்த்துக்க. பட்டணத்துலே எடுத்தது!'' என்று சொல்லி, ஒரு போட்டோவைத் தூக்கிக் கொடுத்துட்டுப் போனான் தயாநிதி.

பேயறைந்ததுபோல் இருந்தது அவளுக்கு. பெற்ற வயிறு எரிந்தது. '' தம்பி, நீ சுய புத்தியோடதான் பேசறியா ?'' ஆத்திரம் பொங்கக் கேட்டாள்.

'' என்ன அண்ணி, சந்தேகம் உனக்கு? உலகத்திலே யாருதான் சொந்தப் புத்தியோட இருக்காங்க? கண்ணுலே பார்த்து, காதாலே கேட்டுத் தெரிஞ்சுகிட்டதுதான். பாதி அநுபவத்திலேயிருந்து தெரிஞ்சுக்கிறோம். அநுபவத்திலே வர முடியாததுங்களைப் படிச்சுத் தெரிஞ்சுக்கிறோம். உலகத்தைப் பார்த்து, நானும் படிச்சுத் தெரிஞ்சுகிட்டே புத்தியோடேதான் பேசறேன். நான் கொடுத்த படத்தைப் பார்க்காமலே என்ன என்னமோ கேட்டுக்கிட்டிருக்கியே. தோட்டத்துக்குள்ளே பூத்தாத்தான் பூ; வேலிக்கு வெளியே பூத்துப்புட்டா பூ இல்லியோ ? இப்பவே பக்குவமா ஐயாகிட்டே சொல்லிப்புடு. இதான் என் முடிவு. எது மாறினாலும் நான் மாத்திக்கிறப்பலே இல்லே. நான் எல்லாத்தையும் யோசனை பண்ணிப் பார்த்துட்டுத்தான் இந்த முடிவுக்கு வந்திருக்கேன். உங்க முடிவை மெதுவாச் சொன்னாப்போதும். இன்னும் ஒரு எட்டு மாசம் டயம் இருக்கு.''

தயாநிதி தூக்கிப் போட்ட பாறாங்கல் இதுதான். போட்டு நாள் மூன்று ஆகிவிட்டது. வேறு யாராக இருந்தாலும் செங்கமலத்தண்ணி இவ்வளவையும் கேட்டுக் கொண்டு சும்மா வாயடைத்துப் போய் நின்றிருக்க மாட்டாள். தயாநிதி ஒருவனிடம் தான் அவளால் ஓங்கிப் பேச முடியாது. பேச வேண்டும் என்ற வேகம்தான், ஆனால் முடித்தால்தானே? ஒரே பிள்ளையாச்சே; உயிர் நிலையே அவனாச்சே;' அவனைப் போய் என்ன செய்ய முடியும் ?

இன்னும்கூட அவளுக்கு ஓர் அசட்டு நம்பிக்கை உள்ளூற ஓட்டிக் கொண்டிருந்தது. அந்த நம்பிக்கையே அவளுக்குத் தெம்பையும் திடத்தையும் கொடுத்திருந்தது.

இந்தக் குடும்பத்துக் குலவிளக்கை ஒரு நாளும் அணைக்கத் துணிய மாட்டான். இந்தப் பெரிய பரம்பரையின் பெருமையையும் புனிதத்தையும் குலைக்க அவன் காரணமாக இருக்கமாட்டான். செங்கமலத்தண்ணியின் நெஞ்சில் இந்த நம்பிக்கைதான் இன்னும் கெட்டியாக ஒட்டிக் கொண்டிருந்தது.

முதலியார் இது புரியாமல் எதையாவது அவனிடம் போய்ப் பேசிக் காரியத்தைக் கெடுத்துக் கொண்டு விடப் போகிறாரே என்று அவளுக்குப் பெரிய விசாரமாக இருந்தது. முதலியார் முன்கோபக்காரர். செய்தபிறகு தான் சொல்லி வருத்தப்படுவார். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று அவள் முடிவு செய்து கொண்டாள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தால் தெருவோடு போகிறவர்கள் பேச வந்துவிடுவார்களே என்று முதலியாருக்குப் பயம். அவர் யாரிடமும் பேச விரும்பவில்லை. ஊரெல்லாம் மகனைப் பற்றி எப்படிப் பேச்சாயிருக்கிறது என்று அவருக்குத் தெரியும்.

முதலியார் துண்டைப் பிரித்து அப்படியே தூங்குவதுபோல் படுத்துக் கொண்டிருந்தார்.

''தூங்கறாப்பிலேயா?'' என்றாள் செங்கமலத்தண்ணி.

''ம்...... என்ன?'' என்று தலையைத் தூக்கிப் பார்த்தார் முதலியார்.

''சிமெண்ட் தரை சூடாச்சே ! கட்டிலில் வந்து படுக்கறது. இதிலே படுத்தா இருக்கற ரத்தத்தையும் சுண்டி இழுத்துப்புடுமே.''

''ஆமா, ரத்தத்தைச் சுண்டி இழுத்துப்புடும். இருக்கறவங்க சுண்டி இழுக்காமெ இருந்தாப் போதாதா ? சரி, சரி! இதைச் சொல்லவா வந்தே இப்ப? எங்கே உங்க மகன் வந்துட்டுப் போயிட்டானா ?''

''எங்கேயோ கான்பரன்ஸாம். விருந்துச் சாப்பாடாம். அந்த வழியாய்ப் போன முத்தம்மாளைப் பார்த்துக் கூப்பிட்டு வரல்லேன்னு சொல்லியனுப்பிச்சிருக்கான். ராத்திரிக்கும் டின்னர் இருக்குதாம். லேட்டாவுமாம் வர !''

''யாரு இவரு மட்டுந்தானா? ஜோடியோடவா ?''

''அதை யாரு கண்டாங்க? அவனுக்கு அங்கெல்லாம் என்ன வேலை?''

முதலியார் விசுக்கென்று எழுந்து உட்கார்ந்தார். ''அப்ப மத்த இடத்திலே எல்லாம் மட்டும் வேலை வச்சு வாழுதோ ? — அந்தக் கழுதைக்கு ?''

''ஸ்..... தெருவு! போறவங்க காதிலே படவா ?''

''படட்டுமே. இன்னும் என்ன பாக்கியிருக்கு படறதுக்கு ?''

''பேசாமெ எழுந்திரிச்சு உள்ளே வாங்க. காச்சி வச்ச நெய்யெல்லாம் வீணாப் போவுதேன்னு ஆச்சியைக் கொஞ்சம் கேஸரி கிளறச் சொன்னேன். சூடாறிப் போயிடப் போவுது. எழுந்திரிங்க.''

'' இப்படியே எதுவும் ஒண்ணைச் சொல்லி என் வாயை அடைச்சுப்புடு. ஆச்சியைக் கேஸரி கிண்டச் சொல்லிப்புட்டயில்லே? அப்பச் சரி, பசைதான். வாயை மூடி தொறக்காதபடி செய்துப்புடலாம்!''

'' சிங்காரத்தாச்சியையா பழிக்கிறது ? புத்துருக்கு நெய்யை ஊத்தி அவங்க மாதிரி

உங்க ளைப் பகைக்கிறது நடக்காது செய்யமாட்டாரு. ஆச்சி சொன்னம் மாதிரிதான் எச மனுஷம்.''

''ஏது ஆச்சிக்கு நீ பத்மஸ்ரீ கொடுத்திருவே போலிருக்கே.''

''அவங்க செஞ்சிருக்கிற வேலைக்கு அதுவும் கொடுக்கலாம், தெரிஞ்சுக்கணும். நெல்லைக் காய்ச்ச முருங்கக் கீரையைத் தேடிக்கிட்டுப் போறப்பிலே ஆத்தங்கரைப் பக்கமா போயி, செல்லுவையும் அவன் பெண்சாதியையும் புடிச்சு, சரியான டோஸ் குடுத்திருக்காங்க. அவங்க குடுத்த பாட்டுலே, அவனே இங்கே வரதாச் சொல்லியிருக்கானும். இல்லாட்டி போலீஸ் வரைக்கும் போயி, ஊரைவிட்டே போவும்படியாயிடும்னு அவங்க சார்பாப் பேசிப்புட்டு வந்திருக்காங்க. சின்னக் கழுதையும் வீட்டுக்குள்ளாறதான் இருந்திச்சாம். எல்லாத்தையும் கேட்டுக்கிட்டு. உள்ளாற வாங்க. கேஸரி ஆறிப் போயிடும். மத்ததையும் அங்கே வந்து சொல்லிப்புடறேன்....''

''அதுக்குள்ளே இது ஒரு சஸ்பென்ஸா?''

''ஆமா வாங்க'' என்று அவரை உள்ளே அழைத்துப் போய்க் கேஸரியை வாழை இலையில் வைத்தாள்.

வாசலில், ''சாமி!'' என்று ஒரு குரல் அழைத்தது.

முதலியார் வெளியே வந்து, ''யாரப்பா செல்லனா? அது என்னது கையிலே?'' என்று கேட்டபடி திண்ணையில் உட்கார்ந்தார்.

''ஆத்தங்கரைப் பக்கம் ஆச்சி வந்தாங்க. முருங்கக் கீரை கேட்டாங்க. பேசிக்கிட்டே இருந்திட்டு மறந்துட்டு வந்திட்டாங்க..... அதான் ஒடிச்சுக்கிட்டு வந்தேன்!'' என்றான் செல்லு.


'' சரி; வைச்சிட்டுப் போ!''

''அப்படியே தங்களாண்டை கொஞ்சம் பேசணுங்க!''

''என்கிட்டயா, என்கிட்டே என்ன பேசப் போறே? அதான் உன்னையும் என்னையும் பத்தி ஊரெல்லாம் பேசுதே!''

''அதாங்க தங்களாண்டை பேசலாம்னு.... எதிர்சையா சித்தூர்லேருந்து எம் மச்சான் காரன் வந்திருக்காங்க. அவன் வந்து நாலு நாள் போவ ஆவுது; இன்னிக்கு அவன் ஊருக்குப் போறானுங்க. ஆச்சி வந்தப்ப அவன் சந்தைப் பக்கம் போயிருந்தாங்க — நல்ல வேளையா அவன் இல்லே. அவங்கூட என் ஆட்டுக்காரியும் மவளும் புறப்பட்டுப் போறேங்குதுங்க. என்னை வண்டிக்கே எத்தி வழியனுப்பிச்சிடலாம்னு பார்க்கிறேங்க. போன எடத்திலேயே பணம், காசு குடுத்து ஒத்தாசை செய்திங்கன்னு எம் மச்சான் மனசுக்கே புஞ்சாவைக் கட்டிக் குடுத்துடுவேங்க. அதான் யோசனை கேட்டுக்கிட்டு, அந்தாக்கிலே மன்னாப்பும் கேட்டுக்கிட்டுப் போவலாம்னுதாங்க வந்தேன்!'' என்று தலையைச் சொறிந்தபடி நின்றான் செல்லு.

''ம்... ம்....'' என்று தோரணையாகக் கேட்டுக் கொண்டிருந்த முதலியார் அவன் கேட்டதற்குப் பதில் எதுவும் சொல்லவில்லை.



உயர்ந்த ஆசை!

விண்வெளிப் பயணி சந்திரனுக்குப் போகுமுன் மனைவியிடம் கேட்டார்: ''இன்னும் ஏதாவது சொல்வதற்குப் பாக்கி இருக்கிறதா?''

அவள் சொன்னாள்: ''இருக்கிறது; வழியில் 'கிளாலாக்ஸி'யை எங்காவது கண்டால் கொஞ்சம் இழு தள்ளிவிட்டுப் போங்கள்!''

— கோட்டா மோகன்

''என்ன ம்..ம்..னு உக்காந்தே இருந்தா!'' என்று இருவரை நிலைக்கருகில் நின்றிருந்த அன்னம் முன்னால் வந்தாள்.

''ஏழரை மணிக்கு வண்டின்னு அதுக்குள்ளாற எங்க முதலியார்கிட்டே பதில் வாங்கிப்புட முடியாது. எல்லாத்தையும் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன். கொஞ்சம் இரு. இதோ வந்துட்டேன்'' என்று வேகமாக வீட்டுக்குள்ளே போனாள்.

பிறகு திரும்பி வந்து, ''இந்தா, இப்போதைக்கு இந்த நாற்பது ரூபாயை ரவிஞ்சு செலவுக்கெல்லாம் வைக்கச் சொல்லு. தேதின்னு வச்சிட்டா உடனே வந்து சேரு. நூறோ ஆயிரமோ நானே தர்றேன்..... கண்ணாலக் காரியமாச்சே, முதலியாரைக்கூட கேக்கவாணும். நெல்லு வித்துப் பணம் ஒரு வாரம், பத்து நாளுலே வந்துடும், வந்திட்டா யார் உத்தரவும் இல்லாமெ நானே எடுத்துக் குடுத்திடறேன். புரிஞ்சுக்கிட்டியா? ஆனா நீ சொன்னதுப்பிலே நடந்துக்கணும். அதை மட்டும் நினைவுலே வைச்சுக்க. இந்தா பிடி. எண்ணிப் பார்த்துக்க; பத்திரம். நல்லபடியாப் போயிட்டு வா!'' என்று பணத்தைக் கொடுத்தாள் செல்லுவிடம்.

''நீங்க நல்லாயிருக்கணுங்க!'' என்று நோட்டுக் கத்தையோடு கும்பிட்டான் செல்லு. ''வரேங்க!'' என்று முதலியாருக்கும் கும்பிட்டுவிட்டுக் குறடு இறங்கி நடந்தான்.

அவன் போன பிறகு முதலியார் பக்கம் திரும்பி, ''என்ன பார்க்கிறீங்க? வந்தவனுக்கு ஒரு பதிலைச் சொல்லாமெ எதுக்கு வளர்த்தணும்னேன்?'' என்றாள் அன்னம்.

''அது சரி'' என்றார் முதலியார். ''அவ்வளவுக்கு எனக்குச் சட்டுனு எட்டல்லே!'' என்று ஒப்புக் கொண்டார்.


ஜாங்கிரி ஜக்கு
கதை:
குட்டி கிருஷ்ணன்
சித்திரம்:
ராஜு
5
அப்பண்ணுவின் வீட்டிலேயே முன்புறம் சில அறைகள் அப்பண்ணு அண்டு கப்பண்ணு கம்பெனியின் காரியாலய மாகப் பயன் பட்டன. பொன் மொழி வீடு திரும்பியதும்.....
ஆகா! கப்பண்ணுவா? அடையாளமே தெரியலியே? கட்டுண்டீர், பொறுத்திருப்பீர், காலம் மாறும்!
ஒரிஜினலா ஏதாவது சொல்லு!
அப்பா! கப்பண்ணுவுக்கு என்ன ஆச்சுன்னு நீங்க விளக்கம் தர வேண்டாம். எனக்கே தெரியும்!
எப்படி?
இப்போ நான் தரிகிடா வீரர் ஜக்குவின் வீட்டிலிருந்து தான் வரேன். அவனைச் சாமானியமா எண்ணி க்ளோஸ் பண்ண ஏற்பாடு செய்திருக்க.....
.....அவள் பிச்சு மணியைப் பிசைந்து எடுத்துட்டாள். அப்பா! அவளே வேண்டுமானால் இடிக்கலாம்; உரலை இடிக்க முடியுமா?
கல்லுரட்டமாவா இருக்கான்?
சுண்டிப் பார்த்தால் விரல் வீங்கும்! பிச்சு மணி உண்மை சொல்லலே பாதி. ஜக்குவிடம் அடைந்த வேதனையைக் கப்பண்ணு விடம் பகிர்ந்து கொண்டான்.
பாவி, பிச்சுமணி! நான் குல்லா போட்டு கொடுத்ததைப் பகிர்ந்துக்கலையே!


நவரத்னத்தில் மூணு ஆச்சு!
நீங்க பிச்சுமணியிடம் கொடுத்தனுப்பிய இரண்டாயிரத்து ஐந்நூறு கிடைச்சுதுன்னு ஐக்கு தெரிவிக்கச் சொன்னார். தன் நாய்க்கு வைரம் பதிச்ச கழுத்துப் பட்டை வாங்கிப் போட்டு அழகு பார்த்திருக்கிறார்.
எமகாதகப் பயல்தான் போயிருக்கு!
உலகப் புகழ் பெற்ற ஜப்பானிய ஜூடோ வீரர். அவரிடம் ஐக்குவுக்கு ஐந்து வருஷம் பயிற்சி!
ஆஹ்!
இந்தியாவுக்குக் கிடைத்திருக்கக் கூடிய ஒரே தங்க மெடலும் போச்சு!
எனக்கு ஒரு ஐடியா!
அப்பா! முதல் ஐடியா அவருக்குக் கட்டுப் போட்டிருக்கு! இரண்டாவது ஐடியா உங்களைத் தாக்கப் போகுது, ஜாக்கிரதை!
எதுக்கும் ஐடியாவைக் கேட்டு வைப்போமே!

தொடரும்

கணக்கைக் காட்டு!

'மேரு'

(எழுத்தாளர் பஞ்சாமிர்தத்தின் வீடு. பஞ்சாமிர்தம் கோபத்துடன் நின்று கொண்டிருக்கிறார். அவர் பையன் ராஜு பக்கத்தில் நிற்கிறான்.)

பஞ்சாமிர்தம்: என்னை என்ன 'அரை ஞான்' என்று நினைத்துவிட்டீர்களா? சும்மா மழுப்பிப் பேசிப் பயன் இல்லை. நான் கேட்டால் கேட்டதுதான். எனக்குக் கணக்கு வேண்டும். நீங்கள் அதைக் காண்பிக்கவில்லை என்றால் நான் சும்மா இருக்க மாட்டேன்.

ராஜு: என்னப்பா! சின்ன விஷயத்துக் கெல்லாம் போய்ப் பிரமாதப்படுத்திக் கொண்டு?.... உங்களுக்கு எதற்கு இந்தத் தொல்லையெல்லாம்? நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.... நீங்க போய் ஏதாவது கதை கட்டுரை எழுதுங்க!

பஞ்சாமிர்தம்: டேய்! (ரோஷத்துடன்) நான் இந்தக் குடும்பத்தின் தலைவன்டா! எனக்குக் கேட்க உரிமை இருக்கிறது. தெரிந்து கொள்ள உரிமை இருக்கிறது.

ராஜு: பல சந்தர்ப்பங்களிலே இந்த மாதிரி உரிமைகளைப் பயன்படுத்தாமல் இருப்பதே குடும்ப அமைதிக்கு உபயோகமாக இருக்கும்! அம்மாகிட்டே தனியாக இதைப் பற்றி ஒரு வார்த்தை கேட்டிருந்தீங்கன்னா, அவளே உங்களைச் சமாதானப்படுத்தியிருப்பாள். அதை விட்டுவிட்டு இப்படிப் பொதுக் கூட்டத்திலே பேசறமாதிரி .....

பஞ்: வாயை மூடுடா! அவனுக்குச் சர்வாதிகார வெறி பிடித்திருக்கிறது. தன்னைக் கேட்டுத்தான் இந்த வீட்டிலே ஒவ்வொருத்தரும் உட்காரணும், எழுந்திருக்கணும் என்கிற அளவுக்கு அவளுக்குப் பேராசை!.... அதை நான் எப்படி அனுமதிக்க முடியும்? அடுப்பங்கரையிலே அவள் ஆட்சி செலுத்தட்டும். ஆட்சேபணை இல்லை. நான் ஒருத்தன் இருப்பதையே மறந்து கூத்தாடுகிறாள்.

(பஞ்சாமிர்தத்தின் மனைவி பெரியநாயகி வருகிறாள்.)

பெரியநாயகி: இப்போது கூத்தாடுகிறது நீங்கள்தான். இந்த மாதிரி விவகாரங்களிலெல்லாம் மூக்கை நீட்டாமல் ஒதுங்கிக் கௌரவமாக இருங்கோ!

பஞ்: மூக்கை நீட்டினால் என்னை இந்தக் குடும்பத்திலிருந்தே 'டிஸ்மிஸ்' பண்ணிவிடுவாயோ? இந்தக் குடும்ப கௌரவத்துக்கு இந்த ஐயாதான் காரணம்! இவரு சம்பாதித்துக் கொட்டலேன்னு நீங்க பட்டுப் புடவைகளிலே மினுக்கிக்கிட்டுப் பத்து இடங்களுக்குச் சவுடாலாகப் போய்வர முடிந்திருக்காது.

பெரிய: இரகசாரம்! அந்தக் காலத்திலே எங்க பாட்டி முட்டிக் கொண்டாள்! இந்த மதுரைக்காரர்கள் சம்பந்தமே வேண்டாம் என்று!....

பஞ்சாமிர்தம் (கோபத்துடன்): எனக்கு என்ன குறைஞ்சு போச்சு! எங்க ஊரைப் பற்றி ஏதாவது சொன்னே!.... கொன்னுப் புடுவேன்.......

ராஜு: அப்பா!.... இப்படிக் கொன்னுப் புடுவேன், குத்திப்புடுவேன்னு பேசினால் உங்க ஊருக்கு ரொம்ப மதிப்பா?.... ஓர் அற்ப விஷயத்துக்கு இப்படி இரைந்து பேசினால் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்கள்?

பெரிய: இன்னமே என்னடா நினைத்துக் கொள்ள இருக்கிறது? மூந்தாநாள் சாயங்காலம் பக்கத்து வீட்டுக் கிச்சாமி கிட்டே தானே இவர் நம்ப வீட்டு விவகாரங்களையெல்லாம் சொல்லிக் குதித்துக் கொண்டிருந்தார்! கணக்கு வேணுமாம், கணக்கு!


ராஜு: நீ ஏனம்மா ஒங்கிக் கத்துகிறாய்? அப்பா இப்போது உன் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணி மன்னிப்புக் கேட்கணுமா?

(பஞ்சாமிர்தத்தின் பெண் மீரு வெளியிலிருந்து வருகிறாள்.)

மீரு: அப்பா! என்ன இருந்தாலும் நீங்க செய்தது தப்பு! அம்மா மனசு புண்படறபடி இப்படி அக்கம் பக்கத்திலே போய்ப் பேசியிருக்க வேண்டாம். குடும்ப பாசம் உங்களுக்கு இல்லை.

பஞ்: ஆமாம், தாயே! நான் அன்னியன்தானே?... நீங்கள் எல்லோரும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகள்!... டேய்,





ராஜு ! கடைசியாகக் கேட்கிறேன் .... நீ யாரு கட்சி?

ராஜு: எனக்கு வம்பே வேண்டாம்! .... நான் அம்மா கட்சியிலே இருந்துட்டுப் போறேன்! வேளைக்குச் சாப்பாடு கிடைக்கும்! நீங்களும் உங்கள் கோரிக்கையை வாபஸ் வாங்கிக் கொண்டு விடுங்கள்.

மீனு: ஆமாம், அப்பா! தகராறு வேண்டாம். விவகாரத்தை க்ளோஸ்பண்ணிடுங்க!

பஞ்: ஒரு குடும்பத்தை உருவாக்கிப் பெரிதாக்கினவனுக்கு ஒரு சொத்தை சின்னக் கேள்வி கேட்க வாய்ப்புக் கொடுக்க மறுக்கிறீர்களே! உங்களுக்கு உண்மையைக் கண்டு அத்தனை பயமா ....?

ராஜு: உங்களுக்குத்தான் உண்மையைக் கண்டு பயம்! கற்பனைக் கதைகளாகவே எழுதுகிறீர்கள் !

பெரிய: ஒரு நல்ல மனுஷனை இப்படி யாரோ கோணல் வழி காண்பித்து மனத்தைக் கலைத்திருக்கிறார்களே!

மீனு: அப்பா! நீங்க எப்போதாவது அம்மா கணக்குக் கேட்டுக் கொடுத்திருக்கிறீர்களா? ஹோட்டலில் ஒண்ணே முக்கால் ரூபாய்க்கு டிபன் சாப்பிட்டுவிட்டு ஒரு வெறும் காப்பி சாப்பிட்டேன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கிறீர்கள் ?

ராஜு: 'பிளாக் மணி' மாதிரி 'பிளாக் டிபன்'.

மீனு: நாள் முழுக்க அம்மா அடுப்படியிலே வேகிறாள். அந்த நேரத்தில் அப்பா ஆனந்தமாகப் பார்க் பெஞ்சில் உட்கார்ந்து காற்று வாங்குகிறார்.....! இதிலே கணக்கு வேறே கணக்கு.

பஞ்: முடிச்சுட்டேளா? நான் கொஞ்சம் பேசணும்.

பெரிய: ஏதோ ஸ்பெஷல் அறிக்கை விடப் போறார்டா உங்க அப்பா! பத்திரிகைக்காரர்களைக் கூப்பிடு!

பஞ்: நான் கணக்குக் கேட்டேன்! இன்னமும் கேட்பேன்! முந்தாநாள் ஐந்தே பழைய துணிகளைப் போட்டு வாசலில் ஒரு பிளாஸ்டிக் பக்கெட் வாங்கினதாக உங்க அம்மா சொன்னாள். நேற்று நீங்கள் எல்லாரும் மாட்டினி சினிமாவுக்குத் தொலைந்திருந்தபோது அந்தப் பிளாஸ்டிக் கூடைக்காரன் வந்தான்.

பெரிய: அட பாவி! அவனுக்கு வேறே தெருவே அகப்படலியா?

பஞ்சாமிர்தம் (தொடர்ந்து): அவன் உண்மையைச் சொல்லி விட்டான். நீங்கள் மொத்தம் பதினேழு துணிகள் போட்டிருக்கிறீர்கள். அவைகளில் மூன்று என் புது கதர் ஜிப்பாக்கள்.

மீனு: ஒரே அழுக்கு! கிழிசல் மாதிரி இருந்தது !

பஞ்: இந்த உண்மை உங்களிடமிருந்து வருமா என்பதற்காகத்தான் துணிக் கணக்குக் கேட்டேன் ! அதைச் சொல்ல உங்களுக்குத் துணிவு இல்லை. நான் இப்போது ஓர் உண்மையை உங்களிடம் சொல்லியாக வேண்டும்.

பெரிய: அவனிடமிருந்து துணிகளைத் திருப்பி வாங்கிக் கொண்டு பிளாஸ்டிக் வாளியைக் கொடுத்துவிட்டீர்களா? ஐயையோ ! வாளி அழகாக இருந்ததே !



துணியைக் கொண்டு ஒரு துணிகரச் செயல்!

பிரிட்டனில் உள்ள மத்திய மின் உற்பத்தி வாரியத்துக்கு சதுப்பு நிலப் பகுதியொன்றில் முக்கால் மைல் நீளத்துக்குத் தாற்காலிகமாகச் சாலை போடவேண்டியிருந்தது.

ஒரு நவீன முறையைப் பரீட்சித்துப் பார்க்கத் தீர்மானித்தார்கள். இதன்படி புதிய ஐ. ஸி. ஐ. தயாரிப்பான சாலையைத் திடப்படுத்தும் துணியைச் சதுப்பு நிலப்பகுதியின் மீது எந்தவித முன்னேற்பாடுமின்றி அப்படியே விரித்தார்கள். அதன்மீது சாலை போட்டார்கள். சாலை திடமாக நின்றது; கனமான வாகனங்களின் போக்குவரத்தைத் தாங்கியது!

இந்தத் துணியைப் பயன்படுத்தியிராமல் போனால் அந்தச் சதுப்பு நிலத்தில் கனமான வாகனப் போக்குவரத்தைத் தாங்க முப்பது அங்குல கனத்துக்கு அவர்கள் சாலை போட்டிருக்க வேண்டும். ஆனால் இத்துணியை விரித்த பின் சாலை பதினைந்து அங்குல கனத்துக்கே போடப்பட்டது. செயற்கை நூலினால் தயாரிக்கப்பட்ட துணி இது. •

பஞ்சாமிர்தம்: இல்லே ! அவன் அண்ணன் எவர்சில்வர் வியாபாரியை அழைத்துவரச் சொல்லி பேரம் பேசி ஒரு எவர்சில்வர் டபரா அழகாக வாங்கி பீரோவில் வைத்திருக்கிறேன். அதற்காக நான் சத்தியமாக ஆறு துணிகள்தான் போட்டேன்! பெரியநாயகி! உன் பட்டுப் புடவைகள் இரண்டு. சின்னுனப் பட்டுப் புடவை ஒன்று! டேய் ராஜு! உன் டெரிகாட்டன் பாண்டுகள் இரண்டு! தாயே மீனு! உன் எல்பார் நைலக்ஸ் ஒன்று ! மொத்தம் ஆறு! நீங்கள் அந்த டபராவை எடுத்துப் பார்த்துப் பார்த்து மகிழலாம்! எனக்கு உங்கள் கணக்குத் தேவையில்லை ! நான் வருகிறேன் !

(வெளியே கிளம்புகிறார். எல்லோரும் பிரமை பிடித்து நிற்கிறார்கள்.)

இளைஞர் சமுதாயம்

29. சிவகங்கைச் சீமையில் சிறப்பான சேவை

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் ராமநாதபுரம் என்றுமே வறட்சிப் பிரதேசம். ஆனால் அந்தப் பிரதேசத்தில் என்றுமே இலக்கியத்துக்கும், கவிதைக்கும், புலமைக்கும் வறட்சி ஏற்பட்டதில்லை. தண்டமிழ்ப் புலவர்களில் பலர் அங்கே தான் தோன்றிப் புலமைக்கு வளம் சேர்த்தனர். ராமநாதபுரம் மாவட்டத்தில், சிவகங்கை மிகவும் பிரசித்திபெற்ற ஊர்; அதற்குச் சிவகங்கைச் சீமை என்ற பெயர் ஏற்பட்டதிலிருந்தே அதை உணரலாம். தமிழ்ப் புலமையோடு தறுகண் ஆண்மையையும், தளராத போர்த் திறனையும் வளர்த்தவர் சிவகங்கை.

அங்கு இளைஞர் சமுதாயத்தின் இணையற்ற உழைப்பினால் சிறந்த முறையில் இயங்கி வரும் நுகர்வோர் நல உரிமைச் சங்கத்துக்குச் சென்றதும் அவர்கள் செய்திருந்த ஏற்பாட்டைக் கண்டு வியந்து போனேன். சிவகங்கையில், சத்தியமூர்த்தி தெருவில் உள்ள சங்கத்தில் ஒரு பொதுக் கூட்டத்துக்கே ஏற்பாடு செய்திருந்தனர்.

இந்த இளைஞர் சங்கத்தின் மூத்த ஆலோசகரான ஸ்ரீ எம். ஜி. குருசாமி ஐயர் எம். ஏ., பி.டி., பி.எல். தலைமை தாங்கினார்.

ஸ்ரீ குருசாமி ஐயர் அவர்கள் சிவகங்கைச் சீமையில் உள்ள குறைபாடுகளை மிகவும் தெளிவாக, ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்தார். உபாத்தியாயரா யிருந்து வக்கீல் தொழிலுக்கு வந்தவராதலால், அவர் உரை விளக்கமாகவும், தர்க்கரீதியாகவும் இருந்தது. இளைஞர்களிடம் அவர் வைத்துள்ள நம்பிக்கையும், மதிப்பும் பாராட்டத்தக்கவை.

பிறகு என் பேட்டியைத் தொடங்கினேன்.

''நுகர்வோர் நல உரிமைச் சங்கம் என்றும்...?''

''பொதுமக்கள் நுகரக் கூடிய அனைத்துப் பொருள்களும் நியாய விலைக்குக் கிடைக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது மேற்கொள்வதே சங்கத்தின் நோக்கம். இச் சங்கம் கட்சிச் சார்பற்றது. பொதுவாக, நாங்கள் தீர்வு காண எடுத்துக் கொள்ளும் பிரச்னைகள் விஷயமாக அதிகாரிகளைக் கண்டு ஆவன செய்கிறோம். பொது மக்களிடம் எதற்கெடுத்தாலும் நிதி வசூலிக்கச் செல்வதால், நிதி அற்ற நிலை நாட்டில் நிலவுகிறது. ஆகவே, நிதி திரட்டுவது, சங்க நடவடிக்கைகளில் அதிகச் செலவு செய்வது போன்ற வழக்கங்களை எங்கள் சங்கம் விரும்புவதில்லை. வேலையற்ற அங்கத்தினர்களுக்கு மாதம் கால் ரூபாய் சந்தா; வேலையில் உள்ளவர்களுக்கும், சங்கத்தின் முக்கிய பொறுப்புகளை வகிப்பவர்களுக்கும் மாதம், ஒரு ரூபாய் சந்தா. நீங்கள் கேட்பதற்கு முன்பே எங்கள் சங்கம் சாதித்த ஒரு கவையான விஷயத்தைச் சொல்லி விடுகிறேன். சர்க்கரை விநியோக விஷயத்தில் மிகவும் ஊழல் மலிந்திருந்தது. தனியாகப் பலர் சென்று தாசில்தாரிடம் முறையிட்டதில் பலன் ஏற்படவில்லை. சங்கத்தின் முயற்சியால் பலன் கிடைத்தது. இப்பொழுது சர்க்கரைத் தட்டுப்பாடு இல்லை.

ஏன் எனக் கேள்விகள் எழவில்லை
எதிர்த்தும் பேசிட ஆள் இல்லை
என்ற எண்ணத்தில் ஏதும் செய்ய
லாம்

நிற்பவர்கள்: சிவகங்கை, நுகர்வோர் நல உரிமைச் சங்கத்தின் அங்கத்தினர்கள். அமர்ந்திருப்பவர்கள்: துரைராஜ், தங்கவேல் ஏ. பே. ரங்கநாதன், தங்கவேலம், செந்தில்வேல், ''கல்கி'' உதவி ஆசிரியர் சோமு, மீனாட்சிசுந்தரம் (தேவகோட்டை ''கல்கி'' ஏஜண்ட்) பீட்டர் சுரேந்திரன்.



என்று எண்ணி இங்கு
கொள்ளை லாபம் அடிப்பவர்களை,
கூடுதல் விலை சொல்பவர்களை
ஏனென எதிர்த்துக் கேட்பிடவே
இதோ ஒரு சங்கம்......

என்ற பாடல் சங்கத்தின் குறிக்கோளை நன்கு விளக்கும்.''

''சபாஷ்! பாட்டு பிரமாதம். மகிழ்ச்சி! இன்னும் உங்கள் சங்கம் சாதித்துள்ள சாதனைகளைக் கூறுங்கள்!''

''இங்கு நகர்ப்புறத்தில், ஒரு பெரிய சந்தை இருக்கிறது. ஆனால் கட்டடம் எதுவும் கிடையாது. சந்தை கூடுவதற்கேற்ற கடைகள் கட்ட வேண்டும் என்பது இங்கு பலருடைய அபிப்பிராயம். நாங்கள் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து முயற்சி எடுத்து நகரசபையை அணுகினோம். நகரசபை பெரிய மனசு வைத்துச் சந்தை கூடும் இடத்தில் கடைகள் கட்டிக் கொடுத்துள்ளது. இப்பொழுது மிகவும் சௌகரியமாயிருக்கிறது. எங்கள் சங்கத்தின் சாதனைகளுள் குறிப்பிடத்தக்க சாதனை ஒன்று உள்ளது. இவ்வூர் செட்டியார் தெருவில் அமைந்திருக்கும் பாலத்தின் மேற்பகுதியில் பள்ளம் இருந்ததால் பொதுமக்கள் போக்கு வரத்துக்கு இடையூறாக இருந்தது. மேலும் அதன் அடிப் பகுதி முழுவதும் அடைபட்டிருந்ததால், கழிவு நீர் வெளிச் செல்ல வழி இல்லாமற் போய்விட்டது. எங்கள் சங்கக் கோரிக்கையை நகரசபை ஏற்றுக்கொண்டு பாலத்தைப் புதுப்பித்துக் கழிவு நீர் சரிவர ஓடவும் வழி செய்தது. சிவகங்கை ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் மின் விளக்குகள் சரியாயில்லாததால் குழல் விளக்குகள் போட வேண்டும் என்று நகரசபைக்குக் கோரிக்கை விடுத்து வெற்றி பெற்றோம்.''

''இன்னும் குறிப்பாக ஏதாவது....?''

''.... இருக்கிறது. இவ்வூர் வழக்கறிஞர் திரு ராமாநுஜ ஐயங்கார் அவர்கள் மாவட்ட நூலகத்துக்குச் சுமார் எண்ணூற்றுக்கும் மேற்பட்ட நூல்களை அன்பளிப்பாக வழங்கினார். மேற்படி நூல்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படாமல் பல ஆண்டுகளாகக் கட்டி வைக்கப்பட்டிருந்தன. இது பற்றி அவ்வழக்கறிஞரைச் சந்தித்துப் பேசினோம். பிறகு நூலக மேற்பார்வையாளரையும் கலந்து பேசினோம். நூல்கள் விடுதலை அடைந்து பொதுமக்கள் பார்வைக்கு வந்தன. இதை நாங்கள் மிகப் பெரிய சாதனையாகக் கருதுகிறோம். இவ்வூருக்கு அருகிலுள்ள சோழபுரம் கிராமத்தை நிவாரணப் பணிக்குத் தேர்ந்தெடுத்து முதலில் மின்விளக்கு போட ஏற்பாடு செய்தோம். அவ்வூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஒத்துழைப்புடன் சோழபுரத்திலுள்ள குடிநீர்க் குளத்தைச் சுத்தம் செய்து ஊர் மக்களின் பாராட்டைப் பெற்றோம்.''

''மேற்கூறிய சாதனைகளை யெல்லாம் சாதிக்கமுடிந்ததற்குக் காரணம் உங்களுடைய விடாமுயற்சியும், ஊக்கமும், உற்சாகமும் தான் என்று நினைக்கிறேன். இல்லையா?''

''உண்மைதான். ஆனால் எங்கள் கோரிக்கைகள் எதையுமே தட்டிக் கழிக்காமல், எங்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் சிவகங்கை நகரசபைக் கமிஷனர் திரு அமானுல்லாகான் அவர்கள் மட்டும் இல்லையென்றால் நாங்கள் இவ்வளவு சாதனைகளைச் சாதித்திருக்க முடியாது. ஆகவே, எங்கள் சாதனைகளைப் பற்றிக் கூறும்போது அவருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சிவகங்கை ராமநாதபுரம் மாவட்டத்தின் தலை நகராக விரைவில் ஆகப் போகிறது. அப்பொழுது எங்கள் சங்கத்தின் சேவையும் விரிவடைந்து மேலும் பெருமை அடையும். இன்னொன்று உங்களிடம் குறிப்பிட வேண்டும். இவ்வூரில் அலோபதி மருந்துகள் அதிக விலைக்கு விற்கப்பட்டு வந்தன; எங்கள் சங்கத்தின் அரு முயற்சியால் இப்பொழுது நியாய விலைக்குக் கிடைக்கின்றன.''

''பணிச்சென்று சொல்லுகிற மாதிரி ஏதாவது பொதுப் பணி செய்திருக்கிறீர்களா?''

''ஆகா! ஒளி தராத தெரு விளக்குகளை யெல்லாம் ஊர் முழுவதும் சுற்றிக் கண்டு பிடித்து அவை ஒளி தர முயற்சி எடுத்து எங்கள் தொண்டைப் பணிச்சென்று நிறைவேற்றி வருகிறோம்! இன்னொன்று, மக்கள் நுகரும் பொருள்களில் மதுவகைகளும் சேரும் அல்லவா? அவற்றை நுகர்வோர் தங்கள் நலத்தையும் காக்க வேண்டி எங்கள் நுகர்வோர் நல உரிமைச் சங்கத்தை நாடினால் அவர்களுக்கு உதவ மாட்டோம். உணவுப் பொருள்கள் விஷயமாகத்தான் நாங்கள் நலம் கோரிப் போராடுவோம். மது வகைகளை விஷமாகக் கருதுகிறது எங்கள் சங்கம்.''

இந்த விளக்கத்துக்காக அவரையும், சிவகங்கை நுகர்வோர் நல உரிமைச் சங்கத்தையும் மனமாரப் பாராட்டிவிட்டு அவர்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டேன்.

முடிவுரை

சுமார் ஆறு மாதங்களாகத் தொடர்ந்து நான் எழுதி வந்த ''இளைஞர் சமுதாய''க் கட்டுரைத் தொடர் இந்த இதழுடன் முடிவடைகிறது. தொடர்ந்து இக்கட்டுரைகளை வாசித்த நேயர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தொடக்கத்தில் நாங்கள் அறிவித்திருந்தபடி ''கல்கி'' பத்திரிகையுடன் கடிதத் தொடர்பு கொண்ட இளைஞர் சங்கங்களைத்தான் பேட்டி கண்டு எழுதி வந்தேன். தமிழ் நாட்டில் இன்னும் எத்தனையோ இளைஞர் சங்கங்கள் அரும்பணியாற்றி வருகின்றன. நமது சங்கத்தைப் பேட்டி காணவில்லையே என்ற குறை பலருக்கு இருக்கக்கூடும். எல்லாவற்றையும் பற்றி எழுதுவதென்றால் இக்கட்டுரைத் தொடர் முடிவின்றி நீளும். ஏதேனும் ஒரு சமயத்தில் முடிக்க வேண்டுமல்லவா? ஆகவே இதுவரையில் வந்த கட்டுரைகளைக் கொண்டே எல்லோரும் மன நிறைவு பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இளைஞர்களின் பொதுப்பணியையும், சேவையில் அவர்களுக்குள்ள ஆர்வத்தையும் நான் பாராட்டி எழுதிய போதெல்லாம் தமிழகத்திலுள்ள எல்லா இளைஞர்களையும் மனத்தில் வைத்துக் கொண்டுதான் எழுதினேன். ஆகவே, தமிழ் நாட்டில் உள்ள இளைஞர்கள் அனைவரும் அந்தப் பாராட்டுரைகளை ஏற்றுக்கொண்டு உற்சாகத்துடன் தொடர்ந்து பொதுப்பணியில் ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறேன். வணக்கம்.

— ஸோமாஸ்


டாடா டெக்ஸ்டைல்ஸ் வெளியீடு!
பேட்டிஸ்ட்
இலட்சோப லட்சம் ரசிக
பெருமக்களின் இதயங்களை
கொள்ளை கொள்ளும
வரலாறு காணாத படைப்பு.
'டெரீன்' / காட்டன் ஷர்ட்டிங்.
குறுகிடும் சுருக்கங்களை வென்று வீழ்த்தி,
இஸ்திரி பெட்டிகளை எட்டி உதைத்து
எத்தனை பழசானாலும் என்றும் வெண்மை
பளிச்சிட, ஏறுநடை போடும் எழுச்சிமிகுத்
தயாரிப்பு இப்படியொன்று இதுவரை
துணியாணில் கடாவிட்டதில்லை என
பார்த்தவர் பாராட்டுகிறார்கள்! கோடல
ஷர்ட்டுகள் பேட்டிஸ்ட்டின் கைவண்ணமே
தயாரிப்பாளர்கள்:
டாடா டெக்ஸ்டைல்ஸ்
கண்டு களியுங்கள் - பேட்டிஸ்ட் இப்போது உங்கள் அருகமைந்த கடைகளில் கிடைக்கின்றன

கூட்டுக் கல்வி கூடாதா? — விவாத அரங்கு

திரு ஜி. வேங்கடராமன்,
முதல்வர்: விவேகானந்தா கல்லூரி, சென்னை.

எத்தனையோ ஆண்டுகளாக ஆண்களுக்கு மட்டுமே கல்வி போதித்து வந்த உலகப் பிரசித்திபெற்ற ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்திலேயே இப்போது கூட்டுக் கல்வி முறை செயல்படத் தொடங்கி விட்டதே?

இங்கும் கூட்டுக் கல்வி விரைவிலேயே அமுலுக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. அது நாளடைவில் இங்கு செயல்படத்தான் போகிறது. செயல்படத் தொடங்கி சகஜமாகிவிட்டால் அதன் விளைவாக நன்மையே ஏற்படும். காரணம், பெண் கல்வி பரவி வளர்ச்சியடைந்து வருவதே. வரும் காலத்தில் கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை மிகவும் கூடுதலாகும். குடும்பத் தலைவர் ஒருவர் மட்டுமே சம்பாதித்துக் காலத் தள்ளுவது என்ற நிலைமை மாறி வருகிறது. இருபாலாருமே வேலைக்குப் போக வேண்டியதன் அவசியம் ஏற்பட்டுள்ளது. படித்துப் பட்டம் பெற்ற பெண்கள் திருமணம் ஆகும் வரையிலாவது வேலை பார்த்துச் சம்பாதித்தால் பெற்றோர்களின் பளு ஓரளவு குறையுமல்லவா? எனவே நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வருங்காலத்தில் கூட்டுக் கல்வி பரவலாக வரத்தான் போகிறது.

என்றாலும், இன்றுள்ள சூழ்நிலை அதற்கு உகந்ததாக இல்லை என்பதையும் கூறியாக வேண்டும். கல்வியில் பெரிதும் நாட்டமுள்ளவர்களுக்கு மட்டுமே கல்லூரியில் உயர் கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்படுமானால் கூட்டுக் கல்வியால் தொல்லையிராது. இது விஷயத்தில் (Restriction) கட்டுப்பாடு இல்லாமல் எல்லோருக்குமே இடமளிப்பது என்றால் கூட்டுக் கல்வியினால் எதிர்பார்க்கப்படும் பலன் கிட்டாது. என்ன பலன் என்று கேட்கிறீர்களா? கூட்டுக் கல்வி நிறுவனங்களில் பயின்ற பெண்களுக்கு ஆண்களின் மன இயல்பு (psychology) நன்றாகப் புரிந்திருக்கும். பெண்களுக்கு ஆண்களிடம் இயல்பாக இருக்கக்கூடிய கூச்சமும் மறைந்து நன்றாகப் பழகத் தைரியம் வரும். தொடக்கத்தில் சில இடையூறுகள் ஏற்பட்டாலும் நாளடைவில் சரியாகிவிடும். ஆனால், பெற்றோர்களுக்கு இதில் உள்ள பொறுப்பு அதிகம். ஆண்களுடன் பழகும் விதத்தைப் பெற்றோர்கள் பெண்களுக்கு உணர்த்த வேண்டும்.

கூட்டுக் கல்வி நிறுவனங்களில் உரிய விகிதாசாரத்தில் ஆண், பெண் இருபாலாரும் விரிவுரையாளர்களாக நியமிக்கப்பட வேண்டியது அவசியம். மாணவர்கள் பேராசிரியைகளிடம் பழகத் தொடங்கினால், உடன் பயிலும் மாணவிகளிடமும் நல்ல முறையில் பழக அதுவே ஒரு பயிற்சியாக இருக்கும். பெண்களைக் கண்டு கூச்சப்படும் ஆண்களும் பலர் இல்லாமல் இல்லை. அவர்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்க இது உதவும்.



திரு ஜி. வேங்கடராமன்

வண. சூரியகோஸ்,
முதல்வர், லயோலா கல்லூரி, சென்னை.

'கூட்டுக் கல்வி கூடாது', அல்லது 'அவசியம் வேண்டும்' என்று திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை. நன்மையும் உண்டு, பாதகமும் விளையக் கூடும். தமிழ் நாட்டில் பரவலாக இது செயல்படாததால் அனுபவத்தைக் கொண்டு சொல்லலாம் என்பதற்கும் வழியில்லை.

கூட்டுக் கல்வியின் பயனாக மாணவர்களும் மாணவிகளும் இயல்பாக ஒருவரோடு ஒருவர் பழக வாய்ப்பு ஏற்படலாம். வலுக் கட்டாயமாக அவர்களைத் தனித்தனியே பிரித்து வைத்துக் கல்வியளிப்பது ஒருவிதத்தில் செயற்கையான பிரிவினையே.

பொதுநிகழ்ச்சிகள், விழாக்கள், விருந்துகள் எல்லாவற்றிலும் மகளிர்க்குத் தனி இடவசதி செய்வதும், அவர்கள் தனியே உட்காருவதுமே நம்மிடையே பழக்கமாக இருந்து வருகிறது. இந்தப் பின்னணியில் பார்க்கும்போது கூட்டுக் கல்விக்கு எதிர்ப்பு இருக்கவே செய்யும்.

ஆந்திரத்திலிருந்து இங்கு வந்த ஒரு பேராசிரியர் என்னிடம் சொன்னார்: 'இங்கு ஆண்கள் மட்டுமே பயில்கின்றனர். எனவே, அனைவரும் படிப்பில் கவனமாக இருக்கின்றனர். எங்கள் கல்லூரியிலோ இருபாலாரும் பயில்கின்றனர். பெண்கள் புத்தகங்களிலேயே கவனம் செலுத்துகின்றனர்; ஆண்கள் அந்தப் பெண்களிடமே கவனம் செலுத்துகின்றனர்!' உண்மைதான். அந்த இரண்டுங்கெட்டான் வயது இருக்கிறதே, உணர்ச்சிகளின் வேகத்துக்கு, தூண்டுதலுக்கு அடிமையாகிற பருவம் அது. மேலை நாடுகளில் கற்புக்குத் தரப்படும் முக்கியத்துவம் ரொம்பக் குறைந்து விட்டது. இங்குள்ள நிலைமை வேறு. நமது மனோபாவம் முற்றும் மாறுனதல்லவா?



வண. சூரியகோஸ்


பேட்டி: 'பாணன்'



ஓ ஓ பி நீலம் உடனடியாக முற்றிலும் கரைந்துவிடும் வெள்ளைத் துணிகள் ஒரே சீராக பால்போல் பளிச்சிடுகின்றன. உங்கள் சட்டைகள், புடவைகள், பெட்ஷீட்டுகள் மற்ற துணிகள் எதையும் வெள்ளை வெளேர் என்று ஆக்க மிகவும் சிக்கனமான வழி இது. நீலப்புள்ளி விழாது, மஞ்சள் திட்டு தெரியாது.

ஓ ஓ பி நீலம் மேற்கு ஜெர்மன் கூட்டுறவுத் தயாரிப்பு. இந்தியாவின் மிக நவீன அல்டிராமரைன் தொழிற்சாலையில் உருவானது.

தயாரிப்பாளர்:
அல்டிராமரைன் & பிக்மென்ட்ஸ்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை 53





UPL/6546

சத்திய வெள்ளம்

நா. பார்த்தசாரதி

பதினெட்டாம் அத்தியாயம்

கண்ணுக்கினியாள் வந்து பேசிவிட்டுப் போனபின் அவள் கொடுத்துவிட்டுச் சென்ற அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்து மகிழ்ந்தான் பாண்டியன். மாணவர் பேரவைத் தேர்தலுக்காக அலைந்து கொண்டிருந்தபோது, 'இந்தப் பேரவைத் தேர்தல் முடிகிற வரை நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்' என்று தன்னிடம் தனிப்பட்ட அக்கறையோடும் கவலையோடும் அவள் வேண்டிக் கொண்ட தினத்தன்று அந்த வேண்டுதலாலும், அவளாலும் அவன் மனத்தில் என்ன கர்வம் ஏற்பட்டதோ அதே கர்வம் இன்றும் ஏற்பட்டது. 'புன்னகையும் நாணமும் இங்கிதப் பேச்சுக்களுமாக எங்கெல்லாம் ஓர் அந்நியமான இளம் பெண் உன்னோடு நடந்து வருகிறாளோ அங்கெல்லாம் உனது உடனடியான சொர்க்கங்கள் படைக்கப்படுகின்றன' - என்ற அந்தப் பழைய வாக்கியத்தையும் இப்போது நினைவுகூர்ந்தான் அவன். முன்னைப் போல் இப்போது அவள் அவனுக்கு அந்நியமில்லை. ஆனால் எவ்வளவு நெருக்கமாயிருந்தாலும்கூடத் தன்னை நினைத்துத் தவிக்க விடுகிற வேளையில் ஒவ்வொரு பெண்ணும் ஓர் ஆணுக்கு மிகவும் அந்நியமாகி விடுகிறாள் என்றே தோன்றியது.

போராட்டங்களிலும், மாணவர் இயக்கங்களிலும் தன்னை ஈடுபடுத்திய முதற்பெருமை அவளுடையது என்பது அவன் அந்தரங்கம் அறிந்த செய்தி. அந்தப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பெண்கள் அனைவரிலுமே பேரழகியும், வசீகரமானவளும் ஆகிய அவள் மட்டும் அன்று தான் தேர்தல் மனுவில் கையெழுத்திடத் தயங்கிய வேளையில் வளைகளைக் கழற்றி வீசித் தன்னுடைய ரோஷத்தைக் கிளரச் செய்திருக்கவில்லையானால் இதில் தான் துணிந்திருக்க முடியாது என்பதை அவன் உள் மனம் நன்கு உணர்ந்திருந்தது. அவள் மேல் நன்றியும் காதலும் ஒன்றோடொன்று போட்டி போடுகிற அளவு அவன் மன நிலை நெகிழ்ந்திருந்தது அப்போது. சிறைவாசம், பல்கலைக் கழக நிர்வாகமும், அதிகாரிகளும் சதி செய்து சுமத்தியுள்ள பயங்கரக் குற்றச்சாட்டுகள் எல்லாமே தூசுக்குச் சமமாகத் தோன்றும் துணிவை அவள் கடைக்கண் பார்வை அவனுக்கு அளித்திருந்தது. 'காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம்' என்று மகாகவி பாரதியார் பாடியிருந்தது சற்று மிகையான வர்ணனையோ என்று தான் முன்பெல்லாம் அவன் நினைத்திருந்தான். இப்போது அந்த நினைப்பு மெல்ல மெல்ல அவன் மனத்துக்குள் மாறிக் கொண்டு வந்தது. ஒரு விஷயம் மிகையா, உண்மையா என்று கண்டுணரும் அநுபவம் வாழ்வில் எதிர்ப்படாத வரை அதை மிகை என்றோ, உண்மை என்றோ தவறாக முடிவு செய்துவிடுவதே தவிர நம்முடைய முடிவே அதன் நியாயமாகி விடுவதில்லை. கண்ணுக்கினியாளைச் சந்திக்கிற வரை அடைய முடியாமல் இருந்த ஒரு நளினமான அநுபவத்தை அடைந்தபின் பாரதியாரின் அந்தக் கருத்திலிருந்த உண்மையை அவன் உணர முடிந்தது.

இங்கே சிறையில் அவனுக்கும் மற்ற மாணவர்களுக்கும் 'பி' வகுப்பு கொடுத்திருந்தார்கள் என்றாலும் நடைமுறையில் 'சி' வகுப்பைவிடக் கடுமையாக எல்லாம் நடந்தன. அவர்களுக்குப் படிக்கக் கொடுக்கப்பட்ட செய்தித் தாள்களில் மாணவர் இயக்கம், மாணவர் போராட்டம் மல்லிகைப் பந்தல் நிகழ்ச்சிகளுக்கு எதிரொலியாக நாடெங்கும் நடந்த ஊர்வலங்கள், கண்டனங்கள் பற்றிய பகுதியை 'சென்ஸார்' செய்து தாரினால் பூசி அடித்து மறைத்தே கொடுத்திருந்தார்கள். ஆகவே, செய்தித் தாள்களில் மூன்று நிமிஷங்களுக்கு மேல் படிக்க எதுவுமே இல்லை. உணவோ படுமோசமாயிருந்தது.

காலையில் அவள் கொடுத்த அந்தக் கடிதத்தைத்தான் அவன் திரும்பவும் படித்தான். அருகே இல்லாத பெண்ணின் ஞாபகம் எப்படி ஒவ்வொரு முறை நினைக்கும்போதும் அந்நியமாகிறதோ அப்படியே அந்தக் கடிதமும் ஒவ்வொரு முறை படிக்கும் போதும் அந்நியமாகவும் புதுமையாகவும் இருந்தது பாண்டியனுக்கு.

'...முதன் முதலாக உங்களுக்கு எழுதும் இந்தக் கடிதத்தை எப்படி ஆரம்பிப்பது என்றே எனக்குத் தெரியவில்லை. எந்தப் பிரியமான வார்த்தையினால் உங்களை அழைப்பது என்றும் புரியவில்லை. எந்த வார்த்தையினால் நான் உங்களை அழைத்தாலும் அந்த வார்த்தையை எந்த ஒரு காதலியாவது எனக்கு முன்னும் தன் காதலனுக்கு எழுதும் முதற் கடிதத்திலோ, அடுத்தடுத்த பல கடிதங்களிலோ உபயோகப்படுத்தித்தான் இருப்பாள். நான் மட்டும் உங்களுக்கு மட்டுமே தேடி உபயோகப் படுத்த ஒரு தனி வார்த்தை கிடைக்கப் போவதில்லை. வார்த்தைகள் எல்லாமே இப்படிப் பலர் பயன்படுத்தித் தேய்ந்து போனவைதாம். தேயக் கூடாத நம் பிரியத்தைத் தேய்ந்த வார்த்தைகளால் அழைக்க விரும்பவில்லை நான். வார்த்தைகளால் விவரிக்க முடியாத பிரியத்தோடும், தவிப்போடும், வேதனையோடும், இந்தக் கடிதத்தை உங்களுக்குத் தான் எழுதத் தொடங்குகிறேன். நேற்றிரவு நவநீத கவியின் 'வருங்காலக் காதலர்களுக்கு' என்ற கவிதைத் தொகுதியைப் படித்துக் கொண்டிருந்தேன். 1967க்குப் பிறகு நவநீத கவி எழுதிய முதல் வசன கவிதைத் தொகுதி அது. அதில் ஒரு கவிதையைப் படிக்கும்போது நான் மனம் நெகிழ்ந்து போய் உங்களையும், என்னையும் பற்றியே நினைத்துக் கொண்டேன். அந்தக் கவிதையில் 'காதலின் எல்லைகளைக் காணும் வருங்காலக் காதலர்களாக' அவர் நினைக்கும் இருவராய் நாம் இருக்கப் போகிறோம் என்று என் மனம் எண்ணிப் பூரித்தது. நீங்களும் அதைப் படிக்க வேண்டும் என்பதற்காகக் கீழே அந்தப் புதிய கவிதையை அப்படியே எழுதியிருக்கிறேன் :

நட்சத்திரங்களும் முழுநிலாவும் எங்களுக்காகவே
என்று
நாங்கள் நினைத்திருந்தோம் ஆனால் இங்கே
எங்கள் காதலின் வசந்த காலங்கள் கழிந்த
பின்னும்
அவை எப்போதும்போல வானில் இருந்தன
நீலமுகில்களும் மாரிக் காலத்துச் சிதறல்
இரவுகளும்
எங்களுக்காகவே என்று நாங்கள்
நினைத்திருந்தோம் ஆனால்
எங்கள் காதலின் மேகங்கள் தணிந்த பின்னும்
அவை எப்போதும்போல இங்கிருந்தன.
ரோஜா மலர்களும் சந்தனக் கலவையும் தனி
மறைகளின் பஞ்சணைகளும்
எங்களுக்காகவே என்று நாங்கள் நினைத்
திருந்தோம் ஆனால்
அவை எங்கள் தாகங்கள் தணிந்த பின்னும்
எப்போதும்போல் பூத்தன மணந்தன
பொலிந்தன இவ்வுலகில்

எதுவுமே எங்களோடு எங்களால் முடிந்துவிடவில்லை
நாங்கள் கழிவிரக்கமும் துயரமுமாய் மலைத்து
நிற்கிறோம்
காதல் தேவதைகளே ! பிரியத்தின் காவற்
கடவுளர்களே !
வரப் போகிற சந்ததியிலேனும் யாராவது
ஓராணும் பெண்ணும்
இந்த சுகங்களின் எல்லைகளைக் காண
அநுமதியுங்கள்
தத்துவங்கள் நிலைப்பதற்காக மனிதர்களை
ஏமாற்றாதீர்கள்
மனிதர்கள் நிலைப்பதற்கான சுகங்களைத்
தாருங்கள்

இந்தக் கவிதையை மட்டும் அல்லாமல் நவநீத கவியின் எல்லாக் கவிதைகளையுமே நீங்கள் படிக்க வேண்டும். என் தவிப்புக்களை நான் சொல்வதை விட நவநீத கவியின் கவிதை மூலம் அதை நான் சுலபமாக உங்களுக்குச் சொல்லிவிட முடிகிறது. நாமெல்லாரும் சேர்ந்து உண்ணாவிரதம் இருந்தோம். எங்களை மட்டும் ஆஸ்பத்திரியிலிருந்து விடுவித்துவிட்டார்கள். அப்பா நவராத்திரிக்காக என்னை ஊருக்கு அழைத்துப் போக வந்திருக்கிறார். நல்லவேளையாக மலைச் சரிவால் பஸ் போக்குவரத்து நின்று பிரயாணம் தடைப்பட்டுவிட்டது. இன்று விடிந்ததும்தான் வேறு குற்றச்சாட்டுக்களை ஜோடித்து உங்களையும் மற்ற மூன்று மாணவர்களையும் ஆஸ்பத்திரியிலிருந்து சிறைச்சாலைக்கு மாற்றியது எனக்குத் தெரியும். அந்த விவரம் தெரிந்த பின்பே இந்தப் பகுதியை மறுபடி எழுதுகிறேன். பதறிப் போனேன். என் வேதனையை உங்களுக்கு நான் எப்படி உணர்த்துவது என்றே தெரியவில்லை. இந்த நிலையில் சாலைப் போக்குவரத்து ஒழுங்காகி மதுரைக்குப் பஸ் போகும் என்கிற நிலை வந்தாலும் உங்களை விட்டுவிட்டுப் போக எனக்கு மனம் இல்லை. என் மனத் தவிப்பு நயினாவுக்குப் புரியாது. அண்ணாச்சிக்கு ஓரளவு புரியும். அவர்தான் நேற்று இரவோடு இரவாக நகரின் சர்வ கட்சிப் பிரமுகர்களையும் சந்திக்க வைத்து இந்தப் பொய்க் குற்றச்சாட்டுக்களை எதிர்த்துப் போராட ஏதோ ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். நானும் மாணவ — மாணவிகளைச் சந்தித்து உண்மையை விளக்கி அவர்களை ஒன்றுபட்டு இணைந்து போராடச் செய்யப் போகிறேன். மாணவர்கள் மேல் உள்ள பொய்

வழக்குகள் திரும்பப் பெறப்படுகிறவரை எங்கள் போராட்டம் ஓயாது. எங்கள் போராட்டம் வெற்றி பெற்று நீங்கள் வெற்றி மாலைகளுடன் சிறையிலிருந்து விடுதலை பெற்று வரப் போகிறீர்கள். உங்களை நேரில் பார்க்க முடியுமோ, முடியாதோ, எப்படியும் அண்ணாச்சி மூலம் இந்தக் கடிதத்தை உங்களுக்குக் கிடைக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மறுபடியும் உங்களைச் சந்திக்கிற வரை உங்கள் ஞாபகமாகவே இருப்பேன் என்பதை நீங்களே அறிவீர்கள். தயவுசெய்து மீண்டும் ஒரு முறை 'வருங்காலக் காதலர்களுக்கு' கவிதையின் கடைசி ஆறு வரிகளைப் படியுங்கள்.

என்றும் உங்கள்,
கண்ணுக்கினியாள்

இந்தக் கடிதத்தின் கீழே 'என்றும் உங்கள்' என்பதையும் 'கண்ணுக்கினியாள்' என்பதையும் சேர்த்துப் படித்த போது ஒரு புதிய நயமான அர்த்தம் கிடைப்பது போலிருந்தது பாண்டியனுக்கு. சிறையின் மோசமான உணவு, ஆரோக்கியமற்ற சூழ்நிலை, உடற்சோர்வு இத்தனையையும் தாங்கிக் கொண்டு இன்று அவன் தெம்பாக இருந்தான். காலையில் குளிப்பதற்காக என்று அவர்களை வெளியே அனுமதித்திருந்தார்கள். அப்போது பாண்டியனும், மோகன்தாஸும் மற்ற மாணவர்களும் சந்தித்துக் கொள்ள முடிந்தது. ஓர் அண்டா வெந்நீரில் நாலு பேர் குளிக்க வேண்டியிருந்தது. சிறை அதிகாரிகள் எல்லாரும் ஏதோ பழி வாங்குவது போல் நடந்து கொண்டார்களே ஒழிய முறையாக நடந்து கொள்ளவில்லை.

இரண்டுமூன்று நாட்கள் அவர்கள் சிறையில் நரக வேதனையை அநுபவிக்க வேண்டியிருந்தது. அதற்குள் நகரிலும், வெளியூர்களிலும் மாணவர் போராட்டம் வலுத்திருந்தது. மல்லிகைப் பந்தல் நகரில் ஒரு நாள் பரிபூரண ஹர்த்தால் அநுஷ்டிக்கப்பட்டது. ஹர்த்தால் தினத்தன்று மல்லை இராவணசாமியின் ஆட்கள் தெருத் தெருவாக வந்து அடைக்கப்பட்ட கதவுகளைத் திறக்கச் செய்ய முயன்று தோற்றார்கள். ஹர்த்தாலை எப்படியாவது தோற்கச் செய்துவிட வேண்டும்



என்று இராவணசாமியும் அவர் ஆட்களும் செய்த சதிகள் பலிக்கவில்லை. விரக்தியில் அடைக்கப்பட்டிருந்த சில கடைகளின் முகப்பு விளக்குகளையும் போர்டுகளையும் உடைத்துவிட்டுத் திருப்தி அடைந்து போய்ச் சேர்ந்தார்கள் இராவணசாமியின் ஆட்கள். அண்ணாச்சி, கண்ணுக்கினியாள், மல்லிகைப் பந்தல் நகரப் பிரமுகர்கள் எல்லாரும் முனைந்து நடத்திய போராட்டம் வெற்றிபெற்றது. போராட்டக் குழுவினரும் மாணவர் பிரதிநிதிகளும் முதலில் துணைவேந்தரையும், ஆர். டி. ஓ.வையும் சந்தித்தனர். அதற்குள் எல்லா ஊர்களிலும் பரவிய போராட்டத்தினால் அங்கங்கே அரசு பஸ்கள் சில எரிக்கப்பட்டன. இரயில்கள் நிறுத்தப்பட்டன. மதுரை கோவை, திருச்சி நகரங்களில் மாணவர் கூட்டத்தைக் கலைக்கக் கண்ணீர்ப் புகை வீச்சு நடந்தது. போலீஸ்



சத்திய வெள்ளம்

எவ்வளவு நெருக்கமா யிருந்தாலும் தன்னை நினைத்துத் தவிக்க விடுகிற வேளையில் ஒவ்வொரு பெண்ணும் ஆணுக்கு மிகவும் அந்நியமாகிவிடுகிறாள்.

அடிதடியில் சில மாணவர்கள் காயமுற்றனர். சென்னையிலும் போராட்டம் வளர்ந்தது. அரசாங்கம் ஸ்தம்பிக்கும் நிலை வந்தது. மேரி தங்கத்தின் தற்கொலைக்குக் காரணமான விரிவுரையாளர் மதனகோபாலை உடனே பல்கலைக் கழகத்திலிருந்து நடவடிக்கை எடுத்து நீக்க வேண்டும் என்றும், பாண்டியன் முதலிய மாணவர்கள் மேல் போடப்பட்டுள்ள பொய் வழக்குகளை நிபந்தனையின்றி உடனே வாபஸ் வாங்கி அவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் இந்த இரண்டு கோரிக்கைகளை ஏற்றால் ஒழியப் போராட்டம் நிற்காது என்றும் மாணவர்கள் தரப்பில் வற்புறுத்தப் பட்டது. மணவாளன் மதுரையிலிருந்து எல்லா ஊர்களோடும் தொடர்பு கொண்டு போராட்டத்தை முழுமூச்சுடன் நடத்த உதவி செய்தார். மல்லிகைப் பந்தலில் துணைவேந்தர் நாலைந்து நாட்களாக வீட்டைவிட்டு வெளியே வருவதற்கே அஞ்சும்படி ஆகியிருந்தது நிலைமை. அண்ணாச்சியின் உதவியால் நாயினாவை மேலும் சில தினங்கள் மல்லிகைப் பந்தலிலேயே தங்கச் செய்துவிட்டாள் கண்ணுக்கினியாள். கல்வி மந்திரி மல்லிகைப்பந்தலுக்கு அவசரம் அவசரமாகப் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் வந்தார். நகர எல்லையிலேயே அவருக்குக் கறுப்புக் கொடி காட்டி எதிர்ப்புக் குரல்களை முழக்கினார்கள் மாணவர்கள். துணைவேந்தர், கல்வி மந்திரி ஆகியவர்கள் கலந்து பேசி மாணவர்களின் இரு கோரிக்கைகளையும் ஏற்றனர். மேரி தங்கத்தின் தற்கொலைக்குக் காரணமான விரிவுரையாளர் மேல் நடவடிக்கை எடுத்து அவரை நீக்கினார்கள். சிறைப்பட்டிருந்த பாண்டியன் முதலிய மாணவர்கள் விடுதலை பெற்றனர். அண்ணாச்சியிடம் இருந்த மேரி தங்கத்தின் கடிதம் இரகசியமாக மணவாளனுக்கு அனுப்பப்பட்டு மணவாளன் அதைப் புகைப்படப் பிரதி செய்து சில பத்திரிகைகளில் பிரசுரமும் செய்யக் கொடுத்திருந்ததனால் அந்த விவரம் பகிரங்கமாகித்தான் போராட்டமே நாடளாவியதாக வளர்ந்திருந்தது. ஆகவே அமைச்சர் முயன்றும் அதை மூடி மறைக்க முடியாமல் போய் விட்டது.

விடுதலையான தினத்தன்று பாண்டியன் முதலிய மாணவர்களை வரவேற்கச் சிறை வாயிலில் ஏராளமான மாணவர்கள் கூடியிருந்தனர். அவனும் சக மாணவர்களும் விடுதலையான தினத்துக்கு மறுநாள் காலைதான் கண்ணுக்கினியாளும் அவள் தந்தையும் ஊருக்குப் புறப்பட்டார்கள். விடுமுறையே இன்னும் ஒரு வாரம்தான் இருந்தது. ஆனாலும் தேடி வந்த தந்தையை ஏமாற்றாமல் ஊர் சென்று திரும்புவதற்காகவே அவள் புறப்பட்டிருந்தாள். பாண்டியன் விடுதலையான தினத்தன்று மாலை அண்ணாச்சி கடையில் கண்ணுக்கினியாளையும் அவள் தந்தையையும் தனியே சந்திக்க நேர்ந்தது. கண்ணுக்கினியாளும், அண்ணாச்சியும் அவனைப் பற்றி நாயினாவிடம் பெருமையாகச் சொல்லி அறிமுகப்படுத்தி வைத்தார்கள். நாயினா அவனைக் கேட்டார்:

''தம்பி, லீவுக்கு ஊர் போகலியா?''

''போகணும்! லீவே ஏறக்குறைய முடிஞ்சு போச்சு. இருந்தாலும் நாளைக்குப் புறப்படலாம்னு இருக்கேன். நானும் மதுரைவந்துதான்போகணும்.''

''அப்பிடியானா வீட்டுக்கு வந்துட்டுப் போ தம்பீ! சித்திரக்காரத் தெரு



BISCUITS
PARLE
THIN ARROWROOT
BISCUITS
PARLE'S
THIN
ARROWROOT
மனங்கவரும்
ஃபாயில் பேக்—
நயமான விலை
இதோ!
பார்லே
புதிய
தின் ஆரோரூட்
போஷாக்கான பிஸ்கட்
முரமுரப்பானது, சக்தி மிக்கது—
சுலபமாக ஜீரணமாகிறது!
சாப்பிட ருசியானது!
புதுப் பொலிவுக் குன்றாமல் அமைந்த கவர்ச்சியான பேக்குகளில்
everest/325d/PP tam

விலே நம்ம வீடு இருக்கு. டிராமாக் கார நாயுடு வீடுன்னு சுலபமா அடையாளம் காட்டுவாங்க.....''

'' மதுரையிலே இறங்கி எங்க ஊருக்குப் பஸ் மாற நேரம் இருந்து பஸ் ஸ்டாண்டிலே இருந்து ஊருக்குள்ளே வந்தாக் கண்டிப்பா வரேன். 'மணவாளன்'னு எங்க மாணவர் தலைவர் ஒருத்தர் மதுரையிலே இருக்காரு. அவரையும் பார்க்க வேண்டிய வேலை இருக்கு'' என்றான் பாண்டியன்.

''நீங்க மணவாளனைப் பார்க்க மட்டும் நேரம் இருக்கும். என்னைப் பார்க்க நேரம் இராது? அப்படித்தானே ?'' என்று கண்ணுக்கினியாள் செல்லமாகக் கோபித்துக் கொள்ளத் தொடங்கினாள். பாண்டியன் அதைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தான். அப்புறம் சொன்னான்:

''நீயா ஏன் நான் வரமாட்டேன்னு கற்பனை பண்ணிக்கணும்? நான் அப்படிச் சொல்லல்லியே? வேணும்னு மணவாளனையும் கூட அழைத்துக்கொண்டு உங்க வீட்டுக்கு வருகிறேனே ?.... போதுமா ?''

மதுரைக்காக பஸ்ஸுக்குப் புறப்படுவதற்குள் நாயினு தனியே மகளை எங்கும் போகவிடமாட்டார் போலிருந்தது. பாண்டியன் அவளையும், அவள் பாண்டியனையும் தனியே கண்டு பேசத் தவிப்பது அண்ணாச்சிக்குப் புரிந்தது. ஊர் புறப்பட பஸ்ஸுக்கு இன்னும் நான்குமணி நேரத்துக்குமேல் இருந்தது. இந்த நிலையில் கண்ணுக்கினியாளுக்கும், பாண்டியனுக்கும் அண்ணாச்சி ஒரு பெரிய உதவியைச் செய்தார். நாயினுவுக்கு ஆஞ்சநேயர் பக்தி அதிகம் என்பது அண்ணாச்சிக்குத் தெரியும். எந்த ஊரில் நாடகத்துக்குப் போனாலும் அந்த ஊரிலிருந்து ஆறு மைல் தள்ளி அனுமார் கோயில் ஒன்று இருந்தாலும் தேடிப் போய்க் கும்பிட்டுவிட்டு வருவார் கந்தசாமி நாயுடு.

''நாயினு ! பக்கத்திலே யுனிவர்சிடி வடக்கு வாசலுக்குச் சமீபமா ஒரு அனுமார் கோயில் இருக்கு.... இன்னிக்காவது மலையிலே சரியாம பிரயாணம் சுகமா இருக்கணும்னு வேண்டிக்கிட்டு வரலாம்.... வாங்க....'' என்று நாயுடுவைக் கூப்பிட்டுக் கொண்டு அநுமார் கோயிலுக்குப் புறப்பட்டார் அண்ணாச்சி.

'' அப்படியா? நேத்தே ஏன் சொல்லலே அதை?'' என்று அநுமார் கோயில் ஒன்று மல்லிகைப் பந்தலில் இருப்பதை இவ்வளவு தாமதமாகத் தெரிவித்ததற்காக அண்ணாச்சியைக் கண்டித்தபடியே உடன் புறப்பட்டுவிட்டார் நாயுடு. அவர்கள் இருவரும் அநுமார் கோயிலுக்குப் புறப்பட்டுப் போனபின் கண்ணுக்கினியாளும், பாண்டியனும் கடையிலிருந்து ஏரிக் கரைப் பூங்காவுக்குப் புறப்பட்டார்கள். மேகம் இருண்டு கொண்டு மூட்டம் போட்டிருந்தது என்றாலும் மழை இல்லை. இப்போதோ, இன்னும் சிறிது நேரத்திலோ வந்து விடுவேன் என்பதுபோல் மழை வானிலே மிரட்டிக் கொண்டிருந்தது. அவர்கள் ஏரிக் கரையில் நடந்தார்கள். பாண்டியன் சொன்னான்: ''என்ன இருந்தாலும் அண்ணாச்சி மிகவும் பரோபகாரி ! நாம்கூட ஒரு நாள் அந்த அநுமாரைப் போய்ப் பார்த்துவிட வேண்டும்.... அவர் தயவில்தான் நமக்கு இன்று இந்தச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது.''

''அநுமாரை நீங்கள் கும்பிட்டு என்ன ஆகப் போகிறது? பெண்கள் கும்பிட்டாலாவது நல்ல இடத்தில் கல்யாணம் ஆகும் என்பார்கள்.....'' என்று சொல்லத் தொடங்கிவிட்ட கண்ணுக்கினியாள் பாதியிலேயே எதையோ நினைத்துச் சிரித்துவிட்டாள்.

''உன் கேஸ் அநுமாரிடம் எடுபடாது. நீதான் காதல் கடிதம் எழுதுகிற எல்லைவரையில் வந்தாயிற்றே?'' என்று கேட்டுக் கொண்டே, ''இந்தக் கைதானே அதை எழுதியது ?'' என்று சொல்லியபடி அவள் வலது கையைப் பற்றி அழுத்தினான் பாண்டியன். அவள் செல்லமாகத் திமிறினாள்.

''ஏதேது? கேள்வி முறை இல்லை போலிருக்கிறதே ? கையை விடுங்கள் முதலில்.......''

''பிரியமுள்ளவளின் பூங்கையை அவள் பிரியத்துக்குரியவன் பற்றக் கூடாது என்றுதான் நவநீத கவி 'வருங்காலக் காதலர்களுக்கு' எழுதியிருக்கிறாரோ?''

''அந்தக் கவிதை உங்களுக்குப் பிடித்திருந்ததா?'' தன்னைப் பற்றிய அவன் கையை விடாமலே கேட்டாள் அவள். அவன் பதில் சொன்னான்:

''அந்தக் கவிதையைவிட அதைப் பிரதி எடுத்து எழுதியவளை ரொம்பப் பிடித்திருக்கிறது.......''

ஏரிக் கரைப் பூங்காவில் இருந்த ஒரு பட்டு ரோஜாவைப் பறித்து அவள் கையில் வைத்தான் பாண்டியன்.

'' ஜாக்கிரதை ! என் கைக்கும் ரோஜாப் பூவுக்கும் வித்தியாசம் தெரியவில்லை என்று நீங்களே ஒரு கடவை சொல்லி யிருக்கிறீர்கள்.''

'' உனக்கு ரொம்பப் பொல்லாத ஞாபக சக்திதான்.''

''நீங்கள் சொன்னதெல்லாம் மட்டும் மறப்பதில்லை....'' பூங்காவின் மரங்கள் அடர்ந்த பகுதிக்கு அவர்கள் வந்திருந்தார்கள். பாண்டியனின் கரம்

இப்போது அவள் தோள் மேல் இருந்தது. "உஷ்! அதோ..." என்று அவன் தழுவலிலிருந்து விலகிய அவள் சுட்டிக்காட்டிய திசையில் மாணவர் கூட்டம் ஒன்று போய்க் கொண்டிருந்தது. பூங்காவில் இவர்களைப் போலவே சில இளம் இணைகள் அமர்ந்தும் நின்றும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

"உன் கையில் போடுவதற்கு என்னிடம் நீயே கொடுத்திருக்கும் இரண்டு வளைகள் பத்திரமாக இருக்கின்றன என்பது உனக்குத் தெரியுமா?"

"காணாமற் போன பொருள்கள் யாரிடமாவது இருந்தால் பல்கலைக் கழக விதிப்படி அவற்றை ரிஜிஸ்திரார் ஆபீசில் ஒப்படைக்க வேண்டும்...."

"அப்படியானால் என் வசம் இருக்கும் வளைகளைவிடப் பெரிய பொருளான உன் இதயத்தையும் அங்கே ஒப்படைத்துவிட வேண்டியதுதான்."

"தப்பு! தப்பு! மன்னித்துவிடுங்கள். தெரியாமல் சொல்லி விட்டேன்."

"நாம் இருவரும் துணிந்து இப்படிச் சுற்றுவதைப் பற்றி உனக்குப் பயமாயில்லையா?"

"இப்படிக் கேட்பதன் மூலம்தான் நீங்கள் என்னைப் பயமுறுத்துகிறீர்கள்."

"முதல் முதலாக உன்னை அண்ணாச்சி கடையில் சந்தித்த அன்று நீதான் என்னைப் பயமுறுத்தினாய்....."

"இப்போது ரெண்டு பேருமாகச் சேர்ந்து வி. சி.யைப் பயமுறுத்திக் கொண்டிருக்கிறோம்....."

"இந்த வி. சி. பயப்படுவதற்குக் கூடத் துணிவு இல்லாதவர்....."

"பயப்படுவதற்குக்கூடத் துணிவு வேண்டுமா, என்ன? வேடிக்கையாகத் தான் இருக்கிறது. நீங்கள் சொல்வது?"

"ஆமாம்! பயப்படவும் ஒரு துணிவு வேண்டும். 'தீமையை அநீதியை ஒழுக்கக் குறைவைக் கண்டு பயப்படவும் ஒரு நெஞ்சுரம் வேண்டும். அது வி.சி.யிடம் இல்லை. நியாயங்களைப் போற்ற இருக்கும் துணிவைவிட அநியாயங்களை விலக்கி அவற்றுக்கு அஞ்சும் துணிவு தான் பெரியது என்று நினைக்கிறேன்..".

பல்கலைக் கழகம் திறந்ததும் நவம்பரில் நேரு தினத்தை மாணவர் பேரவையின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று பேசிக் கொண்டார்கள் அவர்கள். பூங்காவில் சிறிது நேரம் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்பும் போது சிரித்துக் கொண்டே அவன் அவளைக் கேட்டான்:

"நீ என்ன 'ஸெண்ட்' உபயோகிக்கிறாய்? உன் அருகே நடந்து வர முடியாமல் வாசனை ஆளைத் தூக்குகிறதே?"



"தோள்பட்டையில் கறுப்புப் பட்டை எதற்கு?"
"அரசு 8.33 சதவீதம் போனஸ் தரச் சொன்னால் நீங்கள் 18.33 சதவீதம்தான் தருவேன் என்கிறீர்களே! அதற்கு எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கிறோம் இப்படி!"

"நான் சோப்பு, பவுடர், தவிர வாசனை ஹேர் ஆயில்கூட உபயோகிப்பதில்லை. வெறும் தேங்காய் எண்ணெய்!"

"பொய் சொல்லக் கூடாது?"

"நிஜமாத்தான் சொல்றேன்...."

"அப்படியானால் நீயே மணக்கிறாய் என்று அர்த்தமா?"

"சீ! ரொம்ப மோசம்! ஒரே நாளில் படுகுறும்புக்காரராகிவிட்டீர்கள் நீங்கள்....."

"எல்லாம் சகவாச தோஷம்...."

அன்று மாலை அவள் ஊருக்குப் புறப்பட்டாள். அவளையும் அவள் தந்தையையும் வழியனுப்புவதற்குப் பாண்டியனும் அண்ணாச்சியும் பஸ் நிலையத்துக்குப் போயிருந்தார்கள். பஸ் புறப்படுமுன், "மறந்துவிடாமல் அந்த நவநீத கவியின் கவிதையை நினைவு வைத்துக் கொள்ளுங்கள்" என்று சூசனையாக அவனிடம் தன் இதய தாபத்தைச் சொல்லி விடைபெற்றாள் அவள். அதைப் புரிந்து கொண்டு அவனும் யாருமறியாமல் புன்னகை செய்தான். பஸ் புறப்பட்டதும் அண்ணாச்சியோடு திரும்புகையில்ஒருகணம் அந்த அழகான மலைநகரமே யாருமில்லாமல் சூனியமாகிவிட்டது போல் ஒரு பிரிவு பாண்டியனின் மனத்தைக் கவ்வியது.

பஸ் நிலையத்திலிருந்து அவனும் அண்ணாச்சியும் பேசிக்கொண்டே திரும்பினர். அவனும் அண்ணாச்சியும் கடைக்குத் திரும்பியதும் பல்கலைக் கழக சிண்டிகேட் கூட்டம் பற்றித் தெரிய வந்த ஓர் உண்மை அவன் கவலை தவிப்பு எல்லாவற்றையுமே வேறு பக்கம் திருப்பக் கூடியதாயிருந்தது. (தொடரும்)



TERENE
Chaitra-CAFI-63 Tam

''சீதா! உன்னுடைய மௌனத்தை நான் உன் பரிபூரண சம்மதமாக ஏற்றுக்கொள்ளலாமா?''

மீண்டும் அங்கே 'மௌனமே பாஷையாக' வந்தபோது கொஞ்சம் நிதானப்பட்டவனாகக் கேள்வியை வேறு ஒரு கோணத்திலிருந்து கேட்டான்.

''நான் மற்ற ஏற்பாடுகளுக்குச் சொல்லட்டுமா? அடுத்த ஞாயிற்றுக் கிழமை நாம் திருப்பதிக்குப் புறப்பட வேண்டும். அடுத்த இரண்டு தினங்கள் நல்ல நாளாக இருப்பதாக சாஸ்திரிகள் கூறினார்.''

சாயிநாத் இப்படிக் கூறியபோது சீதாவுக்கு உற்சாகம் பிறந்து விட்டது.

''மீண்டும் மீண்டும் இந்தக் கேள்வியையே நீங்கள் கேட்டுக் கொண்டிருப்பதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. ஓரளவு நம் இருவர் உள்ளத்திலும் தோன்றி நம்மை இலேசாக உலுப்பிக் கொண்டிருக்கும் அச்சத்தை 'மாரல் ஃபியரை' எண்ணி நாம் பெருமைப்படலாம். ஏனென்றால் மனச்சாட்சியின் உறுத்தல் என்பது நம்மிடம் நன்றாகவே வேலை செய்து கொண்டிருக்கிறது. ஒன்று, நாம் நம் மனச் சாட்சிக்குப் பயந்தே நடக்கிறோம் என்று பெருமைப்படலாம்; இரண்டாவது நமது இந்தக் கல்யாணத்தின் மூலமாக நம்மிடையே தடையாக இருக்கிற ஒரு சிறு கதவின் தாழ்ப்பாளைத் தைரியத்துடன் அகற்றுகிறோம். நம்மிடையே என்று நான் கூறுவது ஒரே வாழ்க்கைத் தத்துவங்களையும், நியதிகளையும் கொண்ட இரண்டு சமூகப்பிரிவுகள். இவற்றை இணைக்க நாம் தைரியத்துடன் மேற்கொள்ளும் ஒரு சிறு முயற்சி இல்லையா இது? வழிபாட்டு முறையிலே வெளியே தெரிகிற வித்தியாசம் ஒன்றைத் தவிர, போகும் பாதை, அடைய நினைக்கும் முடிவு இருவருக்கும் ஒன்றுதான்.''

சீதா தன்னுடைய அறிவுத் திண்மையை வெளிப்படும்படியாகப் பேசியதில் சாயிநாத் ஆச்சரியப்படவில்லை. அவளுடைய படிப்பும் அவள் வேலை செய்யும் இடமும் அப்படிப்பட்டதொரு வளர்ச்சிக்கு அவளுக்கு உதவிக்கொண்டிருக்கின்றன.

சீதா இப்படிக் கூறியவுடன் அவனுக்குள் வெட்க உணர்வுகளின் சிற்றலைகள் அவன் மனத்தை அலைத்துக் கொண்டு நின்றன. சீதா எந்தக் கோணத்திலிருந்து இதைச் சிந்தித்து முடிவு செய்து வைத்துக்கொண்டிருந்தாளோ, அந்தக் கோணத்திலிருந்து அவன் இதை இது வரை அணுகவில்லை. மேற்சாம்பலாக உள்ளத்தில் படர்ந்து விட்ட வெட்கையும், அதற்கு அவனுக் கொடுத்துக் கொண்ட 'காதல்' என்ற வியாக்கியானமும் ரொம்பப் பழைமையானவை.

''இதைப் பலர் நமக்கு முன் செய்திருக்கலாம். அதை மறைமுகமாக, வேறு வழியில்லை என்ற நிலை வந்தபின் வேண்டாவெறுப்புடன் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் எல்லோருடைய சம்மதத்தையும், ஒப்புதலையும் பெற்றுக் கொண்டு ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கி இதை ஓர் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாக மாற்ற முயலுவோமே'' என்றாள் சீதா. சாயிநாத் இதற்குத் தடை ஏதும் கூறவில்லை.

''அவகாசம் ரொம்பக் குறைவாக இருக்கிறதே. அதற்குள் நாம் எல்லா ஏற்பாடுகளையும் செய்தாக வேண்டும். உன்னுடைய சம்மதம் என்பதை நான் உன்னிடமிருந்து வெறும் சமிக்ஞையாக மட்டும் எதிர்பார்க்கவில்லை. அதைவிட அதிகமாக ஒத்துழைப்பாகவும் எதிர்பார்க்கிறேன்'' என்றான் சாயிநாத்.

''அதையேதான் நானும் சொல்லுகிறேன். இதற்கு நமக்குச் வெறுமனே சமிக்ஞை மட்டும் போதாது. நம் பெற்றோரின் ஒத்துழைப்பும் வேண்டும். நம் வாழ்க்கை என்பது நம் விவாகத்துடன் முடிந்து விடுகிற விஷயம் இல்லை'' என்றாள் புன்னகையுடன்.

எல்டாம்ஸ் ரோட்டில் மெதுவாகப் பேசிக் கொண்டே நடந்தனர். அவள் பணியாற்றுவது அமெரிக்க கான்ஸல் ஜெனரல் அலுவலகம். அவன் பணிபுரிவது மௌண்ட் ரோடில் மையமாக உள்ள ஒரு மோட்டார் தொழிற்சாலையின் கணக்குப் பிரிவில்.

''கொஞ்சம் தாமதமானாலும் பரவாயில்லை. சூழ்நிலையைக் கனியவைத்துக் கொண்டு நாம் மேற்கொண்டு தொடர்வோம். எதிர்த்துக் கொண்டு செய்வது என்பது வேறு. அது

ஈமக்தன்

மகரிஷி

ரொம்ப கலபரமும் கூட. ஆனால் நாம் அம்மாதிரி வரம்பு மீறலை மேற்கொள்ள வேண்டாம். அம்மாதிரி நீங்கள் தாண்ட மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். எதிர்த்துக்கொண்டு தீவிரத் தன்மை மூலம்தான் இதைச் செய்ய முடியும் என்கிற நிலைமை உருவாகி விட்டால் அதற்காக நான் பின் வாங்கிவிடுவேன் என்று பயப்படாதீர்கள்'' என்றாள் சீதா குறும்புடன்.

''அந்தப் பயம் எனக்கு இல்லை'' என்றான் சாயிநாத் தன்னுடன் ஒட்டி உரசினாற்போல் வரும் அவள் கரத்தை அழுத்திப் பிடித்து.

ராகவன் தமது அறையில் நடைபோட்டுக் கொண்டிருந்தார். அறை மூலையில் கூடை நாற்காலியில் அமர்ந்து தம்மையே பார்த்த வண்ணம் இருக்கும் மகள் சீதாவை, முகத்தில் எவ்வித உணர்ச்சிகளின் பாவமும் இன்றிப் பார்த்தார்.

டெல்லியில் மிகப் பிரபலமான நிறுவனம் ஒன்றில் உயர்ந்த பதவி வகித்து ஓய்வு பெற்றவர். பொருளாதார மேதை. புதிய நிறுவனங்கள் அமைக்கும்போது அவரையும் ஒரு கௌரவ டைரக்டராக நியமித்துக்கொள்

வதில் பெருமிதப்படும்படியானவர். ஓய்வு பெற்றவர் என்ற பெயர்தான். இடையறாது அவரது அறிவுரைகள், அவரது புதிய பொருளாதாரச் சீரமைப்புக் கொள்கைகள் எல்லாம் அவருடன் தொடர்புள்ள நிறுவனங் களுக்குச் சென்று கொண்டேதான் இருக் கின்றன.

அவரைப் பொறுத்தவரையில் அவரது சிந் தனைகள் விசாலமானவை. அவரது மூத்த பிள்ளைகள் இருவர் மேல் நாடுகளில் பணி புரிகிறார்கள். மூத்த மகள் டெல்லியில் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள். சீதா கடைசிப் பெண். அவள் அபரிமிதமான அன்பு, அக்கறை எல்லாம் பெற்ற ஒரு தனிப் பொக்கிஷம் அவருக்கு.

என்றாலும், மகளுடைய இன்றைய விருப் பம் அவரை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. அவ ருக்கு நினைவு தெரிந்து தன் குடும்பத்தில் இப்படிப்பட்ட துணிவான செயலை யாரும் மேற்கொண்டதில்லை. தான் இதற்கு எப் படிச் சம்மதிப்பது என்பதைவிட, இதை எப்படிச் சாத்தியமாக்குவது என்பதில் அவர் சிந்தனை வேகம் ஓடியது.

சில கணங்கள் மகளைப் பார்த்தபடி குறுக்கு நெடுக்காக நடந்தவர், ''இதில் உள்ள நடை முறை அசாத்தியங்களைப் பற்றி நீ கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தாயா?'' என்றார்.

''நடைமுறைகளைச் சாத்தியமாக்கத்தான் அப்பா உங்கள் அனுமதியும், உதவியும் வேண்டும்.''

''எந்த வழியில்?''

''நாம் நினைக்கிற நடைமுறையும், இவ் வளவு காலமாக நாம் ஏற்று மதித்து வந் திருக்கிற பழைய 'தியரி'களையும் கொஞ்சம் விட்டுக் கொடுத்து, விசாலமான ஜன சமூக மாக நாம் ஐக்கியப்பட ஓர் ஒப்புதல் போல் இந்தச் சடங்கு உங்கள் சம்மதத்துடன் நடக் கணும்னு நான் ஆசைப்படுகிறேன். இம் மாதிரியான என்னுடைய தீர்மானம் எப்படி உங்க மனசை அதிர்ச்சிக்கு உட்படுத்தியிருக் குமோ, அதே போல் சாயிநாதத்தின் பெற்

நாம்





''உலகிலேயே பெரிய மலை பரவலில்லை. இந்தியாவின் தலைநகரம் சென்னை. உலகத்திலேயே பெரிய பாலைவனம் பல்லாவரம். ஐ. நா. சபை அண்ணா சாலையிலிருக்கிறது.....''

''டேய்! இதென்ன! தப்புத் தப்பாகப் படிக்கிறே?''

''பாட புத்தகக் குழுவின் பூகோளப் பிரிவில் சேரப் பழகுகிறேன்.....''

றோரையும் இது அதிர்ச்சிக்கு உட்படுத்திக் கொண்டிருக்கும். அவரும் அவர் பெற்றோரிடம் இதைத்தான் விளக்கிக் கொண்டிருப்பார். நமது சமூகத்தினிடையே நமது மத வழிபாட்டு முறைகளைச் சரிப்படுத்தும் சநாதனியைத்தான் நம்மை வழிகாட்டி அழைத்துச் செல்லும் ''சுப்ரீம் கமாண்டர்''—சர்வ வல்லமை பெற்ற ஓர் அதிகாரி என்று மதிக்கிறோம். அந்த மதிப்பை நானும் வரவேற்கிறேன். அத்தகைய நெறியாளர்களின் வழி ஒரு புனிதமான வழி என்பதை அவரும் மறுக்கவில்லை. அதை அவமதிக்கவும் இல்லை. ஆனால், இன்றைய சூழ்நிலையை மனத்தில் கொண்டு இதைமேற்கொண்டால் ஒரு சகஜ சூழ்நிலையை நாமாகக் கொண்டு வர முடியாதா என்பது தான் என் கேள்வி. புரட்சிகரமான மாறுதல் வேண்டும் என்பதை நாங்கள் ஏற்கவில்லை. இதற்குப் புரட்சியே தேவையில்லை. அங்கீகரிக்கப்பட்ட ஒரு வட்டத்துக்குள் மற்றொரு உள் வட்டமாகச் செயல்படுவதில் தவறில்லையே. அதை ஒரு விசாலமான எண்ணத்தின் அடிப்படையில் ஏற்கக் கூடாதா?''

ராகவன் நகைத்தார். அந்த நகைப்பில் இருந்த பரிகாசத்தின் தன்மை சீதாவுக்கு எரிச்சலை ஊட்டியது.

''முடிவாக நீ என்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாய்?''

''உங்களிடமிருந்து மட்டுமல்ல. உங்களைப் போன்ற பெரியவர்களிடமிருந்து சாஸ்திர சம்மதத்தை எதிர்பார்க்கிறேன்.''

''நான் யார் அந்தச் சம்மதம் தர? அதைப் பின்தொடர மட்டும்தான் எனக்கு ஆக்கினை. இன்றைய விஞ்ஞான ரீதியிலான வளர்ச்சிகளாலும், பொருளாதார இடர்ப்பாடுகளாலும் நமது சநாதன தர்மங்கள் சிதறுவதை நானும் உணர்கிறேன். என்றாலும் அதை நம் சௌகரியத்துக்காகக் கொஞ்சம் மாற்றிக் கொள்வோமே என்று நான் எண்ணியதில்லை. நமது சௌகரியத்துக்காக இவ் விஷயத்தில் சுயநலமாக நடந்துகொள்வதை நான் விரும்பவில்லை. எவ்வளவுதான் நான் வெளி உலகுக்கு ஒரு நாகரிகத்தின் சின்னமாகக் காட்சி தந்தாலும் அந்தரங்கத்தில் நான் ஒரு வைஷ்ணவன் என்கிற கம்பீரமான உணர்வுடனேயே இருக்கிறேன்.''

சீதா மௌனமாக எழுந்து விட்டாள்.

சந்தியா கால ஜபத்தை முடித்து விட்டு, வெளித் திண்ணையில் உடம்பைப் போர்த்திக் கொண்டு அமர்ந்திருந்தார் சபேசன். வாய் ஆனந்த லஹரியை முணு முணுக்க, பார்வை தெருவில் லயித்திருந்தது.

அடிக்கடி அவர் கண்கள் நிலைவாயிற்படி பக்கம் திரும்பியது. ஆழ்ந்த சிந்தனையின் லயிட்'ı.

''சாயிநாத்!'' வாயிற்படி உட்பக்கம் திரும்பி அழைத்தார்.

சாயிநாத் வந்து நின்றான்.

சில கணங்கள் அவனையே பார்த்தார் அவர். உதடுகள் தெளிய முறுவலித்தார்.

''அப்புறம்?''

சாயிநாத் பதில் கூறவில்லை.

''எனக்கு இதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை.... எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்பதால் உனக்கு நான் பரிபூரண அநுமதி தந்து விட்டதாக நினைக்க வேண்டாம். இதற்கெல்லாம் அநுமதி தர நமக்கு அருகதையே கிடையாது. ஒரு முடிவான எண்ணத்தின் பேரிலேயே நீங்க திடமாக நிற்கிறபோது நான் குறுக்கே வர மாட்டேன். என்று அதைத் தடை செய்யற நோக்கம் எனக்கில்லே. உங்களுடைய மனம், உங்களுடைய சிந்தனை, உங்களுடைய முடிவுகள் எல்லாமே உங்களுடைய எதிர்கால நன்மையைக் கருத்திலே கொண்டதாக இருக்கணும்னு நாங்க நினைக்கிற மாதிரி நீங்களும் நினைத்திருப்பீர்கள். அதோட பலாபலன்கள் பற்றியும், அதன் எதிர்விளைவுகள் பற்றியும் நீங்களும் சிந்தனை பண்ணித்தானே இந்த முடிவுக்கு வந்திருப்பேள். இதற்கு மேலே என் சம்பிரதாயமான அநுமதி எதுக்கு?''

''அப்படி இல்லேப்பா. உங்களுடைய அபிப்பிராயங்களை மீறணும்கிற எண்ணமே நீங்க இதைத் தடுக்கிறபோதுதானே வரப் போறது!''

''சாயிநாத்! நமக்கென்று ஓர் எல்லை இருக்கிறது. நானோ அல்லது நீயோ போட்ட கோடு இல்லை அது. நமக்கு முன்னாலேயே இருந்தவா போட்டு வைச்சுட்டுப் போன கோடு. இதை மீறுவதற்குப் பலமோ, பலாத்காரமோ நிச்சயமாகத் தேவையில்லை. இந்த எல்லைக்குள்ளே நாம் நிற்கிறோம்னு, நமக்குள் நாமே உள் இயக்கமா வளர்த்துண்டு இருக்கிற கட்டுப்பாடுதான் காரணம். இதை எதிர்த்துக் கொண்டு போற போதுதான் கொஞ்சம் நிதானமாப் போனால் நல்லதுன்னு நான் நினைக்கிறேன்.''

''நீங்க இப்படிப் பேசினா எப்படியப்பா? முடியும், முடியாது என்று சொல்லிவிட்டால் பரவாயில்லை.''

சபேசன் மீண்டும் மௌனமானார். குடும்பத்தில் மூத்த பிள்ளை. குறைவான வருவாயில் உத்தியோகம் பார்த்து ஓய்வு பெறக் காத்திருக்கும் வாழ்க்கை நிலை. இரண்டு பெண்களுக்குக் கடன் பட்டுக் கல்யாணம் செய்து கொஞ்சம் கொஞ்சமாகக் கடனிலிருந்து விடுபடும் தருணம். ஒரு சிறு 'சரிக்கட்டலை' அங்கீகரிக்க மறுப்பதன் மூலம் ஏற்படப் போகும் விபரீதங்களை ஒரு முறைக்குப் பல முறைகள் சிந்தனை செய்து பார்த்தார். "உன் இஷ்டப்படியே செய். அம்மாவைச் சமாதானம் செய்து திருப்தி அடையச் செய்வது உன் பொறுப்பு" என்றவர், நிதானமாக மீண்டும் விட்ட இடத்திலிருந்து ஆனந்தலஹரியைச் சொல்லத் தொடங்கி விட்டார்.

உள் ஊடுருவலாகத் தன் பிரச்சினை எல்லோருடைய மனத்திலும் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான்கு நாட்களாக வீட்டில் நிலவிய மௌனத்திலிருந்து உணர்ந்தாள் சீதா. தாயாரும் வீட்டில் உண்டாகியிருக்கும் புதிய எண்ணங்களின் மாறுதல் போக்கினை எப்படிச் சமாளிப்பது என்று புரியாமல் விழித்தாள். தாயாரைப் பொறுத்த வரையில் அவள் எதற்கும் குறுக்கே வருபவளாகத் தோன்றவில்லை. அத்வைதியாக இருந்தால் என்ன? அதுவும் வைதிக மதம்தானே! இதில் என்ன பாகுபாடு வேண்டியிருக்கிறது? அவள் விருப்பம் எதுவோ, அதன்படி அவளுக்கு அனுமதியும் ஆசியும் தரும்படி கணவனிடம் கேட்டாள். அவள் ஒரு கல்லூரியில் பிரின்ஸிபால். காந்தியவாதி. நல்ல முற்போக்கான நோக்கங்களும் கொண்டவள். தம் மனைவியே இப்படிக் கூறியவுடன் ராகவன் சற்றே பரபரப்பு அடைந்தார். எனினும், அதிர்ச்சி அடையவில்லை. அவளுடைய சமாதானத்தில் ஓர் இடம் அவருக்குத் திருப்தி அளிப்பதாக இருந்தது. இதை இந்தக் கோணத்தில் அவர் சிந்திக்கவே இல்லை.

'அத்வைதியாக இருந்தால் என்ன! அதுவும் வைதிக மதம்தானே?'

மனைவியின் இந்தக் கருத்து அவரை அதிகம் சிந்திக்க வைத்து விட்டது. இந்தச் சூழ்நிலையில்தான் அவர்கள் யாரும் எதிர்பார்க்காத அந்தக் கடிதம் வந்தது.

நியூயார்க்கிலிருந்து அவருடைய இரண்டாவது மகன் நரசிம்மன் அதை எழுதியிருந்தான். கடிதம் மட்டுமா? ஜோடியாக எடுத்துக்கொண்ட போட்டோவும்தான் அத்துடன் இருந்தது.

"....இவள் எனக்குத் தலைமை அதிகாரியாக இருக்கும் கே. எஸ். சர்மாவின் பெண் கௌசல்யா. கே. எஸ். சர்மாவை உங்களுக்குத் தெரிந்திருக்கும். உங்களைத் தெரியும் என்று அவர் சொன்னார். கௌசல்யா இங்கே ஒரு குழந்தைகள் புத்தக வெளியீட்டு நிறுவனம் ஒன்றில் உதவியாளராகப் பணி புரிகிறாள். எங்கள் திருமணம் இங்கே புதிதாகக் கட்டப் பட்டிருக்கும் விக்னேசுவரர் ஆலயத்தில் வைதிக முறைப்படி நடந்தேறியது. அண்ணா ரங்கராஜனும், மதனியும் உடனிருந்து நடத்தி வைத்தார்கள். இதன் மற்ற விவரங்களை அண்ணா உங்களுக்கு எழுதுவார். உங்களுடைய ஆசிகளையும், தாயாரின் ஆசிகளையும் மற்றும் நம் குடும்பத்தில் உள்ளோரின் வாழ்த்துக்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்."

கூடவே, அங்கேயே இருக்கும் மூத்த மகன் ரங்கராஜனின் நீண்ட கடிதம் ஒன்று இருந்தது. அதில் நரசிம்மன் செய்து கொண்ட இந்தத் திருமணத்தைப் பற்றியும் அதற்கான நியாயத் தன்மைகள் பற்றியும், தேச தேசங்களைத் தாண்டி இங்கே வந்திருக்கும்போது, நம்மிடையே மாற்றிக் கொள்ள வேண்டிய சில முக்கிய அடிப்படைகள் பற்றியும் வலியுறுத்தி யிருந்தான். லோகாயதத்திலும், லௌகிக விஷயத்திலும், சில சௌகரியங்களை அநுசரித்து ஏற்றுக்கொண்டு விட்ட மாறுதல்களைச் சுட்டிக் காட்டி, நரசிம்மன் மேற்கொண்ட காரியத்துக்கான நியாயத் தன்மைகளைக் கொஞ்சம் அழுத்தமான தொனியில் எழுதியிருந்தான்.

"**உ**ன்னோட அண்ணா கடிதாக போட்டிருக்கான், படித்துப் பார்" என்று மகளிடம் அக்கடிதத்தையும், நரசிம்மன் அனுப்பிய போட்டோவையும் கொடுத்துவிட்டு, அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றார் ராகவன்.

அப்பொழுதுதான் அலுவலகத்திலிருந்து திரும்பியவள் தந்தையின் உற்சாகத் தன்மையால் கவரப்பட்ட நிலையில் கடிதங்களுடன் சோபாவில் அமர்ந்தாள்.

உங்களுக்கு வேலை வேண்டுமா?

[நீங்கள் தமிழ் நாடு அரசாங்கத்தில் ஏதாவது வேலைக்கு மனுப் போட்டிருக்கிறீர்களா? ஏற்கனவேயே இது போன்ற வேலைகளுக்கான தேர்வுகள் நன்றாக எழுதியும் நேர்முகத் தேர்வில் (இன்டர்வ்யூ) கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாடித் தோல்வியடைந்திருக்கிறீர்களா? அஞ்சேல்! உங்கள் 'ஐ.க்யூ' பாராட்டுக்குரியதாக இருந்தும், 'ஷீத் ஆஸ்தான் இயர் புக்' போன்ற பல நூல்களைக் கரைத்துக் குடித்தும், நவீன தொழில் — விஞ்ஞான சாதனைகளையெல்லாம் தலைகீழ்ப் பாடமாக அறிந்திருந்தும் உங்களுக்குத் தோல்வி கிட்டியதில் வியப்பில்லை! இளைஞர்களே, யுவதிகளே! தமிழ்நாடு அரசு சம்பந்தப்பட்ட வேலைகளுக்கான நேர்முகத் தேர்வுகளில் எம்மாதிரிக் கேள்விகள் கேட்பார்கள் என்று உங்களால் ஊகிக்க முடியாததாலன்றோ உங்களுக்கு ஏமாற்றமும் தோல்வியும் கிட்டின? கவலையை விடுங்கள்! இனி வெற்றி உங்களுக்கே! இதோ — கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்வி—பதில்களை உருப்போடுங்கள். அண்மையில் மின் வாரியக் கணக்காயர் பதவிகளுக்கான நேர்முகத் தேர்வில் கேட்கப்பட்ட சில மணியான கேள்விகளை முன்மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்டவை இவை.]

கேள்வி: தமிழ்நாட்டில் தோன்றியுள்ள மூன்று முத்துக்களைக் குறிப்பிடவும்.

விடை: திரு மதுரை முத்து, திரு மு. க. முத்து, சத்தியவாணி முத்து.

கே: மு. க. முத்து நடித்த முதல் திரைப்படம் யாது?

வி: பிள்ளையோ பிள்ளை.

கே: கல்லக்குடி, திருக்குவளை - இவ்வூர்களின் சிறப்புக்களைக் கூறு.

வி: கல்லக்குடி என்பது திருச்சி மாவட்டத்தில் உள்ள இடம். இதன் பூர்வாசிரமப் பெயர் டால்மியாபுரம் என்பது. முதல்வரின் தலைமையில் இங்கு நிகழ்ந்த மாபெரும் பெயர்ப் போராட்டம் வரலாற்றில் இடம் பெறத் தக்கது. தண்டி, சம்பாரான் போன்றவைகளுக்கு நிகரான பெருமை பெற்றுத் திகழும் ஸ்தலம். திருக்குவளை, திருவாரூர் அருகிலுள்ள சிற்றூர். மாண்புமிகு முதலமைச்சர் அவதரித்த இடம்.

கே: இறைவனை எங்கே காணலாம்?

வி: ஏழையின் சிரிப்பிலே.

கே: மறைந்து வரும் மலர் மாலையின் இடத்தைப் பெற்றுள்ளது யாது?

வி: கைத்தறித் துண்டு. சிவப்பு, கருப்பு கரை போடப்பட்டிருக்கும். அகலக் குறைவாயினும் தரையில் விழுந்து புரளும் அளவுக்கு நீளமுள்ளது.

கே: தமிழ் நாட்டின் முதலமைச்சர் யார்?

வி: திரு மு. கருணாநிதி.

கே: இப்படியா பெயரை மட்டும் சொல்வது?

வி: கலைஞர் திரு மு. கருணாநிதி.

கே: அவருடைய பட்டத்தையும் சேர்த்துச் சொல்லவும்.

வி: டாக்டர் கலைஞர் திரு மு. கருணாநிதி.

கே: அவருடைய வேறு சிறப்புக்களையும் சேர்த்துக் கூற இயலுமா?

வி: டாக்டர் கலைஞர் உலக மகா கவிஞர் திரு மு. கருணாநிதி.

கே: ஏதோ ஒன்று விட்டுப் போயிருக்கிறதே?

வி: டாக்டர் கலைஞர், உலக மகாகவிஞர் மாண்புமிகு முதல்வர் திரு மு. கருணாநிதி.

கே: இந்தி வேண்டாம், அதனை ஏற்கமாட்டோம் என்று சொல்லும் ஒரே அரசியல் கட்சி எதில் பிறந்தது?

வி: கண்ணீரில் பிறந்தது.

கே: மக்களுக்கு ரூபாய்க்கு மூன்று யூனிட் மின்சாரம் வழங்க வேண்டுமானால் தமிழ் நாட்டிற்கு என்ன தேவைப்படும்?

வி: மாநில சுயாட்சி.

கே: 'மன்றம்' என்ற தமிழ் ஏட்டினைத் துவக்கியவர் யார்?

வி: கல்வி அமைச்சர் நாவலர்.

கே: அது மறு பிறவி எடுத்தது எப்போது?

வி: அறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு ஒரு வாரம் தாற்காலிக முதல் அமைச்சராக இருந்து விலகிய நாவலர், கட்சிப் பணியாற்ற வேண்டி அதனை மீண்டும் துவக்கினார்.









கே: சபாநாயகர் திரு மதியழகன் உணவு அமைச்சர் பதவி ஏற்குமுன் எவ்வளவு முறை சிறை சென்றுள்ளார்?

வி: ஒன்பது முறைகள்.

கே: அவர் முதன் முதலில் எந்த நாடகத்தில் நடித்தார் ?

வி: அறிஞர் அண்ணாவின் 'சந்திரோதயம்' நாடகத்தில் மடாதிபதியாக நடித்தார்.

கே: அமைச்சர் சத்தியவாணிமுத்து எழுதிய பிரபல நூல் எது ?

வி: பிரெஞ்சு நாட்டு வீராங்கனை 'ஜோன் ஆஃப் ஆர்க்'இன் வாழ்க்கையை விளக்கும் 'எரிக்கப்பட்டாள்'.

கே: முதலமைச்சர் முரசொலி ஏட்டினைத் துண்டு வெளியீடாகத் திருவாரூரில் துவக்கிய போது அவர் எந்தப் புனைபெயரில் எழுதினார்?

வி: சேரன்.

கே: தமது முதல் படத்திலேயே இரட்டை வேடம் பூண்டு நடித்த நட்சத்திரம்.........?

வி: திரு மு. க. முத்து. படம்: 'பிள்ளையோ பிள்ளை.'

கே: வெங்காயம், கண்ணீர்த் துளி - இரண்டுக்கும் உள்ள அரசியல் பொருத்தம் கூறவும்.

வி: பெரியாரின் சொற்பொழிவுகளில் அடிக்கடி கையாளப்படுவது 'வெங்காயம்'. 'கண்ணீர்த் துளிகள்' என்று குறிப்பிட்டு அவர் கேலி செய்த அரசியல் கட்சி இன்று ஆளும் கட்சியாயுள்ளதுடன் அவரது ஆசியையும் ஆதரவையும் பெற்றிருக்கிறது.

கே: டாக்டர் கலைஞரின் பிறந்த நாள் யாது?

வி: ஜூன் 3ந் தேதி.

கே: அதன் தனிச் சிறப்பு என்ன ?

வி: கண் பார்வை இழந்தோர்க்குச் சிகிச்சை முகாம்கள் அமைத்து ஒளியும் மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படுவது இப் பெருநாளினை யொட்டியே.

கே: தமிழ் நாடு அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளவர்களில் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர் யார் ? அவர் எங்கு பிறந்தார் ?

வி: பாரிஸ்டர் பட்டம் பெற்ற ஒரே அமைச்சர் திரு சி. பா. ஆதித்தனார். அவர் பிறந்த ஊர் ஸ்ரீவைகுண்டம் என்பது தெரிந்ததே.

கே: நாவலர் எழுதியுள்ள சில நூல்களைக் குறிப்பிட முடியுமா?

வி: சமுதாய விடுதலை, மூட நம்பிக்கை.

கே: கலைஞர் முதலமைச்சரான பிறகு தமிழ் நாட்டில் நிகழ்ந்த வரலாறு காணாத சாதனைகள் மூன்றினைக் குறிப்பிடவும்.

வி: (அ) கபாலீசுவரர் குளத்தில் முதலமைச்சர் தூர் எடுத்தது (ஆ) திருவாரூர்த் தேரை ஓட்டியது (இ) பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி திரட்டியது.

கே: 'ஏ, தாழ்ந்த தமிழகமே!' 'வந்தாரை வாழ வைக்கும் தமிழ் நாடே!' இவை இடம் பெற்றது எந்தப் படத்தில்?

வி: முதல்வர் எழுதிய 'பராசக்தி'யில்.

கே: முதலமைச்சருக்கு அதிகம் பிடிக்காதது எது? பிடித்தமானது எது ?

வி: இனிப்பு பிடிக்காதது. அதிகம் பிடித்தமானது முருங்கைக்காய்க் குழம்பு.

கே: இதற்கு என்ன ஆதாரம்?

வி: அவரே ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

தொகுப்பு: 'பா'







பூட்ஸ் வழங்கிடும் சொராஜ-இருமல் வரும்போது உண்மையிலேயே இதமளித்துச் செயலாற்றும் நோஸ்கபின் அடங்கிய இருமல் லாஸஞ்ஜ்(மாத்திரை)



CMBC-43-172-Tam.

எட்டு மாடிக் கட்டிடம்!



எட்டு மாடிக் கட்டிடத்தில்
ஏறி நிற்கிறேன்.
இங்கிருந்தே சென்னை முழுவதும்
நன்கு பார்க்கிறேன்.

கற்ப காம்பாள் கோயில் அதோ
எனக்குத் தெரியுது
கடற் கரையில் சின்னச் சின்ன
உருவம் தெரியுது.

கோட்டை முன்னால் கம்பம் ஒன்றில்
கொடி பறக்குது
கூவம் ஆறு குறுக்கும் நெடுக்கும்
வளைந்து செல்லுது.

தலையில் வகிடு எடுத்த தைப்போல்
சாலை தெரியுது
தவழும் குழந்தை போல மோட்டார்
வண்டி நகருது.

நிறையக் கப்பல் துறைமுகத்தில்
வந்து நிற்குது
நிமிர்ந்து நிற்கும் கோபுரங்கள்
எங்கும் தெரியுது.

உயர்ந்த கூண்டு நாலு புறமும்
மணியைக் காட்டுது
உச்சியிலே சிலுவை கூட
நன்கு தெரியுது.

புகையில் லாத ரயிலும் ஊரில்
புகுந்து ஓடுது
பொம்மை ரயில் போலே அதுவும்
எனக்குத் தோணுது.

மரங்க ளெல்லாம் வீடு களை
மறைத்து நிற்குது
மாமா வீடு எங்கே? எங்கே?
தேடிப் பார்க்கிறேன்!

அழ. வள்ளியப்பா



டாக்டர் ஜகதா காரைப் போர்ட்டிகோவில் நிறுத்திவிட்டு, பெட்டி,ஸ்டெதாஸ்கோப்புடன் இறங்கினாள். திண்ணையில் ஜபமாலையுடன், தூணில் சாய்ந்தவளாய் உட்கார்ந்திருந்த பாட்டி எழுந்திருந்தாள்.

''இன்னிக்கு என்ன கதைக்குப் போகலியா?'' என்று கேட்டுக் கொண்டே ஜகதா படி ஏறினாள்.

''போயிருந்தேனே... சீதை புலம்பு புலம்புன்னு புலம்பறா... ராட்சசிகள் அவளைச் சுத்திண்டு வதை வதைன்னு வதைக்கிறா... எப்படா, ஸ்வாமி ராமச்சந்திரமூர்த்தியிடம் போவோம்னு பிராட்டி கண்ணீர் உருக்கிறா... எனக்கு அழுகையே வந்துடுத்து...''

''சரி... மணி பத்தாகப் போகிறது. என்ன பண்ணியிருக்கே?''

''இட்டிலி மாவு பாக்கி இருந்தது. ஊத்தப்பமாப் பண்ணினேன். உனக்குப் பிடிக்குமேன்னு வெங்காயச் சட்டினியும் அரைச்சிருக்கேன். சாயங்காலத் தபாலிலே நீ போனதும் அஞ்சாறு கடிதாசுகள் வந்தன.''

''பிரிஜ்ஜிலிருந்து தயிரை எடுத்து வை... எனக்கு ரொம்பக் களைப்பாக இருக்கு...''

களைப்புடன் ஜகதா அவசரமாகத் தனது அறைக்கு ஓட, பாட்டி நிதானமாகச் சமையற்கட்டை நோக்கி நடந்தாள்.

பாட்டி டீப்பாயின் மேல் வைத்த அந்த 'அஞ்சாறு' கடிதங்களை எடுத்துப் பார்க்கிற போது ஜகதாவுக்கு அலுப்புத் தட்டியது. இந்த அலுப்பு, வந்திருப்பது எல்லாம் வெறும் புக்போஸ்டு, மருந்துக் கம்பெனிகளிடமிருந்து வந்திருப்பவை என்றா, அல்லது சமீப காலமாக அவள் மனத்தில் பிறந்திருக்கும், அவளுக்கே இனம் புரியாத வெறுப்பினாலா என்று அவளுக்குப் புரியவில்லை. இரண்டு நாளையில் முதல் தபாலில் வந்திருந்த கடிதத்தை எடுத்தாள். கல்யாணமான புதிதிலேயே கணவருடைய கடிதத்தை ஒரு தடவைக்கு மேல் படிக்காதவள், இப்போது அவருடைய கடிதத்தை எடுத்தாள்; பிரித்தாள்; படித்தாள்.

ஜகதா ஒரு நிமிடம் கண்களை மூடிக்கொண்டாள். இப்போது அவள் முன்னால் மதுரை தோன்றியது.

தல்லாகுளம். ஒரு தெரு. அதில் ஒரு வீடு. வீட்டின் மாடி. மாடியில் நீலகண்டனைத் தவிர யாரும் இல்லை. நீலகண்டன் கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கிறான். தலைமாட்டில் ஏதோ மாத்திரைகள், மருந்துகள். தர்மாமீட்டரும் வேறு இருக்கிறது. அவரே வைத்துக் கொண்ட வெந்நீர், பிளாஸ்கில் இருக்கிறது.

ஜகதா கண்களைத் திறந்தபோது, பாட்டி ஊத்தப்பத்தோடு நின்று கொண்டிருந்தாள்.

''பாட்டி...''

''என்ன?''

''எனக்கு ஒண்ணும் வேண்டாம்...''

''பன்னிரண்டு வருஷங்கள் பழகின தோஷத்தினாலே கேக்கறேன். கேக்கறது தப்புன்னு நீ நினைச்சால் நான் கேக்கவேயில்லைன்னு நீ நினைச்சு மறந்துடு...''

''என்ன வேணும் பாட்டி?''

''ரெண்டு மாசத்துக்கு அப்புறம் இன்னிக்குக் கார்த்தாலே உன் ஆம்படையானிடமிருந்து கடிதாசு வந்திருக்கு. அவன் என்ன எழுதியிருக்கான்? இந்த ஊருக்கு மாத்தல் கீத்தல் கிடைக்கிறதா?''

''அவர் என்ன சர்க்கார் உத்தியோகத்திலா இருக்கார்? மாத்தல் வாங்கிக்க... பிரைவேட் காலேஜ். தெரியுமோ இல்லையோ?....''

''ஏன் இத்தனை நாட்களா கடிதாசு போடலையாம்? ஒரு பொண்டாட்டி பட்டணத்திலே தன்னந் தனியா வாழறாளேன்னு கொஞ்சம் கூட அவனுக்கு நினைவு இல்லையே?''



பி.வி.ஆர்

இப்போது ஜகதா சிரித்தாள். சிரிப்பில் வெறுப்பு உதிர்ந்தது.

''நீ இப்படிச் சிரிக்க மழுப்பிடு. நான் சொல்றேன்னு தப்பா நினைக்கக்காதே ஜகதா! உன் ஆம்படையானுக்கு இரக்கக் குணம் போதாது. நீ டாக்டர். உன்னே நம்பி இந்த இடத்திலே ஆயிரம் பேர்கள் இருக்கிறார்கள். என்ன பெரிய வாத்தியார் வேலே? அவன் ஏன் அங்கே இருந்து உன்னே இங்கே வாழா வெட்டியாக்கணும்...?''

''சரி பாட்டி...! இப்போ நீ உன்னே போ. நீ சொல்றதையெல்லாம் நாளைக்குத் தபாலில் எழுதிப் போடறேன்...!''

''அவனே ஒரு வார்த்தை சொன்னால் உனக்குப் பொறுக்காதே...'' பாட்டி திரும்பிச் சென்றாள்.

பாட்டி சென்ற பிறகு அவள் சொன்ன அவ்வளவு வார்த்தைகளும் காதில் எதிரொலித்தன. பாட்டியின் வார்த்தைகள் உண்மைக்கு எவ்வளவு புறம்பானவை? இரக்க குணம் யாருக்குப் போதாது? அவளுக்கா? அவளுடைய புருஷன் நீலகண்டனுக்கா?

நீலகண்டன் அவ[illegible] வாழாவெட்டியாக வைக்கவில்லை. ஆ[illegible] அவளைத் தனி மரமாக நிறுத்தி வைத்து[illegible], தானும் வாழா வெட்டிக் கோலத்தில் நிற்கிறான்.

ஆனால் இதைப் பற்றி இனிமேல் நினைத்துப் பார்ப்பதிலோ அழுது தீர்ப்பதிலோ, அர்த்தமில்லை. இனிவிக் பெரிதாக வளர்ந்து விட்டது. இதை உதறுவது அவ்வளவு சுலபமில்லை. நீலகண்டனுக்கு இன்னும் ஓரிரு வருடங்களில் கல்லூரி பிரின்ஸிபால் பதவி கிடைத்து விடும். இந்தக் கட்டத்தில் அவராலும் வேலையை உதறிவிட்டு, வேறு வேலை தேடச் சென்னைக்கு வர முடியாது.

அவர்களுடைய தாம்பத்தியம் தண்டவாளம் போலத்தான். இணைய முடியாத இரு நேர்க்கோடுகள்.

ஆனால் இதற்கும் கண்டிப்பாக ஒரு முடிவு இருக்கிறது.



அதற்கு அவள் இன்னும் பதினெட்டு வருடங்கள் காத்திருக்க வேண்டும். அதன்பின் நீலகண்டன் ஓய்வு பெற்றுக் கொண்டு சென்னைக்கு வந்து விடுவார்.

திடீரென்று ஜகதாவுக்கு ஓர் உண்மை புலப்பட்டது.

நீலகண்டன் திரும்பி வரும்போது, பதினெட்டு வருடங்களுக்குப் பிறகு

அவருடைய வயது ஐம்பத்தெட்டாகி யிருக்கும். அவனுக்கு?

ஜகதாவுக்கு நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது. அவனுடைய ஐம்பத்திரண்டு வயதிலா நேர்க் கோடுகள் இணைய வேண்டும்? தாம்பத்தியம் என்ன ஊறுகாயா, பலகாலம் மூடிவைத்து விட்டு அனுபவிக்க?

சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போனபோது அவளுக்கு என்ன வயது? அசோக வனத்தில் அவள் பத்து மாதங்கள் தான் இருந்தாள். ஆனால் அதற்குள் எப்படித் துடித்துப் போனாள் அவள்! ஜகதா பதினெட்டு ஆண்டுகளைக் காலண்டர் காலண்டராக எண்ணிப் பார்க்கப் போகிறாளா?

ஜகதா, டாக்டர் ஜகதாவாக மாறுவதற்கு முன்பேயே கல்யாணமாகி விட்டது. தாயில்லாத பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுத்தால்தான் பெற்றவளின் ஆத்மாவுக்குச் சாந்தி கிடைக்கும் என்று அப்பா கண்டிப்பாக இருந்தார். படிப்பு முடிந்த



பின் கல்யாணத்துக்குத் தயார் என்று சொன்ன ஜகதா, நீலகண்டனைப் பார்த்த பிறகு மனத்தை மாற்றிக் கொண்டாள். நீலகண்டன் எம்.ஏ. பாஸ் செய்த பிறகு, இரண்டு வருடங்கள் அமெரிக்காவில் மேற்படிப்புப் படித்துவிட்டுச் சென்னைக்குத் திரும்பி யிருந்த காலம். மதுரையில் ஒரு கல்லூரியில் லெக்சரராக இருந்தான்.

ஜகதா சென்னையிலிருந்து லீவில் மதுரைக்கு வந்தாள். பெண் பார்க்க நீலகண்டன் வந்தான். ஜகதா தன் லட்சியத்தை விட்டுக் கொடுத்துவிட்டாள்.

அவள் டாக்டராகி மதுரைக்கு வந்தபோது சர்க்கார் உத்தியோகம் கிடைத்தது. தொழிலாளர்களுக்கான பிரத்தியேக ஆஸ்பத்திரியில் அவள் ஒரு டாக்டர் ஆனாள். அது மதுரையிலே இருந்திருந்தால் எவ்வளவோ சௌகரியமாக இருந்திருக்கும். ஆனால் அது திண்டுக்கல்லில் இருந்தது. தினம் மதுரையிலிருந்து ரயிலில் சென்று திரும்பி வருவது சாத்தியமில்லாமற் போயிற்று. காலையில் எட்டு மணிக்கு ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டுமானால் அவள் காலையில் நான்கு மணிக்கே

துரிதமாக. ஜாக்கிரதையாக. நிச்சயமாக.

எப்படி?

இப்போது இடையில் நிற்காதபடி ஒரு நகரத்திலிருந்து மற்றொரு நகரத்திற்கு நேராக எங்கள் லாரிகளைச் செலுத்துகிறோம். இந்த துரித சர்வீஸை எங்கள் வாடிக்கையாளர்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

ஏனெனில் இந்த முறையில் பார்சல்களை மேலும் துரிதமாக, ஜாக்கிரதையாகக் கொண்டு சேர்க்க முடிகிறது. இது போன்ற துரித சர்வீஸ்களை நாங்கள் மேலும் விரிவுபடுத்தி, பல நகரங்களை நேரிடையாக இணைத்து வருகிறோம்.

இந்த சர்வீஸை வியாபாரிகள் சமூகம் மிக மிக வரவேற்கிறது. ஏனெனில் வியாபாரத்திற்கான சாமான்களை ஜாக்கிரதையாக தடங்கலின்றி அடைவதால் அவர்கள் தேவையான அளவே ஸ்டாக் செய்கின்றனர். இதனால் அவர்கள் மூலதனத்தை அனாவசியமாக முடக்கத் தேவையில்லை.

ஓரிடத்திலிருந்து
மற்றொரு இடத்திற்கு
நேரிடை
பார்சல் சர்வீஸ்



இந்தச் சிறப்பான பணி ஸதர்ன் ரோட்வேஸினால் எப்படி முடிகிறதென்றால்,

- தனியார் துறையில் ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனமே மிகவும் பெரிய ஸ்தாபனம்.
- அவர்கள் தங்களுக்குச் சொந்தமான லாரிகளையே இயக்குகிறார்கள்.
- அவர்களின் பயிற்சி பெற்ற ஊழியர்கள், லாரி ஸ்தாபனத்தின் ஒவ்வொரு இயக்கத்தையும் தனித்தனியே கண்காணிக்கின்றனர்.
- அவர்களின் டிரைவர்கள், உடலியலையும், உளவியலையும் பொருத்து நடத்தும் பரிசோதனைகள், மற்றும் தூரத்தைப் பற்றி மதிப்பிடும் பரிசோதனைகள், கண் கால்களிடை கச்சித ஒத்துழைப்புக்கான பரிசோதனைகள் ஆகியவற்றிற்கு உட்பட்ட பிறகுதான் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.
- 130 லைசென்ட்டு ஒன்றுகளுக்கு சிப்பேர் மற்றும் பராமரிப்புக்கான வசதிகொண்ட தொழில் பட்டறைகள் அமைத்திருக்கிறார்கள்.

தென் இந்தியா முழுமையிலும் சரக்குகளை புக் செய்யும் ஆபீஸ்கள் பரவி உள்ளதால் மக்களிடை ஸதர்ன் ரோட்வேஸ் பெருநம்பிக்கை பெற்றிருக்கிறது.

உங்கள் நம்பிக்கைக்கு உரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ்
பிரைவேட் லிமிடெட்
(இது ஒரு டிவிஎஸ்
ஸ்தாபனம்)
மதுரை

எழுந்தாக வேண்டும். சாயங்காலம் ஏழு மணிக்கு ஆஸ்பத்திரியை மூடினாலும் அவன் எப்போது மதுரைக்குத் திரும்ப முடியும்?

நீலகண்டனின் ஆலோசனையின்படி அவன் தன் தகப்பனருடன் திண்டுக்கல்லிலேயே இருக்கலானான். தாம்பத்தியத்தின் ஆரம்பமே அதன் முடிவை உணர்த்துவது போல இருந்தது. இரண்டு வருடங்கள் ஓடின. சனி, ஞாயிறுகளில் நீலகண்டன் திண்டுக்கல்லுக்கு வந்து போனான்.

இந்த வாழ்க்கையும் ரொம்ப நாட்கள் ஓடவில்லை. ஜகதாவின் தகப்பனர் திடீரென்று காலமானார். அதைத் தொடர்ந்து ஜகதாவுக்குப் பழனிக்கு மாற்றலாகி விட்டது. முருகன் வேண்டுமானால் தந்தையிடம் கோபித்துக் கொண்டு தனியாக நிற்கலாம். அவள் எதற்கு நிற்க வேண்டும்?

ஜகதா சர்க்கார் வேலையை உதறிவிட்டு மதுரைக்கு வந்தாள். தாம்பத்தியம் தழைக்கும்போல் இருந்தது.. ஆனால் அதிர்ஷ்டமோ துரதிர்ஷ்டமோ, நீலகண்டன் 'ஹிந்து' பேப்பரில் ஒரு விளம்பரத்தைப் பார்த்தான். ஜகதாவிடமும் சொன்னான்.

'சென்னையில் அடையாற்றில் ஒரு பிரபல டாக்டரின் க்ளினிக். அந்த டாக்டரின் மரணத்துக்குப் பிறகு யாரும் இல்லாமல் தவிக்கிறது. அதை எடுத்து நடத்த வேண்டுமானால் குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் வேண்டும்.' நீலகண்டன் ஜகதாவை ஊக்கப்படுத்தினான். 'அவள் படித்த படிப்பு வீணாகக் கூடாது' என்றான். தன் கோயமுத்தூர் வீட்டையும், சத்தியமங்கலம் நிலத்தையும் விற்கத் திட்டமிட்டான். அவனுடைய திட்டத்தில் குடும்பம் இரண்டாவது.

விளையாட்டாகப் பன்னிரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. நீலகண்டன் விடுமுறைகளுக்குச் சென்னைக்கு வந்தான். ஆனால் அவனால் ஜகதாவுடன் இருக்கவோ அவளுடன் நேரம் கழிக்கவோ முடியவில்லை. மொத்தத்தில் தாம்பத்தியத்தில் உயிர் இல்லாமலே போய் விட்டது.

திடீரென்று போன் அலறியது.

திடுக்கிட்டு விழித்துக் கொண்ட ஜகதா எழுந்து விரைந்தாள், எடுத்தாள்.

''கற்பகத்துக்குத் திடீர்னு ரொம்ப ஜாஸ்தியா இருக்கு. நீங்க உடனே வரணும்.''

''இதோ வரேன்... நான் கார்த்தாலே கொடுத்த மாத்திரையை உடனே கொடுங்கள் !''

ஜகதா பெட்டி, ஸ்டெதாஸ்கோப்புடன் காரில் ஏறியபோது இரவு மணி இரண்டு. கற்பகத்தின் புருஷன் நாராயணசாமி பம்பாயில் இருக்கிறார். கற்பகத்துக்கு பம்பாய் பிடிக்கவில்லை. அவளுடைய அப்பா ஐ. ஸி. எஸ். ஒரே பெண். கோட்டை போன்ற வீடுகளில் இருந்து பழக்கப்பட்ட அவள், கணவர் பம்பாய்க்குச் சென்றபோது உடன் சென்றாள். சர்ச்கேட்டில் ஆறடுக்கு கட்டிடத்தில் இரண்டு அறைகள், ஒரு டைனிங், கிச்சன் என்ற தகுதிகளோடு இருக்கும் பகுதியில் அவ

சித்ராவின் சீரிய நடனம்



சித்ரா பத்மநாபன் கல்கத்தா சிவகலா சாலைப் பட்டதாரி. தென் ரயில்வே கமர்ஷியல் டெபுடி ஜெனரல் மானேஜரின் புதல்வி. பரதக் கலையில் ஆர்வம் கொண்டு, அதைத் தமது பத்தாவது வயதிலிருந்தே பயின்று, 1962ம் ஆண்டிலேயே மேடை ஏறியவர். அன்றிலிருந்து பல நிகழ்ச்சிகளை நடத்தி, கலை அநுபவத்துடன் மேடை அநுபவமும் நிரம்பப் பெற்றுள்ளார். இந்திய அரசாங்கத்தின் உதவி பெற்று, பரதக் கலையை இன்னும் விசேஷமாகப் பயின்று வருகிறார், வழுவூர் ராமையாப் பிள்ளையின் சிஷ்யையாக. மியூஸிக் அகாடெமி நிகழ்ச்சியில் இவருடைய எழில் தோற்றமும், அபிநய பாவங்களும், ஆடல்களின் விறுவிறுப்பும், இவர் ஒரு முழுமை பெற்ற கலைஞர் என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டின.

நாளுக்கு நாள் அவருடைய கலை வளர்ந்து கொண்டே செல்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். சித்ரா பத்மநாபன் மணம் புரிந்து கொண்டு சித்ரா விச்வேச்வரன் என்று தமது அந்தஸ்தை மாற்றிக் கொண்டாலும், புகுந்த வீடும் பரதக் கலைச் செல்வத்தைப் போற்றி வளர்ப்பதில் பற்றுள்ள குடும்பமாக அமைந்திருக்கிறது. மியூஸிக் அகாடெமி காரியதரிசி திரு ஆர். ரங்கநாதனின் மருமகள். சித்ராவின் கலை வளர்ச்சி தங்கு தடையின்றி நீடிக்கிறது.

னால் வாழ முடியவில்லை. கணவர் மீண்டும் சென்னைக்கு மாற்றலாகி வரும்வரை அப்பாவுடன் இருந்து விடுவது என்று தீர்மானித்துச் சென்னையிலேயே இருக்கிறாள். இப்போது அவளுக்கு உடம்புக்கு அதிகமாகி விட்டது.

திடீரென்று நீலகண்டனின் நினைவு வந்தது ஜகதாவுக்கு. அவருக்கு எப்படி இருக்கிறது? இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இந்த மாதிரி ஜுரம் வருகிறது. இரண்டு நாட்களுக்கு எழுந்திருக்க முடியாமல் அவர் படுத்துவிடுகிறார்.

அவருக்கு யார் துணை?

கார் புறப்பட்டது.

இப்போது அவளுக்கு வயது முப்பத்து நாலு. நீலகண்டனுக்கு நாற்பது. தாம்பத்தியத்தின் முடிவில்தான் அவர்களுடைய வாழ்க்கையே ஆரம்பிக்க வேண்டுமா? அவளுடைய ஐம்பத்திரண்டாவது வயதில் ஆரம்பிப்பதற்கு என்ன இருக்கிறது?

இப்போதே ஆரம்பிக்கலாமென்றால் யார் எதை விட்டுக் கொடுப்பது? ஜகதா குழம்பிப் போய்விட்டாள்.

காலையில் ஜகதா கற்பகத்தின் வீட்டுக்குப் போன் செய்தாள். அவள் கொடுத்த இன்செக்ஷன் வேலை செய்திருக்கிறது. அவளுடைய கணவன் பம்பாயிலிருந்து விமானத்தில் வந்திருக்கிறான். நல்ல செய்திகள்.

உப்புமா காப்பியுடன் பாட்டி வந்தாள்.

''ஜகதா! நீ தூங்கவே யில்லையோ?''

''ஏன்?''

''கண்ணுக்குக் கீழே ஒரே கறுப்பா இருக்கு. கண் வேறே சிவந்திருக்கு.''

''பாட்டி! நீ மதுரை பார்த்திருக்கிறாயா?''

''பெரியகுளத்தில் என் நாத்தனார் பிள்ளை இருந்தான். அப்போ ஒரு தடவை, ஒரே ஒரு தடவை மதுரைக்குப் போனேன். அது நடந்து நாற்பது வருஷங்களாயிடுத்து. உம், அங்கே இருந்து மீனாட்சியைத் தினம் தரிசிக்கக் கொடுத்து வைக்கணுமே!''

''நீ கொடுத்து வைச்சாலும் வைப்பே, பாட்டி!''

''என்ன சொல்லறே நீ ஜகதா?''

''என் கூடப் படிச்ச டாக்டர் ஒருத்தர் இருக்கார். அவர் என் கிளினிக்கை எடுத்து நடத்தத் தயாராக இருக்கார். இரண்டரை லட்சம் ரூபாய் தரேன் என்கிறார்.''

''நீ என்ன விலைக்கு வாங்கினே?''

''அதைப் பத்தி நீ கவலைப்படாதே பாட்டி. நீ நேத்து சொன்னியே, என் புருஷர்தான் என்னை வாழாவெட்டியாக வைச்சிருக்கார்னு ......அது......''

''ஆமாம், நான் சொன்னேன். இன்னும் சொல்றேன். நான் சொல்றதிலே என்ன தப்பு?''

சிறந்த நடிகர் மறைந்தார்

ஏந்தப் பாத்திரமானாலும் அதைத் தம் சொந்தப் பாத்திரமாக ஏற்றுத் திறமையாக நடிக்கும் ஆற்றல் பெற்றவர் டி. எஸ். பாலையா. தமிழில் நூற்றைம்பது படங்களுக்கு மேல் நடித்துத் திரையுலக ஜாம்பவானாக விளங்கிய டி. எஸ். பாலையா அண்மையில் மறைந்தது திரைப்பட ரசிகர்களுக்கு அதிர்ச்சி தரும் செய்தியாகும். இந்தச் சந்தர்ப்பத்தில்தான் அவருக்கு வயது அறுபது என்பதைப் பலர் அறிந்திருப்பார்கள். தேர்ந்த நகைச்சுவை நடிகரான அவர் 'ஸீரியஸ்' ரோல்களிலும் நிறையப் படங்களில் நடித்திருக்கிறார்.



சிறுவனாயிருந்தபோதே மதுரை ஒரிஜினல் பாய்ஸ் கம்பெனியில் நடிகனாகச் சேர்ந்து பல ஆண்டுகள் அக்கம்பெனி நாடகங்களில் எல்லாம் நடித்திருக்கிறார். மேடைப் புகழ் பெற்ற பாலையாவுக்கு முதன் முதலில் திரைப்பட 'சான்ஸ்' கிடைத்தது ''சதி லீலாவதி''யில் தான். அதிலிருந்து ஓய்வு ஒழிவு இல்லாமல் திரைப்படங்களில் நடித்துக் கொண்டே வந்தார். அவரது நடிப்பாற்றலால், அவர் ஏற்ற பாத்திரங்களுக்குத் தனி 'மவுசு' ஏற்பட்டு விடும். எந்தப் படத்திலும் அவர் நடிப்பு என்றுமே 'சோடை' போனதில்லை.

சமீப காலத்தில், பாலையா நாடகக் குழு ஒன்றை நிறுவி அதன் மூலம் சில புது நாடகங்களை அரங்கேற்றினார். நட்பை மதிக்கும் நல்ல மனிதர் பாலையா. அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும் லட்சோப லட்சம் திரைப்பட ரசிகர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்கள். ■

தலை தீபாவளி

நெல்லை ஆ. கணபதி



சொல்லவும் வெட்கமே ஆகுதடி! -- யாவும்
ஆகிதான் ஆகியே போகுதடி!
வெல்லம் பிசைந்திட்டு லட்டுவைப்பேன்! -- அவர்
விரல்களால் கன்னத்தை மீட்டி வைப்பார்!

காய்ச்சியே எண்ணெயைக் கொண்டுவைப்பேன் - அவர்
கண்களால் என்னையே கண்டுவைப்பார்!
'தேய்த்துத்தான் குளியுங்கள்!' என்றுசொல்வேன்!-அவர்
'தேவியின் தரிசனம்! நன்று!' என்பார்!

மைசூர்பா(கு) செய்துநான் இன்னவைப்பேன்! - அவர்
'மாடிக்கு வா!' என்பார்! உண்ணவைப்பார்!
நேசமாய்ப் பேசியே அழைத்திடுவார்! -- பேச்சை
நாளெல்லாம் தேனிலே குழைத்திடுவார்!

அல்வாவும் கிண்டியே எடுத்துவைப்பேன்! -- அவர்
ஆசையால் கண்டியே பிடித்திழுப்பார்!
எல்லாம் கனைவுடன் படைத்தளிப்பேன்! -- அவர்
ஏதோ ஒருசில கொறித்(து)உண்பார்!

''அவ்வளவும் தப்பு பாட்டி. நான்தான் அவரை வாழாவெட்டியா அங்கே வைக்கப் பிட்டு, நான் இங்கே கார், பங்களா, 'பிரிஜ்'னு வாழ்கிறேன். இந்த வாழ்க்கையில் அனுப விக்க நிறைய இருந்தாலும் ருசிக்கு ஒண்ணுமே இல்லே, பாட்டி!''

''அது எப்படி இருக்கும்? கட்டாந்தரை யிலே படுத்தாலும் பக்கத்திலே ஆம்படை யான் இல்லேன்னு அது என்ன வாழ்க்கை? சுகமோ, துக்கமோ இரண்டையும் சேர்ந்து அனுபவிக்கிறதுதானே தாம்பத்தியம்? நான் கணவனோடு இருந்தது சரியா எட்டு வரு ஷங்கள். ஆனா, அந்த எட்டு வருஷங்கள் எப் படிப்பட்ட காலம்ங்கிறே! சீதையை ராவணன் தூக்கிண்டு போறதுக்கு முன்னாலே ராமச் சந்திரமூர்த்தியும் ஜானகியும் இருந்தானே அப்படி இருந்த காலம். அது முடிஞ்சுது. கொஞ்ச நாட்கள் துக்கப்பட்டேன். அப்புறம் அவர் என் பக்கத்திலேயே இருக்கிற மாதிரி கற்பனை பண்ணிண்டேன். நாளாக நாளாக அவர் சரீரம் தான் என் பக்கத்திலே இல் லையே தவிர, அவருடைய ஆத்மா என் கூடவே இருக்க ஆரம்பித்து விட்டது. இதெல்லாம் நான் சொல்றப்போ உனக்குப் புரியாது. ஜகதா.. தாம்பத்தியத்தை ஆசை தீர அனுபவிச்சாத்தான் புரியும். நீ, பாவம்! அதுக்குக் கொடுத்து வைக்கல்லே.''

''அவர் விடுதலையாகி வருவதற்கு இன்னும் பதினெட்டு வருஷங்கள் இருக்கு பாட்டி! அதுவரையில் நான் இப்படியே இருக்க முடி யும்னு எனக்கு நம்பிக்கை யில்லே...''

''பதினெட்டு வருஷங்களா? இருக்கலாம். ஆனால் என்ன பிரயோசனம்? பச்சையா இருக் கிறபோது எதையும் அனுபவிக்கணும். அது சருகாக மாறினால் என்ன பிரயோசனம்?''

''எல்லாம் அலுத்துப் போறது. தாம்பத் தியம் ஒண்ணுதான் அலுக்காதுன்னு தோண றது. என்ன இருந்தாலும் எனக்கு அவர் துணை; அவருக்கு நான் துணை.''

''இந்த ஞானமும் விவேகமும் இப்பத்தான் வந்ததா? அப்படி வர என்ன நடந்துடுத்து?''

''வெளியிலே ஏதாவது பிரளயம் நடந்தால் தான் மனுஷன் மாறணுமா? அவனுக்குள் ளேயே ஒரு யுத்தமோ, பிரளயமோ நடந்து அவன் மாறக் கூடாதா?''

''உன் மனசிலே பிரளயமா?'' பாட்டி சிரித்தாள்.

''எனக்கும் மனசு உண்டு பாட்டி! அவரும் பட்டணத்துக்கு வந்துவிடுவார், வந்துவிடு வார் என்ற நம்பிக்கையிலே இங்கே வந்தேன். ஏன், அவர்தான் இங்கே இந்த கிளினிக்கை வாங்கிக் கொடுத்து என்னைப் பெரிய டாக்டு ராக்கி விருக்கிறார். இதுநாள் வரையில், மதுரைக்கே வந்துவிடு என்று என்கிட்டே சொன்னதில்லே. அப்படிச் சொல்லி விருந் தால் அவர் காரியங்களுக்காகச் சொல்லு கிறார்னு கூட நினைக்கத் தோணுமோ என் னமோ! அவர் செய்ததுக்கு எல்லாம் கைம் மாறு, நான் இப்போ மதுரைக்குத் திரும்பிப் போயிடலாம்னு தீர்மானித்திருக்கேன்!''

''மதுரையில் தினம் தினம் மீனாட்சியைத் தரிசனம் செய்யலாம்.''

''நம்ப ரெண்டு பேருடைய தெய்வங்களும் அங்கேதானே இருக்கு பாட்டி!''

''ஆனா நான் என் தெய்வத்தை எங்கே இருந்து வேண்டுமானாலும் தரிசிக்க முடியும்!''

''அது என்னாலே முடியாது. நான் ஒப்புக் கொள்ளுகிறேன், பாட்டி!''

ஜகதா காப்பியை எடுத்தாள். இனிமேல் அவள் பதினெட்டு வருடங்கள் காத்திருக்க வேண்டாம்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras 600031
Managing Editor: T. Sadasivam


ANNOUNCING!
The sale of
BLENDED AND FANCY FABRICS
made by mixing cotton and
GRASIM STAPLE FIBRE
from to-day at
AKASH-DEEP, SANDHURST BRIDGE, CHOWPATTY
• Attractive Fancy Dress material for ladies
• Immaculate Bush Shirtings for gents
• Decorative Tapestry and Curtain materials
• Priced cheaper than cotton fabrics
GWALIOR RAYON SILK MFG. (WVG.) CO. LTD., BIRLAGRAM, NAGDA (M.P.)

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon இலங்கையில் விலை 45 சதம் (தபால் செலவு தனி)



